பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 18 திங்கட்கிழமை (02.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:096

## போர் நிறுத்தம் செய்யவேண்டும் என்ற

# இந்தியாவின் கோரிக்கையை ஏற்க இலங்கை அரசாங்கம் மறுப்பு!

## புலிகள் ஆயுதங்களைப் போட்டால் மோதல் தானாகவே நிற்குமாம்

கொழும்பு, மார்ச்2

யுத்த நிறுத்தத்திற்கு விடுதலைப் புலிகள் விடுத்துள்ள சாதகமான சமிக்ஞையை ஏற்றுக் கொள்ளுமாறு இந்தியா விடுத்துள்ள வேண்டுகோளை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

"விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டு சரணடைய வேண்டுமெனச் சர்வதேச அளவில் விடுக்கப்படும் வேண்டுகோள்களை அவர்கள் ஏற்றால் மாத்திரமே, யுத்த நிறுத்தம் சாத்தியம்" என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன தெரிவித்துள்ளார்.

"விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போட்டால், மோதல் தானாகவே நின்று விடும்; தாக்குதலும் இயல்பாக நின்று விடும்." என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மோதல்களை நிறுத்துவதற்கு விடுதலைப்புலிகள் அளித்துள்ள சந்தர்ப்பத்தை இலங்கை அரசு பயன்படுத்த வேண்டுமென இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் சனிக்கிழமை கேட்டிருந்தார்.

இலங்கையில் நாளாந்தம் தீவிரமடைந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி இன்று நேபாளம் விஜயம்

கொழும்பு, மார்ச் 2

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டு நாள்கள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று நேபாளத்திற்குப் பயணமாகின்றார். அந்நாட்டின் ஜனாதிபதி டாக்டர் ராம் பரன் யாதேவின் அழைப்பை ஏற்று அவர் இப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார் எனத்

(16ஆம் பக்கம் பார்க்க)

வன்னியிலிருந்து கப்பல் மூலம் திருகோணமலைக்கு பெப்ரவரி 28 ஆம் திகதி அழைத்துச் செல்லப்பட்ட காயமடைந்தவர்களின் விவரம் 2ஆம் பக்கத்தில்.

## போர் நிறுத்தம் செய்யுமாறு இலங்கையை மீண்டும் வற்புறுத்தினார் பிரணாப் முகர்ஜி

புதுடில்லி, மார்ச் 2

அப்பாவிப் பொதுமக்கள் பலியாகாமல் தடுப்பதற்காக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ள போர் நிறுத்தத்தை வாய்ப்பாகப் பயன்படுத்தி இலங்கை அரசு போரை நிறுத்த முன்வரவேண்டும் - என்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று மீண்டும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

அத்துடன், இராணுவ வெற்றியின் மூலம் இனப்பிரச்சினைக்கு முழுமையான தீர்வுகாண முடியாது என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

டில்லியில் நேற்று நடைபெற்ற சர்வதேச மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதனைக் கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு-

விடுதலைப் புலிகள் இயக்கம், ஒரு

(16ஆம் பக்கம் பார்க்க)

## உதயன் ஆசிரியர் குறித்து ஊடகவியலாளரிடம் பொலிஸார் விசாரணை

கொழும்பு, மார்ச்2

'உதயன்' மற்றும் 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் ஆசிரியர் ந. வித்தியாதரன் தெமட்டக்கொடவிலுள்ள கொழும்பு குற்றவியல் பிரிவில் தொடர்ந்தும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

அவருடன் முன்னர் தொலைபேசியில் உரையாடியிருந்த ஊடகவியலாளர்கள் மற்றும் வேறு சிலரிடமும் பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரை மணி நேரத்துக்கும் அதிகமாக எரிந்து சேதம் விளைவிக்கும் எரிகுண்டுத் தாக்குதல் நேற்று

### புதுமாத்தளன் பகுதியில் 54 பேர் காயம்; மருந்தின்றி ஐவர் பலி

கொழும்பு, மார்ச்2

புதுமாத்தளன் பிரதேசத்தில் நேற்று நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் புதிய வகையான, வித்தியாசமான எரிகுண்டுகள் வந்து வீழ்ந்ததாக முல்லைத்தீவு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் துரைராஜா வரதராஜன் தெரிவித்துள்ளார்.

இத் தாக்குதலில் எரிகாயமடைந்த 54 பேர் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டதாகவும் 5 பேர் சத்திர சிகிச்சை அளிப்பதற்கான மருந்துப் பொருள்கள் இல்லாததால் சிகிச்சை அளிக்க முடியாத நிலையில் இறந்ததாகவும் டாக்டர் வரதராஜன் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் கூறினார்.

புதிய ரகமான குண்டுகள் அவை விழுந்த இடங்களில் அரைமணி நேரத்திற்குப் பின்னரும் எரிந்து கொண்டிருப்பதாக

(16ஆம் பக்கம் பார்க்க)

## வித்தியாதரனின் கைதைக் கண்டித்து சென்னையில் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்

சென்னை, மார்ச் 2

இலங்கையில் ஊடகங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களையும், அண்மையில் 'உதயன்' 'சுடர் ஒளி' பத்திரிகைகளின் ஆசிரியர் ந. வித்தியாதரன் கைது செய்யப்பட்டுள்ள முறைக்கும் கண்டனம் தெரிவித்து சென்னையில் சனிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தை அனைத்து பத்திரிகையாளர்கள் சங்கத்தின் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்தது

(16ஆம் பக்கம் பார்க்க)



## புதுக்குடியிருப்பைக் கைப்பற்ற படையினர் தொடர்ந்தும் சமர்

கொழும்பு மார்ச் 02

முல்லைத்தீவு - புக்குடியிருப்புப் பகுதிகளை நோக்கி முன்னேறிச் செல்லும் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து கடுஞ் சண்டை இடம்பெற்று வருகின்றது என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

இச்சண்டையில் இரு தரப்புகளுக்கும்

(16ஆம் பக்கம் பார்க்க)




Call 110

அவசர அம்புலன்ஸ் சேவைக்கு

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால், பயிற்சி பெற்ற சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு இச்சேவை வழங்கப்படுகிறது.

அழையுங்கள் 110

Trauma Secretariat UMCOR USAID MEDICAL TEAMS INTERNATIONAL World Health Organization


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முல்லையிலிருந்து காயப்பட்டு திருமலை வந்துள்ளோர் விவரம்

**வன்னியில் காயமடைந்த பொது மக்கள் 282 பேர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் கப்பலில் திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டு வரப் பட்டுள்ளனர்.**

**அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-**

ரி.நிதர்சனா (வயது - 9) மாங்குளம், ரி.கவிப்பிரியா (வயது -7 மாதம்) மாங்குளம்,ரி.சிவமணி (வயது - 30) மாங்குளம், ரி. சிவஜகம் (வயது-4) மாங்குளம், ரி.சிதுயா (வயது - 7) மாங்குளம், ரி.அன்ரியம்மா(வயது - 39) மாங்குளம், எஸ்.சுஜோதனன் (வயது - 14) வற்றாப்பளை, எஸ். வசந்தாதேவி (வயது - 40) வற்றாப்பளை, பி.சேதுநாயகி (வயது - 14) முரசுமோட்டை, கே.பஞ்சாட்சரம்(வயது-72)முரசுமோட்டை, எஸ்.குருசேனா (வயது-21 ) மாங்குளம்,சித்திரசேனா (வயது-25) மாங்குளம், ஏ.பொன்னுத்துரை (வயது - 95) மாங்குளம், கே.ரசீன்குமார் (வயது - 33) பூநகரி, ஏ.செல்வராசா (வயது - 58) விஸ்வமடு, சிவபாதசுந்தரம் (வயது - 34) பருத்தித்துறை, எஸ். செபஸ்டின் (வயது-68) விஸ்வமடு, கே. பிரபாகரன் (வயது-33)முரசுமோட்டை, பி.ஏப்ராம் (வயது-14) அக்கராயன்குளம், ஆர்.பத்மலோஜினி (வயது -23) பூநகரி, கே. அன்னபூரணம் (வயது - 56) பூநகரி, வி. தர்மலிங்கம் (வயது - 67)பொக்கணை, கே.நாகநாதினி (வயது-26) முல்லைத்தீவு, கே.விதுசா (வயது-2) முல்லைத் தீவு, என். நவநீதன் (வயது-26) வளயார்மடம், என். அன்பழகன் (வயது-34) முத்தையன் கட்டு,பி.செல்வமதி (வயது-33) முத்தையன்கட்டு, யு.குவிந்தன் (வயது-5) இரணைபளை, யு.சித்ரா(வயது-30) இரணைபளை, யு.தனுஷன் (வயது-8), இரணைபளை, பி.தவயோகராஜா(வயது-42) மாத்தளன், நவரத்னம் (வயது-75) கட்டக்காடு,எஸ். மாணிக்கராசா (வயது -72) முல்லைத்தீவு, என்.உமாந்தினி (வயது -25) கிளிநொச்சி, நவரசன் (வயது -3 மாதம்) கிளிநொச்சி,கே.மகேந்திரநாதன் கிளிநொச்சி, ஆர்.சொக்கலிங்கம்(வயது-64) பொக்கணை, ஆர்.ரோசம்மா (வயது-83)பொக்கனை, எஸ்.தம்பையா (வயது-64), என்.சண் முகநாதன் (வயது-35) வட்டக்கச்சி, எஸ்.சுப்ரமணியம் (வயது -71)பொக்கணை, எஸ். நசீதா, வி.ராதா (வயது -36) கிளிநொச்சி, வி.அஜந்தன் (வயது -5) கிளிநொச்சி, ஏ. மரியதாஸ் (வயது-74) வளையார்மடு, ரி.யோகராசா (வயது-40) பளை, ஆர்.வேலாயு தன், எஸ்.நடராசா, எஸ்.கோகிலதேவி(வயது-35) உருத்திரபுரம், எஸ்.கிஷாந்(வயது-9) உருத்திரபுரம், யசிதா,எஸ். பதிரதனன், என்.லட்சுமி, சி.சாருபஸ், எஸ்.குலசிங்கம், எஸ். சாந்தி (வயது -79) மல்லாவி, கே. பசுபதி (வயது -87) நெடுங்குளம், எஸ். ஜனசுந்தரி (வயது -55) கிளிநொச்சி, எஸ்.அழகராணி (வயது -40), ஆர். சுந்தரலிங்கம் (வயது -45) மல்லாவி, ஜெகதீஸ்வரி (வயது -33) பளை, சுஜந்தினி (வயது -5) பளை, ஜே. துசீபன் (வயது -2) பளை,என்.சுகந்திரன் (வயது -69) புதுக்குடியிருப்பு,எஸ். அலாய்ன் (வயது -5) புதுக்குடியிருப்பு, ஆர்.மகேஸ்வரி (வயது -67) வேரவில்,எஸ். ஜரின்சன் (வயது-16) புதுக்குடியிருப்பு, சகாயநாதன் (வயது-47) புதுக்குடியிருப்பு, ஆர். ரேனுகா (வயது-15) யாழ்ப்பாணம்,ஏ.அன்னலக்ஷ்மி (வயது -58) மாத்தளன்,டினோஜினி (வயது -8) இரணைப்பளை, ஆர். நிவதா (வயது-10)இரணைப்பளை, டி.ஜன்னம்மா (வயது -60) யாழ்ப்பாணம், ரி.ராஜேஸ்வரி (வயது-31) யாழ்ப்பாணம், ரி.டிலுக்சன் (வயது-1), ரி.ஜன்சியா (வயது -3), ஜே.ஜயபாலன் (வயது -33) பொக்கணை, பிரதிசியன்(வயது-2 மாதம்)பொக்கணை, சரஸ்வதி (வயது -36) கிளிநொச்சி, யு. சிவாஜினி (வயது -30) முல்லைத்தீவு, ஜே. சிவமணி (வயது -50) வளையார்மடம்,யு. கிஷாளன் (வயது -4) வளையார்மடம், மகிதா (வயது -4) பளை, சந்திரஉதயம் (வயது -54) பளை, எஸ்.மீனாட்சி (வயது-69) விஸ்வமடு, பி.சந்திரவதி(வயது-32) மாத்தளன், பி.அநுவோரரசன்(வயது-2) மாத்தளன்,பி.கயல்விழி(வயது-7) மாத்தளன், ஐ.மருதனார் (வயது-73) வன்னிக்குளம் கிளிநொச்சி,முனியாண்டி (வயது -71) சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம், வள்ளியம்மா (வயது -53) வள்ளிபுரம் புதுக்குடியிருப்பு, என். புவனேஸ்வரி(வயது -52 ) ஆனந்தநகர், கிளிநொச்சி, ஆர். மகேஸ்வரி (வயது -67 ) பூநகரி, கே. ராசையா (வயது -59)புதுக்குடியிருப்பு, ரி. சிவபாக்கியம் (வயது -77 ) அச்சுவேலி, ரி.சச்சிதானந்தம் (வயது -66)சாவகச்சேரி யாழ்ப்பாணம், வை.யோகரூபன்(வயது -15) மாங்குளம், எஸ்.சின்னராஜா (வயது -60) முரசுமோட்டை,கிளிநொச்சி, அருபு தம்பிநாதன் (வயது -73)இயங்குளம் மல்லாவி, ரி.திலகவதி (வயது -72) மல்லாவி, லெயனிஸா (வயது -8) வட்டக்குளம் , முள்ளியவளை, ரி.ஜெகதீஸ்வரி (வயது -39) கடவேலி, மல்லாவி, எஸ்.நாகலிங்கம் (வயது - 64), வை.யோகசுகந்தினி(வயது-10), மாங்குளம், யோகதர்ஷினி(வயது-12), மாங்குளம், எஸ் யோகநாதன் (வயது-51) மாங்குளம்,வை.யோகமதுசன்(வயது-5) மாங்குளம், எஸ். சிவதர்ஷினி (வயது-31) மூங்கிலாறு, எஸ். கலைக்குமரன் (வயது -8 மாதம்)மூங்கிலாறு, எஸ். சின்னத்துரை (வயது -81) கிளிநொச்சி, பி.ராசையா (வயது -65) திருவையாறு, கே.ரேஜா (வயது -33) மாத்தளன். வற்றாப்பளை, கே.பவிஷா (வயது - 4 மாதம்) மாத்தளன், ஆர்.குவின்ஷி (வயது-28),பூநகரி, எம்.சின்னமலர் (வயது-56),பூநகரி,யு.ஜெயந்தி (வயது - 36), கந்தபுரம்,யு.சருஷன் (வயது - 8 மாதம்), கந்தபுரம்,கே.ஸ்ரீரம்யா (வயது - 4), கந்தபுரம், ஜி.பிரதீபா (வயது - 26), மாங்குளம், கே.ஜெயந்தபத்மினி (வயது - 53), கிளிநொச்சி, பி.பொன்னம்பலம் (வயது-67),மாத்தளன், ஜே.லோகினிதேவி (வயது-25), பொக்கனை, என்.சரஸ்வதி (வயது-60), புதுக்குடியிருப்பு, மாது (வயது-8மாதம்), புதுக்குடியிருப்பு, ஜி.அந்தோனிப்பிள்ளை (வயது - 90), கிளிநொச்சி, ஏ.அபிராமி (வயது - 29), இணுவில், ஏ.கோபிஷன் (வயது - 4), இணுவில், ஏ.கோபிகா (வயது-2),இணுவில், பி.முருகேசன் (வயது-77), யாழ்ப்பாணம், ஜே.சரஸ்வதி (வயது-65),புதுக்குடியிருப்பு, எஸ்.வர்ஷிக்கா (வயது - 2), புதுக்குடியிருப்பு, எஸ். மேகலா (வயது-27), புதுக்குடியிருப்பு, கே.உமாதேவி (வயது-65), திருகோணமலை, ஆர்.கலியுகவரதன் (வயது- 68), திருகோணமலை, ரி.வைஷ்ணவி (வயது - 1 1/2), மாத்தளன், ரி.சங்கியா (வயது - 27), மாத்தளன், சொய்ட் (வயது - 77), தேவிபுரம், எஸ்.சூசைநாயகம் (வயது - 53), அடம்பன், தெய்வநாயகி (வயது -66), மாத்தளன், ஜே.சின்னப்பிள்ளை (வயது - 73), கிளிநொச்சி, எஸ்.வல்லசாமி (வயது - 71), மன்னார், எல்.நாகமணி (வயது - 68),யாழ்ப்பாணம், என்.குகனேஸ்வரி (வயது-29), முள்ளியவளை, எம்.ஜெஜூஷா (வயது - 2 1/2), முள்ளியவளை, ஜே.அன்னலக்சுமி (வயது-35), மாத்தளன், எஸ்.வித்யாலிங்கம் (வயது-92), பரந்தன், யு.குகன்யன் (வயது - 22), வவுனியா, ஜீ.சுதர்ஷா (வயது-11), கிளிநொச்சி, ஜீ.சித்ராதேவி (வயது-40), கிளிநொச்சி, ஜீ.லக்ஷிகா (வயது-7), கிளிநொச்சி, ரி.மீதோமியா (வயது-84), மன்னார், எம்.மரியதாஸ் (வயது - 78), மன்னார், அனுராஜா (வயது - 18), பூநகரி, எஸ்.செபமாலை (வயது - 69), மன்னார், அருளானந்தன் (வயது-85), மன்னார், ஆர்.யோகமலர்(வயது-58), உருத்திரபுரம், ஆர்.தவச்செல்வி (வயது - 33), உருத்திரபுரம், ரத்னசிங்கம் (வயது - 62), புதுக்குடியிருப்பு, எஸ்.கதிரேசன் (வயது -64), பூங்கேணி, எஸ்.சதிராதேவி (வயது - 65), பரந்தன், பி.ராசகணிகா (வயது - 52), இரணைப்பளை, பீ.பாலராஜினி (வயது -25), இரணைப்பளை, கே.ரீஷ்வரி (வயது - 60), முருகண்டி, எஸ்.தங்கமலர் (வயது - 44), துணுக் காய், முல்லைத்தீவு, பபிகா (வயது-14), துணுக்காய், முல்லைத் தீவு, எஸ்.ஸ்ரீகாந்தன் (வயது - 60), திருநகர், கிளிநொச்சி, வி.செல்விதி (வயது - 25), கோவிலடி, தம்பலகாமம், நிலோஷன் (வயது - 4 1/2), கோவிலடி, தம்பலகாமம், பி.அன்னப்பிள்ளை (வயது - 56), காத்தான்குளம், மன்னார், ஏ.சியாமளா (வயது - 27), மன்னார், அபிநயா (வயது 3 1/2), மன்னார், கே.மலர்மதி (வயது - 44), தம்பலகாமம், திருகோணமலை, விக்டோரியா (வயது - 47), குமணகுளம், அடம்பன், ரி.கவிரிக்ஷன் (வயது - 28), கிளிநொச்சி, எழிலன் (வயது - 1), கிளிநொச்சி, கே.சாந்தி (வயது - 29), [illegible] (வயது - 62), [illegible] மொஹிடீன், (வயது-72), வன்னிக்குளம், முல்லைத்தீவு, அஞ்சலிங்கம் (வயது - 80), ஆகடவேலி, கிளிநொச்சி, செபஸ்தியன் பிள்ளை (வயது - 50), வலையார்மடம், பாஷையூர், கருணாநிதி (வயது - 68), நல்லூர், யாழ்ப்பாணம், இந்திராணி (வயது - 80), வவுனியா, சி.சந்திரகுமாரி (வயது - 31), துணுக்காய், முல்லைத்தீவு, எஸ்.தனுஷா (வயது - 19), இரணைபாளை, சி.சந்திரசீலன் (வயது - 31), துணுக்காய், முல்லைத்தீவு, சி.சண்முகநாதன் (வயது - 50), இரணைபாளை, எஸ்.சறோஜினிதேவி (வயது - 49), இரணைபாளை, வி.பராசக்தி(வயது-70), சாவகச்சேரி, யாழ்ப்பாணம், ரி.தனுஷா (வயது - 33), உதயநகர், கிளிநொச்சி, தர்ஷிகா (வயது-5), உதயநகர், கிளிநொச்சி,திலோயன் (வயது - 3), உதயநகர், கிளிநொச்சி, கே.புஷ்பவதி (வயது-72), நல்லூர், பூநகரி, பி.நாகம்மா (வயது-63), இரணைபாளை, மகிலினி (வயது-5), கிளிநொச்சி, வி.ராதிகா (வயது - 40), ரி.செல்வகுமார் (வயது-21), கரவெட்டி, எஸ்.சஜீவா (வயது-7), கிளிநொச்சி, எஸ்.ஐங்கரன் (வயது-9), கிளிநொச்சி, எஸ்.அலோசெல்வி (வயது-2), கிளிநொச்சி, எஸ்.புஷ்பமலர் (வயது -34), கிளிநொச்சி, கே.சிவதேவி (வயது - 50), வி.பொன்னம்மா (வயது - 77), முல்லைத்தீவு, எம்.சரஸ்வதி (வயது - 64), கல்மடு, வி.முத்துப்பிள்ளை(வயது-63), கிளிநொச்சி, எஸ்.அன்னம்மா (வயது-77), காங்கேசன்துறை, ஜே.விஜயகுமாரி (வயது-41), முழங்காவில், ஜே.ஜெயமனோகரன் (வயது -41), முழங்காவில், ரி.மல்லிகாதேவி (வயது - 41), குமிழமுனை,கே.பரமேஸ்வரி (வயது -73), புத்தூர், எஸ்.அன்னம்மா (வயது 74), குமிழமுனை, ஜே.வள்ளியம்மா (வயது - 62), கிளிநொச்சி, கே.சேதுபிள்ளை (வயது - 79), நாகுளம், எஸ்.அன்னீசன் (வயது - 73), கிளிநொச்சி, எஸ்.கருப்பையா (வயது - 53), முல்லைத்தீவு, ஏ.புஷ்பலீலா (வயது -59), பளை, எஸ்.பெருமாள் (வயது-69), மாத்தளன், கே.பிரமவன் (வயது - 7), மல்லாவி, கே.தயாளினி (வயது-37), மல்லாவி, பாக்கியம் (வயது - 57), பளை, வி.சண்முகம் (வயது - 72), மன்னார், ரி.ஞானசேகரம் (வயது-49), புதுக்குடியிருப்பு, ராஜேஸ்வரி (வயது - 55), புதுக்குடியிருப்பு, எஸ்.வேதநாயகம் (வயது - 68), மன்னார், அம்பிகாவதி (வயது - 62), மன்னார், பத்திரகாளி (வயது - 58), மன்னார் வீதி, அடம்பன், சாயம்பூ (வயது -72), மன்னார் வீதி, அடம்பன், எஸ்.ராசதுரை (வயது-55), கல்லாறு,கிளிநொச்சி, ஏ . எ லி ச பெ த் (வயது- 74), முழங்காவில், எம்.ஆரோக்கியம் (வயது-72), முழங்காவில், தயானந்தராஜா (வயது-34), பல்லவராயன்குளம், நிலவன் (வயது- 11/2), கிளிநொச்சி, சாலினி (வயது-6), கிளிநொச்சி, சாரீஷன் (வயது - 3), பல்லவராயன்குளம், ஜெயாலினி (வயது-9), பல்லவராயன்குளம், நாகேஸ்வரன் (வயது - 8), இரணைபளை, கிருஷ்ணகுமார் (வயது-32), இரணைபளை, கே.தயாகரன் (வயது-30), பளை, என்.கண்மணி (வயது - 70), பொக்கனை, கே.பரமேஸ்வரி (வயது - 62), வவுனியா, ரி.பரமேஸ்வரி (வயது-65), முல்லைத்தீவு, ரி.கமலா (வயது-60), தண்ணீரூற்று, ரி.செல்லம்மா (வயது-70), பாரதிபுரம், ஆர்.கண்மணி (வயது - 63), வவுனியா, கே.ராசையா (வயது- 62), தர்மபுரம், வி.பிரீதீஷ் (வயது - 13), புதுக்குடியிருப்பு, எஸ்.விமலநாதன் (வயது - 41), புதுக்குடியிருப்பு, எஸ்.செல்வராசா (வயது - 65), மாத்தளன், என். யோகநாதன் (வயது - 65), யாழ்ப்பாணம், கே.முத்தம்மா (வயது - 63), கிளிநொச்சி, வி.பார்வதிப்பிள்ளை (வயது-70), யாழ்ப்பாணம், கித்திலகாவதி (வயது - 65), நெடுங்கேணி, எஸ்.சிவஞானம் (வயது - 60), நெடுங்கேணி, கே.கண்மணி (வயது - 49), அடம்பன், அவிஜின் பெரேரா (வயது - 74), அடம்பன், மன்னார், இந்திரேஸ்வரி (வயது - 60), கதிரேசன் வீதி, வவுனியா, கிரிதரன் (வயது-49). நெடுங்கேணி, வவுனியா, சிவகங்கை (வயது -70), முகமாலை, என்.சாரதாதேவி (வயது - 56), வட்டக்கச்சி, ஆர்.வைத்திலிங்கம் (வயது-87), குஞ்சுப்பரந்தன், ரி.குணசீலன் (வயது-70), திருவையாறு, திருநாவுக்கரசு (வயது - 60), பளை, எஸ்.வீரசிங்கம் (வயது-82),மீசாலை, எம்.ராசம்மா (வயது - 62), வட்டக்கச்சி, பி.கோணேஸ்வரி (வயது - 35), தர்மபுரம், பி.சஜீவன் (வயது - 4), தர்மபுரம், பி.கலையரசி (வயது - 8), தர்மபுரம், பி.கயல்விழி (வயது-8), தர்மபுரம், ஏ.கந்தசாமி (வயது-73), மாங்குளம், எம்.அரசம்மா (வயது-63), தர்மபுரம், ரி.நாகராணி (வயது-50), மன்னார், எஸ்.வைத்திலிங்கம் (வயது-56), வவுனியா, கே.முருகையா (வயது - 63), கிளிநொச்சி, ஏ.தவராசா (வயது - 52), மன்னார், வை.சர்மிலன் (வயது - 11) மன்னார், ஏ.யுவனீஸ் (வயது - 62), புண்ணைநீராவி, எஸ்.தர்மராசா (வயது - 56), புதுக்குடியிருப்பு, ரி.துரைராசா (வயது - 56), கிளிநொச்சி, ரி.கந்தவனம் (வயது - 80), யாழ்ப்பாணம்.


**Pravin Best (பிரவிந்தம்)**

**elementary world for the people's happiness**

**மக்களின் மன மகிழ்விற்கான ஆதார உலகம்**

கல்வி, கலை, நலவாழ்வு, ஆராய்ச்சி, பசுமைப்பாதுகாப்பு முதலிய இன்னோரன்ன கடமைகள் விவரங்களை விரைவில் எதிர்பாருங்கள்.

நிர்வாகி.



**பொன்விழா ஆண்டில்**

**யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரியும் பணிப்பாளரும்**



யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரியும், யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரியின் அதிபரும் மாகாணப் பணிப்பாளரும் ஆகிய

**கலாநிதி ந.யோகராஜன்** அவர்களும்

இன்று பொன் விழா ஆண்டை நிறைவு செய்கின்றனர்.

தொழில்நுட்பக் கல்லூரி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய சேவையை கௌரவித்து அமெரிக்கப் பல்கலைக்கழகம் (TRINTY COLLEGE UNIVERSITY) "பேராசிரியர்" பட்டம் வழங்கியமைக்கு உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

S.[illegible], K.சாந்தகுமார், [illegible] கூட்டுறவுச் சங்கம்.

மணிமாறன், தலைவர், பட்டதாரிகள் சங்கம்.

M.மதிவர்ணன், A.சந்திரகுமார், ஊழியர் சங்கம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஐ.நா.சபையிலும் "அரசியல்" சார்பா?

இலங்கை விவகாரம்-வன்னியில் தமிழ்ப் பொது மக்கள் நாளாந்தம் இராணுவ மோதல்களில் சிக்குண்டு இறந்தொழியும் விவகாரம்-ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் என்ற எதிர்பார்ப்புப் பொய்யாகிப் போய்விட்டது! எந்த நாட்டினரின் கவனத்தையும் அது ஈர்க்க வில்லை; கண்ணில் படவில்லை!!

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு,இங்குள்ள நிலைமைகளை அறியவந்து திரும்பிய ஐ.நா.சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் சமர்ப்பித்த அறிக்கையை அவர் வாசிக்க, பாதுகாப்புச்சபை உறுப்பினர்கள் அதனை வெறுமனே கேட்டதோடு "கதை" முடிந்துவிட்டது; கூட்டம் கலைந்தது.

மிகப்பெரும் மனிதாபிமானப் பிரச்சினை ஒன்று இலங்கையில் - வன்னியில் -உருவெடுத்துள்ளது குறித்தோ, ஓர் இனமக்கள் அழிந் தொழிவது பற்றியோ பாதுகாப்புச் சபை உறுப்பினர்கள் வாயும் திறந்ததாகத் தகவல் இல்லை! இலங்கை விவகாரத்தை பாதுகாப்புச் சபையில் விவாதிப்பதற்கான வாய்ப்பே இல்லையென்று அதன் தலைவர் யுக்கியோ டக்காசு கூறுமளவுக்கு அதனைக் கருத்தில் எடுப்பார் எவரும் இல்லாமற் போயிற்று!

இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் மட்டும், இரண்டாயிரம் பொது மக்கள் போரில் சிக் குண்டு மாண்டார்கள் என்ற புள்ளி விவரம் வெளியான பின்னரும், இனியாவது அதனைத் தடுக்க வேண்டும், அதன் பொருட்டு பொருளாதாரத் தடைபோன்ற அழுத்தங்களைப் பயன்படுத்தத் தூண்ட வேண்டும் என்று எந்த நாடும் அக்கறை காட்டவில்லை.

ஐ.நா.சபையில் நீண்டகாலம் பணிபுரியும் மூத்த ஊடகவியலாளர் மத்தியு ரஸ்ஸல் கூறுவது போன்று, அங்குள்ள எந்த நாட்டின் பிரதிநிதியும் இலங்கை விவகாரம் குறித்து-போர் நிலைவரம் தொடர்பாகவோ அல்லது அங்கு வாழும் மக்களுக்குரிய உயிராபத்து மற்றும் மனிதாபிமானச் சீரழிவு குறித்தோ-விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கேட்கவில்லை.

இத்தனைக்கும் இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் (பெரும் பிகுப்பண்ணி) ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான்-கீ-மூன் இரண்டு தரப்புகளையும் போரை இடைநிறுத்துமாறு கேட்டிருந்தார். அதனைக்கூட, பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்கள் பொருட்படுத் தவில்லை!

இதற்கு முன்னர் பாதுகாப்புச் சபையினால் நிராகரிக்கப்படும் என்று நிச்சயமாகத் தெரிந்திருந்தும் கூட பல நாடுகளின் போர் அல்லது மோதல் குறித்து இச்சபை ஆராய்ந்த முன்னுதாரணங்கள் பல உண்டு. கடந்த வருடத்தில் சிம்பாப்வேக்கு எதிராகப் பொருளாதாரத் தடை கொண்டு வரவேண்டும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்ததைக் குறிப்பிடலாம்.

ஆனால் இலங்கை விவகாரத்தில், ஜோன் ஹோம்ஸின் அறிக்கையைக் கேட்டவர்களுக்கு ஓர் இனம் அழிந்து கொண்டிருப்பது பாரதூரமான விடயமாகப்படவில்லை! போரை நிறுத்தி, பல உயிர்கள் அழிவதைத் தடுக்கத் தாம் உந்து சக்தியாகக் கருமமாற்றவேண்டும்-குரல் கொடுக்க வேண்டும்- என்ற சிறுதுளி மனிதாபிமானம் கூடத் துளிர்க்க வில்லை. அதன் உள்ளர்த்தம்தான் என்ன?

உலகப் பெரும் சபையாக விளங்கும் ஐ.நா.சபையும், அதன் அங்கதவர்களும், அதிகாரிகளும் சாய்ந்தால் சாய்கிற பக்கமாகச் செயற்படும் சாதாரண விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்ட மனிதர்களே என்பதனை இலங்கை விவகாரத்தில் தமக்குத் தாமே வெளிச்சம் பாய்ச்சிக் காட்டியுள்ளார்கள் என்றே கருதவேண்டியுள்ளது. வெவ்வேறு நாடுகளில் நடைபெறும் இன அழிவுகளையும் மனிதாபிமானப் பிரச்சினைகளையும் ஐக்கிய நாடுகள் சபையும் அதன் பாதுகாப்புச் சபையும் வெவ்வேறு அடிமட்டங்கள் கொண்டு அளவிடுகின்றனவா? அல்லது வெவ்வேறு நிறக் கண்ணாடிகளைப் போட்டுப் பார்க்கின்றனவா?

மேலும் ஒரு நாட்டு அரசாங்கத்துக்கும் அங்கு வாழும் மக்களுக்கும் இடையே வெடிக்கும் பிரச்சினைகளில் ஐ.நா. சபையும் அதன் அங்கங்களும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அடிவருடியே செயற்பட வேண்டும் என்ற எழுதாத விதி உள்ளதோ என்றும் சந்தேகப்பட வைக்கின்றது.

இலங்கை விவகாரத்திலும், இங்கு வந்து திரும்பிய ஜோன் ஹோம்ஸின் அறிக்கை அந்தச் சந்தேகத்தை இயல்பாகவே தோற்றுவிக்கிறது. அரசாங்கம் வழங்கிய உறுதிமொழிகள் உண்மையானவை என்று தனக்குள் திருப்திப்பட்டுக்கொண்டு, பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பித்த அறிக்கையை அவர் தயாரித்திருப்பதாகவே தோன்றுகிறது.

மேலும் போரினால் மக்கள் அழியும்போது அதனை ஐ.நா.சபை கருத்திற் கொள்ளாமல்,உள்ளாடும் கள்ளாடுமாக, "அரசியல்" செல்வாக்குக்கு மசிந்து உண்மையைப் பூசி மெழுகும் பழக்கத்தை வரித்துக் கொண்டிருக்கிறதா என்றும் ஐயுற வேண்டியுள்ளது.

ஹோம்ஸ் தாம் சமர்ப்பித்த அறிக்கையில், போர் முடிவுற்ற பின்னர் அரசியல் பிரச்சினைகளைக் கையாளலாம் என்ற கருத்தை வெளிப்படுத்தியிருப்பது புலனாகிறது. மனிதாபிமானப் பிரச்சினைகளே அவர் சார்ந்த விடயம் என்பதால் அவர் கூறியிருப்பது பொருத்தம் என்று கொள்ளமுடியவில்லை. வன்னியில் மனிதாபிமானப் பிரச்சினை பூதாகாரமாகி தமிழர்கள் இறந்தொழிவதற்கு அத்திவாரமே அரசியல்தான். இராணுவப் பலம்கொண்டு தமிழர்களை ஒடுக்குவது என்ற சித்தாந்தத்தையே இங்கு அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த கொழும்பு அரசுகள் கைக்கொண்டன; இப்போது அது மிக உச்ச நிலைக்கு வந்திருக்கிறது.

இதனை ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரி ஒருவர் உள்வாங்கிக் கொள்ளாமல் புறம் ஒதுக்கியிருப்பது நீதிக்கும் மனிதநேயத்துக்கும் முரணானது. பாவம் நிறைந்தது என்றும் சொல்லாம்.

இத்தகைய ஆக்கபூர்வமற்ற நிலைப்பாடும், நாட்டுக்கு நாடு வெவ்வறு அளவு கோலும், அரசியல் பக்கச்சார்பும் ஐக்கிய நாடுகள் சபை தமக்கு உதவும் என்ற நம்பிக்கையை உலக மக்கள் மத்தியில் தகர்த்தெறிந்துவிடும். அதனை வன்னித் தமிழ் மக்கள் அழிந்துபோகும் மனித பாவத்திலும் காணமுடிகிறது!தமிழர் விதியே, உன்னையே நோவதா?

# இடம்பெயர்ந்தோர் தொடர்பாக புலிகளுடன் நிபந்தனையின்றிப் பேச இந்தியா வற்புறுதல்

இலங்கை தொடர்பான இந்தியாவின் கொள்கையில் கடந்த வாரம் மேலும் சில மாற்றங்கள் தென்படத் தொடங்கியிருந்தன. அதுவும் குறிப்பாக பதில் பிரதம மந்திரி பிரனாப் முகர்ஜியின் நிலைப்பாட்டில் என்று கூறவேண்டும்.

கடந்த வாரச் செய்திகளின்படி இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பேச்சு வார்த்தை நடத்தி அமைதியான தீர்வுக்கு வரும்படி அவர் கேட்டுக் கொண்டி ருந்தார். மேற்கு வங்காளத்திலிருந்து விடுத்த ஓர் அறிக்கையின் மூலம் இந்த வேண்டுகோளை அவர் விடுத் திருந்தார்.

ஆனால் மூன்று நாள்களுக்கு முன்னதாக லோக சபையில் அவர் விடுத்திருந்த அறிக்கையொன்றில் புலிகளுக்கு எதிராக நடக்கும் போரில் தலையிடும் உத்தேசம் இந்தியாவுக்குக் கிடையாது என்று கூறியதுமட்டுமின்றி புலிகள் தமிழ் சமூகத்திற்கு பெரும் தீங்கு இழைத்து வருகிறார்கள் என்றும் குற்றஞ்சாட்டி

பெயர் குறிக்க விரும்பாத அதிகாரி ஒருவர் மேலும்தெரிவிக்கையில்: புலிகளுடன் அரசு எவ்வாறு பேச வேண்டும் என்று விவரிக்காது போனாலும் இதிலுள்ள முக்கியத்துவம் என்னவென்றால் வித்தியாசமான அணுகுமுறைதான். சம்பந்தப்பட்ட அனைவரையும் (அரசு-புலிகள் உட்பட) இதில் பொருத்தமான பயனளிக்கு நடைமுறையை உருவாக்கிக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

அதுவும் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு நிபந்தனை எதுவுமின்றி

நடத்துவதற்கான மாற்று குழு எதையும் தேடிக் கொள்வதற்கான முயற்சியில் எதுவித அக்கறையும் காட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. அதே சமயம் தமிழர் தரப்பிலும் நம்பகரமான தரப் பொன்றினை புலிகளுக்கு மாற்றாக வெளிப்படுத்தப்படவும் இல்லை என்றார்.

கட்டாயமான நிபந்தனைகளை கடைப்பிடித்தால் மட்டுமே வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதிகள் வழங்கப்படும் என்று உதவி வழங்கும் நாடுகள் வற்புறுத்த வேண்டும் என்று முன்னர்

**நேற்று 01.03.2009 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான அரசியல் விமர்சனத்தின் ஒரு பகுதி**

சரணடைய வேண்டும் என்று இலங்கை அரசு வற்புறுத்திக் கொண்டிருக்கும் நிலையில் என்று கூறியுள்ளார்.

**கருணாநிதியின் உண்ணாவிரத அச்சுறுத்தல்**

இந்திய அரசுக்கு இப்பொழுது உள்நாட்டு நெருக்குதலே பிரதானமானமாக எழுந்துள்ளது. தமிழ் நாட்டின் புலிகள்

## ராஜதந்திர முறையில் நடைபெறுவதாக உயர் அதிகாரி ஒருவர் தகவல்

யிருந்தனர்.

இது கொழும்பிலுள்ள இலங்கை அரசுத் தலைவர்களைத் திருப்திப் படுத்துவதற்காக விடுத்திருந்த அறிக்கை. கொழும்பில் ஜனவரி மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தவேளையில் அவர் மேற்கொண்டிருந்த நிலைப்பாட்டுக்கு மிகப் பொருத்தமாகவே இப்போதைய அறிக்கையும் இருப்பதாக இலங்கைத் தலைவர்கள் மகிழ்ச்சி கொண்டிருந்தார்கள்.

**உள்ளேயும் வெளியேயும் கடும் அழுத்தம்**

உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் உருவாகியுள்ள அழுத்தங்களின் காரணமாகவே இந்திய அரசின் நிலைப்பாட்டில் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. முகர்ஜி தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டபின் இரண்டு நாள் கழித்து கடந்த செவ்வாய்க்கிழமை இந்திய அரசின் அதிகார பூர்வ அதிகாரி ஒருவர் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். இடம்பெயர்ந்த மக்களின் அப்புறப்படுத்தலும் பாதுகாப்பும் தொடர்பாக அந்த அறிக்கைவிடுக்கப்பட்டிருந்தது. இந்தியாவின் புதிய நிலைப்பாட்டை மீளவும் வலியுறுத்துவதாகவிருந்த அந்த அறிக்கையில் காணப்பட்ட சிறிய மாற்றமானது பாக்கு நீரிணையின் இரு பக்கங்களிலுமுள்ள ஊடகங்களில் பெரிதாக வெளிப்படுத்தப்படவில்லை.

"போரில் சிக்குண்ட மக்கள் பத்திரமாக வெளியேறுவது தொடர்பாக சர்வதேச சமூகம் விடுத்துள்ள கோரிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு புலிகள் ஆயத்தமாய் இருப்பதாக அறிவித்திருப்பதை அறிகின்றோம் என்று தெரிவித்துள்ள அவ்வறிக்கையில், இந்த நிலையில் இலங்கை அரசையும் ஏனைய சம்பந்தப்பட்ட அனைவரை யும் இந்த மக்களை பத்திரமாக வெளியேற்றுவது தொடர்பாக பொருத்தமான நடைமுறைகளை உருவாக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம். இந்த நடைமுறையினை சர்வதேச முகவர்அமைப்புகள்மேற்பார்வை செய்வதாகவும் இருக்க வேண்டும்" என்று தெரிவித்திருந்தது.

**நிபந்தனையின்றி பேசும்படியான வற்புறுத்தல்**

இந்த வேண்டுகோளில் இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் ஏனைய தரப்பினரையும் இடம்பெயர்ந்த மக்கள் வெளியேறுவது தொடர்பாக சர்வதேச கோரிக்கைகள் தொடர்பாக விவாதிக்கும்படி இந்தியா கேட்டுள்ளது. இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பாக புலிகளுடன் நிபந்தனையில்லாமல் பேச்சில் ஈடுபடும் படியாக கொழும்பு அரசை கேட்டுக் கொள்ளும் இராஜதந்திர முறையாகும் இது என்று வெளிநாட்டமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். புலிகளுக்கு சிறிய அளவிலான ஒரு சாளரத்தை திறந்து கொடுப்பதாகும் இது என்று அவர் மேலும்தெரிவித்தார்.

ஆதரவு சக்திகள் ஆர்ப்பாட்டங்களை நடத்திவரும் அதேசமயம் மத்திய அரசின் கூட்டணிக்கட்சிகளில் ஒன் றான தி.மு.கழகத்தின் தலைவர் டாக்டர் முத்துவேல் கருணாநிதியின் சாகும்வரை உண்ணாவிரதம் அச்சுறுத்த லும் பிரதான காரணமாகும். அத்துடன் ஏப்ரல் மாதத்தில் அல்லது மே மாதத்தில் வரவிருக்கும் பொதுத் தேர்தலும் முக்கிய காரணமாகும். போர் நடக்கும் பகுதிகளில் சிக்குண்டு உள்ள பொது மக்களின் நிலைமை குறித்து சர்வதேசக் கவலை அரிகரித்து வருவதையும் முக்கிய காரணங்களில் சேர்த்துக்கொள் ளலாம்.

இந்திய அரசின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் காரணமாகவே கொழும்பில் இடம்பெற்ற சார்க் நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் மாநாட்டுக்கு வராமல் முகர்ஜி தவிர்த்துக் கொண்டார் என்று இப்போது உணரப்படுகின்றது.

இடம்பெயர்ந்த மக்களின் துன்பங்கள் தொடர்பாக சர்வதேச மட்டத்தின் பல்வேறு நிலைகளில் கடந்தவாரம் கவலைகள் வெளியிடப்பட்டன.

கடந்த வெள்ளியன்று ஐரேப்பிய யூனியன் வெளிநாட்டமைச்சர்கள் கூட்டறிக்கை ஒன்றினை வெளியிட்டார்கள். மோதலில் சிக்குண்டுள்ள மக்களை விடுவிக்க உடனடியாக போர் நிறுத்தம் செய்யும்படிஅவர்கள்கேட்டுக்கொண்டனர்.

இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள முகாம்களை சர்வதேச தரங்களுக்கு அமைவாக வைத்துக்கொள்ளும்படி அரசாங்கத்தை அவர்கள் வற்புறுத்தினார்கள். அத்துடன் அவைகள் சுதந்திரமாகக் கண்காணிக்கப்படவும் வசதியிருக்க வேண்டுமென வற்புறுத்தியருந்தார்கள். புலிகளை ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு பயங்கரவாதத்தை கைவிடும்படியும் கேட்டிருந்தார்கள்.

**அரசுக்கு அக்கறையில்லை**

ஆனால் இலங்கை தொடர்பாக அமெரிக்க செனேட் வெளியுறவு உபகுழுவொன்றில் மிக விரிவான விவாதம் ஒன்று நடைபெற்றுள்ளது. அதிபர் பராக் ஒபாமாக அதிபராக பொறுப்பேற்றதன் பின்னர் நடைபெற்றுள்ள இவ்வாறான முதல் விவாதமாகும் இது. அண்மித்த கிழக்கத்திய, தென்மற்றும் மத்திய ஆசிய விவகாரங்கள் தொடர்பான மேற்படி உப குழுவின் விவாதம் இடம்பெற்றபோது குழுவின் தலைவர் றொபேர்ட் காஸி கருத்து வெளியிடுகையில் இலங்கை அரசாங்கமானது பேச்சுவார்த்தைகளை

(2003-2006) இலங்கையில் அமெரிக்கத் தூதுவராக இருந்துள்ள ஜெப்றே லுன்ஸ்டட் வலியுறுத்தினார். இரு தரப்பு மற்றும் பலதரப்பு உதவிகளை வழங்கும் ஜப்பான், ஐரோப்பிய யூனியன் மற்றும் உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவை இதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றார் அவர்.

அதிகாரப் பகிர்வு, இடம்பெயர்ந்தவர்களை விரைவாக மீள்குடியமர்த்தல், மனித உரிமை நிலைப்பாட்டில் விரைவான முன்னேற்றம் ஆகியவை இந்த நிபந்தனைகளில் அடங்க வேண்டும் என்றார் அவர்.

இந்த விடயங்களில் எனக்கு நீண்டகால அனுபவம் உண்டு. உதவி வழங்குநர்களின் அர்த்தமுள்ள ஒருங்கிணைப்பும், நிபந்தனை விதிப்புகளும் இலகுவாக நடைமுறைப்படுத்த முடியும் என்று நான் கூறத்தயாராய் இல்லை. இவைகளை முன்வைப்பது இலகுவாக இருக்கலாம் ஆனால் செயல்படுத்தப் படுவது கஷ்டம். அமெரிக்காவும் ஏனைய உதவி வழங்கும் நாடுகளும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளின் உதவிகளை இந்த விடயங்களில் நிபந்த னைக்குட்படுத்தினால், இலங்கைக்கு பெரிய அளவில் இருதரப்பு உதவி வழங்குநரான ஜப்பான் தனது உதவிகளையும் நிபந் தனைக்குட்படுத் தினால் இலங்கையின் நட்பு நாடுகள் அதன்மீது மிகுதியான தாக்கங்களை ஏற்படுத்த முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

மனித உரிமை கண்காணிப்பு அமைப்பின் ஆய்வாளர் டாக்டர் அன்னா நீஸ்டட் மற்றும் நியுயோர்க்கில் இருந்து செயல்படும் பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழுவின் ஆஸியா திட்ட ஒருங்கிணைப் பாளர் பொப்டீட்ஸ் ஆகியவர்களும் செனேட் உப குழுவின் முன் சாட்சி யளித்தனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான நீண்ட அறிக்கையினை அன்னா நீஸ்டட் சமர்ப்பித்தார். ஊடகத்துறை சுதந்திரம் தொடர்பாக திரு நீட்ஸ் விவரித்தார்.

ஊடகத்துறையின் நிலைமை குறித்து விவரமான அறிக்கை ஒன்றினை தாக்கல் செய்த அவர் பத்திரிகைத் துறையின் மீதான அச்சுறுத்தல்கள், தொல்லைகள் போன்றவற்றையும் பட்டியல் இட்டார்.

**கலகலப்பு இல்லாத சார்க் மாநாடு**

கடந்தவாரம் இடம்பெற்ற சார்க் வெளியுறவு அமைச்சர்களின் மகாநாடு இந்தியாவின் பிரணாப் முகர்ஜியும், பாகிஸ்தானின் ஷா மொகமட் குவரெஷியும் இல்லாது சோபை இழந்து போனாலும் ஜனாதிபதி மகிந்தராஜ பக்ஷ கலந்து கொண்டு சில பொதுக் கருத்துக்களை வெளிப்படுத்தினார். அமெரிக்காவில் ஆரம்பித்த பொருளாதார நெருக்கடியானது எமது நாடுகளையும் பாதிக்கும் நிலைமை தோன்றியுள்ளது. பயங்கரவாதத்தைப் போலவே நாம் எல்லோரும் எதிர்கொள்ள வேண்டிய இன்னொரு சவாலாகும் இது. நாம் எல்லோரும் உலக நிதி நிலைகளுடன் தொடர்புகொண்டிருப்பதால் இந்த நெருக்கடியானது நமது நாடுகளையும் பாதிப்பது சாத்தியமே என்று குறிப்பிட்டார் ஜனாதிபதி. (ப)

## நாளை

| | |
|---|---|
| மாசி 19 | 03.03.2009 |
| | செவ்வாய்கிழமை |
| திதி: | ஷப்தமி |
| | பி.இ. 01.11 வரை |
| நட்சத்திரம்: | கார்த்திகை |
| | மு.இ. 07.25 வரை |
| சுபநேரம்: | 10.56 - 12.26 |
| ராகுகாலம்: | 03.26 - 04.56 |

## தவக்காலச் சிந்தனை



### கடவுளின் நியமங்களைக் கடைப்பிடிப்போம்

*உலகத்தில் சிறந்த நாடு எது? நாட்டிலே சிறந்த குடிமகன் யார்? முதல்தர நாடு! மூன்றாந்தர நாடு! பொருள் என்ன? பொருளாதாரத்தையே மையமாக வைத்துப் பிரிக்கப்படுகிறது. அடாவடித்தனம் செய்து பிறநாடுகளைச் சுரண்டிப் பிழைக்கும் நாடுகளே முதல்த்தர நாடுகளாகக் கணிக்கப்படுகின்றன. முதல்த்தரக் குடிமகன் நாட்டுப் பற்று மிக்கவன். நாட்டின் சட்டங்களைத் தெரிந்து மதித்து நடப்பவன். முதல்தர நாடுகளின் கடமை பிறநாடுகளை, அவை களின் கொள்கைகளை மதித்து வாழ வழி செய்வதே ஆகும். கொள்கைகளை மதித்து, சட்டங்களை மீறுகிற நாடோ, தனி நபரோ தரமிழந்த வர்கள். கானானன் தேசம் கடவுளின் கொடை இஸ்ராலேயர் கடவுளின் நியமங்களை கடைப்பிடித்து ஒழுகினால் இப் பேரின்பமும் ஞானமும் அறிவாற்றலும் கொண்டது என பல நாடுகள் மத்தில் பெருமைபெறும். (இச-4:6) கடவுளின் நியமங்கள் வாழ்வளிப்பவை. அவை என்றும் அழியாத் தன்மை கொண்டவை. யாரும் அழிக்கவும் முடியாது. நம்மை நாமே சிறப்பாக்கிக்கொள்ள, நம்மைச் சுற்றியுள்ளோரைச் சிறப்பாக்க நியமங்களைக் கடைப்பிடிப்போம்.*

ப.சுதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரக்கன்றுகள் தேவை

மா, பலா, தேசி, தோடை போன்ற வீட்டு மரக்கன்றுகள் கணிச மான அளவு தேவைப்படுகின்றன. விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் எண்ணிக்கையையும் ஒவ்வொன்றின் விலையையும் குறிப்பிட்டு 10.03.2009 இற்கு முன்னர் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

மாவட்ட முகாமையாளர்,
ஐ.நா. வதிவிடம்,
84, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 8137
060 221 6419


# மரண அறிவித்தல்கள்

## அப்புத்துரை அரிச்சந்திரன்



காலையடி தெற்கு, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை அரிச்சந்திரன் 27.02.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.03.2009 திங்கட்கிழமை நடைபெறும்

*காலையடி தெற்கு,*
*பண்டத்தரிப்பு.*

தகவல்
குடும்பத்தினர்.

## மாணிக்கம் தர்மகுலராஜா (ராசன்)



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் தர்மகுலராஜா 28.02.2009 சனிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் மாணிக்கம் - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், த கராஜா(ராசு)- மகேஸ்வரி தம்பதியரின் அ மருமகனும் வனயாழினியின் பாசமிகு க ரும் யாழ்/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூ யின் மாணவர்களான தேவதர்மிலா, தர்மதனிதவன், தேவதர்சினி, தேவதனுஜயன், தேவதனுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இ று (02.03.2009) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப.10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*மாதாகோவிலடி,*
*அந்திரானை, சண்டிலிப்பாய்*

தகவல்
டான்சன் (மருமகன்).

## திருமதி சுப்பிரமணியம் குலவதி



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் குலவதி நேற்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குலத்துரை - அன்னரத்தினம் தம்பதியரின் மூத்த மகளும் இணுவிலைச் சேர்ந்த கந்தையா சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான குலராசசேகரம், குலராசவதி, குலரத்தினவதி மற்றும் குலவீரசேகரம், குலத்துங்கசேகரம், குலரத்தினசேகரம், குலஞானவதி, குலவீரவதி, குலராசவீரரத்தினவதி, குலரஞ்சிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிறிதரபவான், சுகந்தகுமாரி, கலாறோஜினி, ஜெகதரபவான் இராசறோகிணி, இரசதரபவான் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயந்தி, வேற்முகன்,பார்த்தீபன், தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2009) திங்கட்கிழமை ந.ப. 1மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் தெற்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
குடும்பத்தினர். (செல்வம் கடை)

## நாகமுத்து இரத்தினம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் வைரவர் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து இரத்தினம் 27.02.2009 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்துவின் (மணியம்) அன்பு மனைவியும் குமாரசாமி (கனடா), காலஞ்சென்ற சிவசாமி (இந்தியா), துரைச்சாமி (பொது முகாமையாளர், மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம்), செல்வராசா (சுவிஸ்), லிங்கேஸ் வரி, சற்குணராஜா (கிளை முகாமையாளர், மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்), சிறிஸ்கந்தராஜா (கனடா), சர்வேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயகலாதேவி (கனடா), சுலோஜா (இந்தியா), சீதாதேவி, ரதி (சுவிஸ்), தர்மகுலசிங்கம், சுதாநிதி, நகுலா (கனடா), ராஜூ (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் பார்த்தீபன் (கனடா), நிரோனி (கனடா), ஆதித்தன் (கனடா), ஜனார்த்தனன் (கனடா), அனுராதா (கனடா), அன்ரன் (சுவிஸ்), ராஜா (கனடா), சூட்டி (லண்டன்), சாள்ஸ் (இந்தியா), றேகன் (இந்தியா), லீஞ்சா (இந்தியா), திலீபன், பகீரதன், சஞ்சீவன், மேகலா (சுவிஸ்), மிதுலா (சுவிஸ்), மழலா (சுவிஸ்), தர்மேந்திரா, பானுரேகா, விஜேந்திரா, பானுமகேந்திரா, சுஜேந்திரா, மதிலக்ஷன், மதிவாணி, கௌசன் (கனடா), நாவேந்தன் (கனடா), யாழரசி(கனடா) ஆகியோரின் பேர்த்தியும் மதுமிகா (கனடா), விதுஷிகா (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2009) திங்கட்கிழமை ந.ப. 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வைரவர் கேயிலடி,*
*சண்டிலிப்பாய்.*

தகவல்:
பிள்ளைகள்

## முல்லைத்தீவுக்கு சனியன்று 90 மெ.தொன் உணவுப் பொருள்

முல்லைத்தீவுப் பிரதேசத்திற்கு மேலும் உணவுப் பொருள்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமையன்று முல்லைத்தீவுப் பிரதேசத்திற்கு 90 மெ.தொன் உணவுப் பொருள்களும் 1,000 பால்மா பைக்கெற்றுக்களும் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றை முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் பிரதிநிதிகள் மக்களுக்கு பகிர்ந்தளிப்பர் என்றும் அமைச்சர் கூறினார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதியிலிருந்து நேற்றுவரை முல்லைத்தீவுப் பிரதேசத்திற்கு 200 மெ.தொன் உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, ஏ9 வீதியினூடாக யாழ்ப்பாண மக்களுக்கு உணவுப் பொருள்கள் விரைவில் எடுத்துச் செல்லப்படும் என்றும் அதற்கான திகதியை ஜனாதிபதி விரைவில் அறிவிப்பார் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ-06)

### மேல்மாகாண சபைத் தேர்தல்

## தபால் மூல வாக்களிப்புக்கு 34 ஆயிர விண்ணப்பம்

கொழும்பு, மார்ச் 02

லமாகாணசபைத் தேர்தலில் தபால் மூ ம வக்க ப்பதற்காக 34 ஆயிரத்துக்கும் மேறபட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அவற்றுள் கொழும்பு மாவட்டத்திலிருந்து 6 ஆயிரம் விண்ணப்பங்களும், களுத்துறை மாவட்டத்திலிருந்து 12 ஆயிரம் விண்ணப்பங்களும் கம்பஹா மாவட்டத்திலிருந்து 16 ஆயிரத்து 835 விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளன என்றும் -

அந்த விண்ணப்பங்கள் அனைத்தும் தற்போது பரிசீலிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்றும் தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கையும் வேட்புமனுத்தாக்கலும் கடந்த மாதம் 26ஆம் திகதியுடன் நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தபால் மூலம் வாக்களிப்பதற்காக சுமார் 34 ஆயிரம் பேர் விண்ணப்பித்திருக்கும் அதேநேரம் இத் தேர்தலில் வாக்களிக்க சுமார் 38 லட்சம் பேர் தகுதி பெற்றுள்ளனர். அடுத்த மாதம் 25 ஆம் திகதி இடம்பெறவுள்ள இத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுக்கொண்டு வருகின்றன என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் ஆகியன இப்போதே தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. (அ-சி)

## புதையல் தோண்ட முயன்ற ஐவர் பொலிஸாரால் கைது

அநுராதபுரம் நொச்சியாகமவில் புதையல் தோண்ட முற்பட்ட 5 பேரை நொச்சியாகம பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அவர்கள் வசமிருந்த வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று நொச்சியாகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்றுக் கூறினார்.

அவர்கள் புதையல் தோண்ட முற்படுகின்றனர் என்று மக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட ஐவரும் களுத்துறை உள்ளிட்ட சில இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் இக்கைது நடவடிக்கையின் போது அவர்களுடனிருந்த மேலும் ஒருவர் தப்பியோடிவிட்டார் என்றும் நொச்சியாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று நொச்சியாகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ-சி)


**HOLY FAMILY CONVENT, JAFFNA**
**PAST PUPILS' ASSOCIATION**

**The Annual general Meeting - 2008**

The above meeting will be held on Saturday, 7th March 2009, at 3.00p.m., in the school hall.

All members are kindly requested to be present.

*Principal,*
*Holy Family Convent,*
*Jaffna.*

(83131)

*Secretary,*
*Holy Family Convent,*
*Past Pupils' Association,*
*Jaffna.*


# மரண அறிவித்தல்கள்

## தம்பு திருநாவுக்கரசு
### (முன்னாள் பிரபல வர்த்தகர்)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு திருநாவுக்கரசு நேற்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் தவமணி தேவி, சண்முகராசா (கிறீன்லன்ஸ் ஹொட்டல்), ராதா, தவராசா (நல்லூர் பிரதேசசபை), புஸ்பராசா (இத்தாலி), லிங்கராசா (கனடா), தனராசா (இத்தாலி), தனவதி, இன்பம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கனகசபை, செல்லையா, காலஞ்சென்ற திருமதி அன்னம்மா, முத்தையா, காலஞ்சென்ற வைத்திய கலாநிதி இராசையா, திருமதி நகுலேஸ்வரி விஜயரட்ணம், மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகேஸ்வரராஜா (தொ.நு. உத்தியோகத்தர்), தவமலர்தேவி, தர்மகுலேந்திரன் (புனர்வாழ்வு அமைச்சு), ராதாதேவி, லிங்கராஜி, நந்தினி, உமா, சிவபாலன், சத்தியசீலன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (01.03.2009) ஞாயிறு பி.ப. 4 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமுப்பிள்ளை வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தொ.பே: 0771310964

தகவல்: மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள், சண்முகராசா (கிறீன்லன்ஸ் ஹொட்டல், கொழும்பு), தவராசா (பொறுப்பதிகாரி, நல்லூர் பிரதேசசபை உப அலுவலகம்).

## பிரம்மஸ்ரீ தேவராஜக்குருக்கள் இரவீந்திரக்குருக்கள்
### (பிரதம குரு, அல்வாய் மாலுசந்தி ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்)



மாலுசந்தி, அல்வாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ தேவராஜக்குருக்கள் இரவீந்திரக்குருக்கள் நேற்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் ஜெயஈஸ்வரியின் அன்புக் கணவரும் பிரம்மஸ்ரீ சபா தேவராஜக்குருக்கள் - தவளாம்பிகைஅம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் அமரர்களான மட்டுவில் பாலசுப்பிரமணியக்குருக்கள் - கார்த்திகாயினி தம்பதியினரின் மருமகனும் கிரிகரசர்மா, சுதாகரக்குருக்கள், சுரேந்திரசர்மா, வசுந்தரா, வத்சலா, வைதேகி, சுபாசினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ராமகிருஷ்ணசர்மா, வாகீஸ்வரக்குருக்கள், பாலசுப்பிரமணியசர்மா, சுவாமிநாதசர்மா, நித்தியானந்தி, சித்திராதேவி, சாந்தினி, ராஜராஜேஸ்வரி, நல்ல நாகேஸ்வரி, லலிதா, வேதாரணியசர்மா ஆகியோரின் மைத்துனரும் நிவேதா, சஞ்ஜை, ஸ்ரீகுருபிரசாத், ஹரிப்பிரசாத் ஆகியோரின் பெரியப்பாவும் கணேஸ், வித்தியா, சுபாங்கன், பிரசாந்தன், சுபஜெனனி ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை A.F. றேமன் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நேற்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கிரியைகளின் பின்னர் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிள்ளையார் கோவில்,*
*மாலுசந்தி, அல்வாய்.*

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி இராசேந்திரம் அஞ்சலீனா



பாசையூரைச் சேர்ந்த திருமதி இராசேந்திரம் அஞ்சலீனா நேற்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அண்ணாவியார் தீயோ இராசேந்திரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான யோவான் வர்ணசிங்கம், நீக்கிலஸ் அன்னமரியை மற்றும் யோவான் செபஸ்ரியாம்பிள்ளை, யோவான் சூசைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சட்டத்தரணி T.M. அன்ரனிப்பிள்ளை, அல்போன்சஸ் அல்வின், திருமதி பிபியானா அன்ரனி, M.டேவிற், திருமதி யூலியானா பிறின்ஸ், M.பிரான்சிஸ், T.M.R.யோசவ், M.வெனான்சியஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற P.P.மத்தியூஸ் (ஆசிரியர்) மற்றும் P.P.அன்ரனி எட்வேட், P.P.செபஸ்ரியன், அருட்தந்தை P.P.பிலிப் (OMI), P.P.கேபிரியல் பிறின்ஸ், திருமதி அன்ரனிப்பிள்ளை திரேசம்மா, திருமதி எட்னா அல்வின், திருமதி சந்திரா டேவிற், திருமதி வசந்தா பிரான்சிஸ், திருமதி இமெல்டா யோசப், திருமதி சாந்தி வெனான்சியஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி ஜெயராணி றைற்றஸ், திருமதி அனஸ்ரிறோபேட் கிங்ஸ்ரன் அன்ரனிப்பிள்ளை, அருள்சீலன் விஜயறாணி, கொலின் ஜீவறாணி, டோமினிக், ஜோய், சந்திரகுமார், றூபி, ராஜேந், டேமியன், நோயல், திருமதி றோமி அன்ரனி, கொட்பிறி, குளோறியா, கபி, சறோன், அன்றியா, லொயிட், பேபியன், யூலியன், ஜெறமியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மேவின், கெவின், ஜொணத்தன், அனிற்றா, சேர்வின், திரேசி, ஸ்ரீபன், ஜெனிற்றா, ஜெய்சா, யூட்வின்ஸ்ரன், லெனிற்றா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.03.2009) திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.10. 2ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர். T.P. 021 222 3179

தகவல்:
பி.பி.கபிரியேல் பிறின்ஸ் (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் ஆசிரியர் கடத்தப்பட்ட நாடகத்தின் பின்னணியை வெளிக்கொணர்வது அரசின் கடமை

## முன்னாள் எம்.பி.விநாயகமூர்த்தி கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 2

உதயனின் ஆசிரியரும் சுடரொளியின் பிரதம ஆசிரியருமான ந.வித்தியாதரன் கடத்தப்பட்ட நாடகத்தின் பின்னணி என்ன? பொறுப்பாளிகள் யார்? என்பதை மக்களுக்கு வெளிக்கொணர வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு உள்ளது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான அ.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விநாயகமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

கடந்த 26.02.2009 அன்று மகிந்த மலர்ச்சாலையில் வைத்து காலை 9.30 மணியளவில் உதயன் பத்திரிகையின் ஆசிரியரும் சுடரொளி பத்திரிகையின் பிரதம ஆசியரும் பலதுறையினராலும் மதிக்கப்படுபவருமான நடேசபிள்ளை வித்தியாதரன், மூன்று பொலிஸ் உடை தரித்தவர்களாலும், 5 சிவில் உடை தரித்தவர்களாலும் பலவந்தமாக வெளியே இழுத்துச் செல்லப்பட்டு வெள்ளைநிற வான் ஒன்றில் தள்ளப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு, தாக்கப்பட்டு (மிகமோசமாக) கடத்தப்பட்டுள்ளார். இச்செயல்களுக்குப் பின்பு வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலரின் தலையீட்டால் தெமட்டகொடவில் உள்ள கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து அப்பிரிவினைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் பரிசோதகர் விஜயரட்ண என்பவரால் முற்பகல் 11.40 மணிக்கு கைது செய்யப்பட்டதாக சுடரொளி அலுவலகத்தின் ஊடாக வித்தியாதரனின் வீட்டிற்கு கைதுச் சீட்டு வழங்கியுள்ளனர்.

அன்றைய தினம் மாலைதான் வித்தியாதரனின் வீட்டிற்குச் சென்று அங்கிருந்து சில தகவல்களைப் பெற்ற பின்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அவரது வீட்டிலிருந்து தொடர்பு கொண்டு கேட்டுக் கொண்டதற்கமைய உடனடியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவைச் சேர்ந்தவர்களும் இவரைச் சென்று பார்வையிட்டனர்.

மறுநாள் நான் தெமட்டகொட, கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரியைத் தொடர்பு கொண்ட போது வித்தியாதரனது விடுதலைக்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதென எனக்கு அறிவிக்கப்பட்டதுடன், அவரைச் சென்று பார்ப்பதற்கும் அனுமதிக்கப்பட்டேன். அதன்பின் நான் நேரே சென்று வித்தியாதரனைச் சந்தித்து ஆறுதல் கூறியிருந் தேன்.

இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ''இது ஒன்றும் கடத்தல் அல்ல நியாயபூர்வமான கைது'' என்று கூறியுள்ளார். திட்டமிட்டுக் கடத்திவிட்டு கடத்தல் அல்ல கைது என்று கூறும் இந்நாடகத்தை நானும் எனது கட்சியும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். பல வெளிநாட்டு இராஜதந்திரிகளினுடைய தலையீடு இல்லாதிருந்தால் தலை சிறந்த ஊடகவியலாளரும் பத்திரிகை ஆசிரியருமான வித்தியாதரனிற்கு, லசந்த விக்கிரமதுங்கவிற்கு நடந்த கதிதான் நடந்திருக்குமோ என அஞ்சுகின்றேன். இந்தக் கடத்தல் நாடகம் அரசாங்கத்தின் ஆதரவுடன் அல்லது அரசாங்கத்தாலேயே இயக்கப்படுகிறது என்பது வெளியாகியுள்ளது.

இக்கடத்தல் நாடகத்தின் பின்னணியையும் பொறுப்பாளிகள் யார் என்பதையும் மக்களுக்கு வெளிக்கொண்டு வர வேண்டிய கடமை இந்த அரசாங்கத்திற்கு உள்ளது- என்றுள்ளது.

(202)

# வெள்ள அனர்த்தங்களைத் தடுக்க நடவடிக்கை

ஆனைக்கோட்டை, மார்ச் 2

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வெள்ள அனர்த்தங்களைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை வலி.தென்மேற்கு பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

நவாலிப் பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ள நிலைமையைக் கருத்திற்கொண்டு அப்பிரதேச மக்களுடன் அண்மையில் கலந்துரையாடப்பட்டதாக வலி.தென்மேற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் நிமித்தம் இனி வரும் காலங்களில் ஏற்படும் வெள்ள நிலைமைகளைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் இதில் ஒரு கட்டமாக நவாலி பிரசாத் சந்தைக்கு அருகே போகும் வெள்ள வாய்க்கால் புனரமைக்கப்பட்டு நீர் வழிந்தோடுவதற்குரிய வகையில் ஆழமாக்கப்பட்ட இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(202-20)

# கிழக்குப் பல்கலைக்கழக நடவடிக்கைகள் இடை நிறுத்தம்; விடுதிகளில் இருந்து மாணவர்கள் வெளியேற்றம்

கிழக்கு பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் தவிர்ந்த எனைய பீடங்களின் விரிவுரைகள் மற்றும் பரீட்சைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. அதையடுத்து மாணவர்கள் விடுதிகளிலிருந்து தற்போது வெளியேறியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

வந்தாறு மூலையிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக விடுதியில் முல்லைத்தீவைச் சேர்ந்த தனபாலசிங்கம் நிரூஜா (வயது 23) என்ற மாணவி தூக்கிலிட்டு தற்கொலை செய்த சம்பவத்தையடுத்து மாணவர்களிடையே ஏற்பட்ட பதற்ற நிலையையடுத்தே நிர்வாகம் இம் முடிவை எடுத்துள்ளது.

பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வந்த கலை, வர்த்தக முகாமைத்துவம், விஞ்ஞானம் மற்றும் விவசாய பீட மாணவர்களில் வட மகாகாணத்தைச் சேர்ந்த 65 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்போது ஆயர் இல்லத்திற்குச் சொந்தமான மன்ராசாவில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களைச் சொந்த இடங்களுக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு செல்ல வேண்டியவர்களை அங்கு அனுப்பி வைப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி நாடப்பட்டுள்ளதாகவும் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான கலாநிதி என். பத்மநாதன் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தாலும் இவர்களில் அநேகமானோர் தமது சொந்த இடங்களுக்கு செல்லவே விரும்புவதாகவும் அவர் கூறினார். மேலும் கலைப்பீடத்தின் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாக குறைந்தது ஒரு மாதமாவது செல்லும். ஏனைய பீடங்களின் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமாக 2 வாரங்களாவது செல்லும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் கலாநிதி என் .பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

# சுவரொட்டி, சித்திரப் போட்டிகளில் யாழ்.மாணவர்கள் மூவருக்கு விருதுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சுவரொட்டி, சித்திரப்போட்டிகளில் யாழ். மாவட்ட மாணவர்கள் மூவர் மாகாண, தேசிய விருதுகளைப் பெற்றுள்ளனர்.

இணுவில் மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களான யோகானந்தன் சிவேந்தன் (மாகாணவிருது), கருணைநாதன் கஜேந்திரன் (தேசிய விருது) ஆகியோர் ''பாவனைக்குப் பின்னரான பிளாஸ்ரிக் கழிவுப்பொருள்'' என்ற தலைப்பிலான சுவரொட்டிப் போட்டிகளில் விருதுகளைப் பெற்றுள்ளனர்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகளான வித்தியா இரத்தினேஸ்வரன், தேசிய விருதினையும், மோகனரஞ்சினி இரத்தினேஸ்வரன் தேசிய மட்டத்தில் விசேட திறமைச் சித்தி சான்றிதழையும் பெற்றுள்ளனர்.

அத்துடன் 'உணவும் போசாக்கும்' பற்றிய ஓவியப் போட்டியில் தேசியமட்டத்தில் விசேட சான்றிதழை செல்வி சிவசெந்தூரி சிவநேசசுந்தரம் பெற்றுள்ளார்.

இவர்களுக்குரிய விருது வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இயற்கை வளங்கள் அமைச்சர் பாட்டலீ சம்பிக்கரணவக்க தலைமையில் நடைபெற்றது.

(202-9)

# திருகோணமலையில் தமிழர்கள் 5பேர் கைது

திருகோணமலையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட பாரிய சுற்றிவளைப்பு தேடுதலில் தமிழர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை வேளையில் திருகோணமலையில் தமிழர்கள் வாழ்கின்ற உப்புவெளிப் பிரதேசத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து பாரிய சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

திருமலையில் உள்ள புகையிரத நிலையம், பேருந்து நிலையம் மற்றும் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் போன்றவற்றில் பயணித்தவர்களும் கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன், வாகனங்களும் சோதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேடுதலில் 5 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிய வருகின்றது.

# தவக்கால யாத்திரை

குருநகர், மார்ச்.2

குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்கினரால் நடத்தப்படும் சாட்டி சித்தாத்திரை மாதா ஆலயம் நோக்கிய தவக்கால புனித பாத யாத்திரை எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இப்பாத யாத்திரையில் கலந்துகொள்ளவுள்ளவர்கள் தமது பெயர், முகவரி, அடையாள அட்டை இலக்கம் போன்ற விவரங்களை. குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் உடன் பதிவு செய்து கொள்ளுமாறு குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை வணபிதா ஆர். நேசராஜா அடிகளார் கோரியுள்ளார்.

(202-51)

# உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள்

வலி.வடக்கு, மார்ச்.2

யாழ். மக்கள் வசந்த எழுச்சிப் பேரவை ஏற்பாட்டில் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* மானிப்பாய் றெட்றேஞ்சல் வி.க. எதிர் மூளாய் வளர்மதி வி.க.
* குப்பிளான் விக்கினேஸ்வரா வி.க. எதிர் சித்தங்கேணி கலைநகர் வி.க.

(202-86)

* * *

யாழ் மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி யங் லயன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* கரவெட்டி செஞ்சுடர் வி.க. எதிர் வதிரி டயமன்ஸ் வி.க.
* கரணவாய் வடக்கு நியூட்டன் வி.க. எதிர் கரவெட்டி கலட்டி ஐக்கிய வி.க.

(202-86)

# நல்ல விடயங்களைச் சிந்திப்பது மட்டுமன்றி மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளவும் வேண்டும்

## ஆறு.திருமுருகன் வேண்டுகோள்



நல்ல விடயங்களைச் சிந்திப்பது மட்டுமல்ல. தான் சிந்தித்த நல்லவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதும் முக்கியமான விடயம். நாம் எப்போதும் அவலத்தையே சந்தித்துக் கொண்டிருப்பதால் எமது மனங்களில் புதிய சிந்தனைகள் வந்து சேர்வது கடினம். இவ்வகையில் நல்லவைகள் நடந்து கொண்டிருந்த முந்தைய காலத்தில் தான் சந்தித்த அனுபவங்களையும், நல்லறிஞர் நூல்களில் இருந்து பெற்றுக் கொண்டவற்றையும் நூலகத்தில் சிந்தனைக் களஞ்சியம் என்ற பெயரில் நூலாசிரியர் தந்துள்ளார். இது சமூகத்திற்குச் செய்யும் பெருந்தொண்டு.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு திருமுருகன் இவ்வாறு கூறினார்.

வே.தனபாலசிங்கத்தின் 'சிந்தனைக் களஞ்சியம்' நூல்வெளியீட்டு நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அண்மையில் மல்லாகம் மகா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் மா.நாகேந்திரசீலன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய ஆறு. திருமுருகன் மேலும் கூறியவை வருமாறு:

ஒரு காலத்தில் அறிவைச் சேகரிப்பது மிகவும் கடினமான வேலையாக இருந்தது. சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் யாழ்ப்பாணத்தில் பண்டித வகுப்பிற்கு கற் பித்து விட்டு மாட்டு வண்டியில் திரும்பி வருவார். அப்போதெல்லாம் மாட்டுவண்டியின் பின்னால் சுன்னாகம் வரை ஓடிவந்தபடியே தமது சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து கொண்டதைப் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை தமது நூலிற் குறிப்பிட்டுள்ளார். இன்றோ வீட்டில் இருந்த படியே அறிவைச் சேகரிக்கக் கூடிய வழிகள் இருந்தபோதும் மாணவர்கள் எவ்வளவு தூரம் தயாராக இருக்கிறார்கள் என்பது கேள்விக்குரியதாகும் - என்றார்.

இவ்விழாவில் நயப்புரை ஆற்றிய வைத்திய கலாநிதி க.இளங்கோ ஞானியார் தமிழர்களிடம் பெருந்தொகையான நூல் கள் உள்ளன. அவற்றுள் எதைப்படிக்க வேண்டும் எப்படிப் படிக்க வேண்டும் என்று வழி காட்டுவதாகச் சிந்தனைக் களஞ்சியம் உள்ளது. விஞ்ஞானத்துறையில் மனம் பற்றிய ஆய்வு இன்றும் குழந்தை நிலையிலேயே உள்ளது. ஆனால் எமது இலக்கியகர்த்தாக்களும் அனுபூதிமான்களும் மனம்பற்றிய கருத்துக்களைக் கூறியதோடு மனத்தை அடக்கிப் பலசாதனைகளையும் நிலைநாட்டியுள்ளனர். மனத்தை எவ்வாறு நல்வழியில் செலுத்துவது என்பதையே இந்நூலும் கூறுகிறது - என்றார்.

நிகழ்வில் ஆசிரியர் ம.பா.மகாலிங்கசிவம், தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

(202-55)

# யாழ்ப்பாணம் மாநகர சபைப் பிரிவுக்குட்பட்ட நலன்புரி நிலையங்களில் 89 குடும்பங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் நலன்புரி நிலையங்களில் 89 குடும்பங்களைச் சேர்ந்த 321 பேர் தங்கியுள்ளார்கள் என யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் புள்ளி விவரக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் பாடசாலை நலன்புரி நிலையத்தில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 118 பேரும் யாழ்.புனித மரியாள் பாடசாலை நலன்புரி நிலையத்தில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேரும்-

யாழ்.கதீஜா முஸ்லிம் பாடசாலை நலன்புரி நிலையத்தில் 17 குடும்பங்களைச் சேர்ந்த 92 பேரும் குருநகர் நீதிமன்ற வளாக நலன்புரி நிலையத்தில் 27 குடும்பங்களைச் சேர்ந்த 76 பேரும் தங்கியுள்ளார்கள்.

(202-300)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வைத்திய சேவை
# பிலிப்ஸ் நேசிங் ஹோம்
# Phillip's Nursing Home

**நியாயமான கட்டணத்தில் தரமான சேவை**

* வெளிநோயாளர் பிரிவு:
  காலை 8 மணி - 1.00மணிவரை
  பி.ப. 3.30 மணி - 7.30மணிவரை
* இரத்தம், சிறுநீர், சளி, மலம் பரிசோதனை (கொம்பியூட்டர் மயமான இயந்திரம் மூலம்)
* யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்களால் பார்வையிடப்படும்.
* சுத்தமான, சுகாதாரமான வார்ட் வசதிகள்
* வைத்திய நிபுணர் ஆலோசனை

பொதுவைத்தியம், சத்திர சிகிச்சை, மகப்பேற்று வைத்தியம், என்பு முறிவு நெரிவு சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை குழந்தைகள் வைத்தியம்.

**எங்கள் நோக்கம் உங்கள் சுக வாழ்வு**

228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு: தூர இடத்து நோயாளர்கள் யாழ்.- கச்சேரி மினிபஸ் சேவை மூலம் ஆஸ்பத்திரி வாசலிலேயே இறங்கமுடியும்.
T.P.: 021 222 4172
(சி/557157)


## பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தீ விபத்து

வவுனியா,மார்ச் 2

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் நேற்று முன்தினம் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த பல குடும்பங்கள் இந்த நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில் ஆறு மாத காலத்திற்குள் 3 தடவைகள் இங்கு தீப்பிடித்து முற்றாக அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் பாரிய தீ விபத்து ஏற்பட்டது. இதில் முதலாவது யுனிட்டில் உள்ள 8 நிலைகள் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ள. இதனால் 48 குடும்பங்களைச் சேர்ந்த 145 பேர் பாதிக்கப்பட்டு இருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களின் உடைமைகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகியுள்ளதாகவும், அவர்களை வேறு இடத்தில் தற்காலிகமாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (202)

## முல்லையிலிருந்து மற்றொரு தொகுதியினர் திருமலைக்கு

திருகோணமலை,மார்ச் 2

முல்லைத்தீவில் இருந்து ஆறாவது தொகுதியாக காயமடைந்த 252 பேரும் மற்றும் உறவினர்களும் நேற்று முன்தினம் திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் புதுமாத்தளன் பகுதியில் இருந்து இவர்கள் கப்பல்மூலம் அழைத்து வரப்பட்டனர்.

அவர்கள் உடனடியாகவே வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர். (அ-1-151)

## சுயதொழில் கொடுப்பனவு

மண்டுவில்,மார்ச் 2

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் 2ஆம் கட்ட சுய தொழில் நிவாரணக் கொடுப்பனவுக்கான அனுமதிகள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்டோர் தமது ஆள் அடையாள அட்டை, குடும்ப பங்கீட்டு அட்டை சகிதம் தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் எதிர்வரும் திங்கட் கிழமை தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

இ.சரஸ்வதி (சரசாலை தெற்கு), ம.புஷ்பராணி (மீசாலை கிழக்கு), இ.தங்கேஸ்வரி (மீசாலை கிழக்கு, பிள்ளையார் கோயிலடி), சி.செல்லம்மா (சாவகச்சேரி சிவன் கோயிலடி), எ.இலட்சுமி (மீசாலை கிழக்கு), சி.மயிலி (மந்துவில் கிழக்கு, கொடிகாமம்), மு.சீதேவி (கைதடி கிழக்கு, கள்ளி நகர்), சு.பத்மாவதி (கச்சாய் வீதி, சாவகச்சேரி), நி.யோகாம்பாள் (கைதடி கிழக்கு), க.ஈஸ்வரி (கைதடி மேற்கு), ப.இலட்சுமி (குடமியன், வரணி), பே.செல்வராணி (அரசடி வீதி, சங்கத்தானை), க.தர்மலிங்கம் (கைதடி தென்கிழக்கு), க.பரமேஸ்வரி (குடமியன், வரணி). (202-59)

## மெய்வன்மைப் போட்டியும் தொடக்க விழாவும்

யாழ்ப்பாணம்,மார்ச் 2

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியும், கணனி வள நிலையம், சமையலறை ஆகியவற்றின் திறப்பு விழாவும், போட்டோப் பிரதி சேவை, ஆய்வுகூடத் தொகுதி, மின்னிணைப்பு ஆகியவற்றின் தொடக்க விழாவும் நடைபெறவுள்ளன.

இந்த விழாக்கள் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மைதானம், வளாகம் என்பவற்றில் நடைபெறவுள்ளன.

அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் பிரதம விருந்தினராகவும், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (204-267)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் மாணிக்கம் நித்தியானந்தன் (நித்தி)

மலர்வு 15.09.1957

உதிர்வு 31.01.2009

இதயக் கோயிலில் இதய தீபம் அணைந்து
இன்றுடன் 31 நாள்கள் ஆனதோ
நேற்றுப் போல் இருக்குதையா!
இன்னும் பலகாலம் அம்மாவோடு வாழ்ந்திருப்பீர்கள்
என எண்ணியிருந்தோம்.
நித்தி அண்ணா எங்குதான் சென்றீர்கள்
எம்மை விட்டு!

படைத்தவனுக்கே பொறுக்கவில்லையா?
உங்களை அம்மாவிடம் இருந்து ஏன் பிரித்தானோ?
ஆறாத் துயரில் அம்மாவை ஆழ்த்திவிட்டு
நீளாத் துயில் கொண்டீர்களே!
வேதனை என்றும் விலகாது!
வழிமீது விழி வைத்தோர் வாரானோ
நித்தி அண்ணா!

ஓம் சாந்தி!

சாந்தலிங்கம் தர்சினி
குடும்பத்தினர்.
பாண்டியன் தாழ்வு.

அம்மன் தொண்டர்.

(82981)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1067 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் 02 06 10 18

27-02-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 500507987 - 500528133

ஜக்பொட் பரிசு ரூபா. 10,840,975/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 216,555 | 20/- | 4,331,100/- |
| 2 இலக்கங்கள் | 19,865 | 40/- | 794,600/- |
| 1 இல. + லக்கினம் | 19,671 | 60/- | 1,180,260/- |
| 2 இல. + லக்கினம் | 1,835 | 200/- | 367,000/- |
| 3 இலக்கங்கள் | 534 | 1000/- | 534,000/- |
| 3 இல. + லக்கினம் | 43 | 10,000/- | 430,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 10,840,975/- | - |
| மொத்தம் | | | 8,236,960/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 258,511 | | 8,736,960/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 11,324,400/-

தொடர் இலக்கம் 500516328 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2009 மார்ச் 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| அம்பாறை | 500511082-1-14 |
| மொனராகலை | 500515322-8-07 |
| கம்பஹா | 500524712-4-09 |
| புத்தளம் | 500514593-6-22 |
| திருகோணமலை | 500518041-7-38 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 * 12 * 1939



மறைவு 05 * 03 * 2006

அமரர் செல்லையா சபாரட்ணம்

(கமநல அபிவிருத்தித் திணைக்கள இளைப்பாறிய பதவிநிலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்)
திதி: சஷ்டி

பேச்சினிலே இனிமை கொண்டாய்
பார்வையிலே கனிவை கொண்டாய்
பழகியோர் மனதிலெல்லாம்
பண்புடையாய் என்றானாய்
எமையெல்லாம் கலங்கவைத்து
உந்தன் விழி மூடியதேனோ?
நீண்ட துயிலில் நீங்கள் ஆனாலும்
நாம் உங்களை என்றும் மறவோம்.

'கமலை',
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## விண்ணக வாழ்வின் முதலாம் வருட நினைவஞ்சலி

அன்னை மடியில் 01 * 04 * 1956



ஆண்டவன் மடியில் 02 * 03 * 2008

அருட்சகோதரி இக்னேசியா ஆசைப்பிள்ளை

எமது அருட் சகோதரியின் உடல் எம்மை விட்டுப் பிரிந்தாலும் அவரது ஆன்மா என்றும் எம்மோடு ஒன்றித்திருக்கும்

"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்" என்ற இயேசுவின் மெய் வார்த்தையில் அவரது ஆன்மா இளைப்பாறுகை அடைய ஆண்டவரை வேண்டி நிற்கின்றோம்.

இவரது பிரிவால் துயருற்றிருக்கும்.....
திரு. திருமதி. இமெல்டா பெல்சியன், சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.
நெடுந்தீவு.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



திரு சுப்பிரமணியம் திருநாவுக்கரசு — திருமதி திருநாவுக்கரசு இலட்சுமி

தோற்றம் 22*09*1929 மறைவு 29*01*2009 — தோற்றம் 15*02*1931 மறைவு 31*01*2009

அமரர்களின் மரணச்செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் தந்தி மூலமாகவும் ஆறுதல் கூறியோருக்கும் ஏனைய பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது குடும்ப விளக்குகளின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.02.2009 சனிக்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. இன்று(02.03.2009) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.28, வளாக வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்கவீனமுற்ற நபர்கள் உள்ள குடும்பங்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு

மண்டுவில், மார்ச் 2

சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சினால் மகிந்தசிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக 3ஆயிரம் ரூபா வழங்குவதற்கான அனுமதிகள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்குக் கிடைத்துள்ளது.

கீழ் குறிப்பிட்டோர் தென்மராட்சிப் பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வைரவன் மார்க்கண்டு (மந்துவில் கிழக்கு, கொடிகாமம்), இரத்தினம் கந்தசாமி (கச்சாய் தெற்கு, கொடிகாமம்), தங்கராசா பவளநாயகி (உதயசூரியன், சாவகச்சேரி), வி.சுந்தரலிங்கம் (மந்துவில் கிழக்கு, கொடிகாமம்), செல்லன் சபாநாயகம் (சரசாலை தெற்கு), திருமேனி புஸ்பராணி (கைதடி வடக்கு) நாகராஜா அந்தோனிராஜ் (நாவற்குழி சேச்சடி, கைதடி).

(202-59)

## வீதிகள் சேதம்

வண்ணை, மார்ச் 2

வண்-வடமேற்குப் பத்திரகாளி கோயில் வீதி மற்றும் வள்ளுவர் சனசமூக நிலையப் பகுதிகளில் அமைந்துள்ள வீதிகள் 'நிஷா' புயல் மற்றும் வெள்ளம் காரணமாக மிகவும் சேதமடைந்துள்ளன.

இவ்வீதிகளைத் தினமும் பயன்படுத்தும் மாணவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதியில் அமைந்துள்ள சிறுகுளம் மற்றும் பெரிய வடிகால் என்பனவும் புயல் வெள்ளங்களால் சேதமடைந்து காணப்படுகின்றன. (202-160)

## கிணறுகள் இறைப்பு

சித்தங்கேணி, மார்ச் 2

'நிஷா' அனர்த்தத்தால் பாதிப்புற்ற கிணறுகள் மானிப்பாய்ப் பிரதேச சபையினால் இறைத்துத் துப்பரவு செய்யப்பட்டுள்ளன.

மானிப்பாய் பட்டணத்தில்7 கிணறுகளும்- பண்டத்தரிப்புப்பட்டணத்தில் 4 கிணறுகளும், மானிப்பாய் கிராமத்தில் 12 கிணறுகளும், பண்டத்தரிப்புக் கிராமத்தில் 9 கிணறுகளும் ஆக 32 பொதுக் கிணறுகளும்-

மானிப்பாய்ப் பட்டணத்தில் -24 கிணறுகளும், மானிப்பாய்க் கிராமத்தில்- 27 கிணறுகளும், பண்டத்தரிப்புப் பட்டணத்தில்- 56 கிணறுகளும், பண்டத்தரிப்புக் கிராமத்தில் 26 கிணறுகளும் ஆக 133 தனியார் கிணறுகளும் இறைத்துத் துப்புரவு செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்தார்.

(202-9-112)

# பட்டினியால் பத்துச் சிறுவர்கள் உயிரிழப்பு!

வவுனியா, மார்ச்2

முல்லைத்தீவுப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மோதல்கள் காரணமாக உணவுப் பொருள்கள் கிடைக்கப் பெறாமல் 10 சிறுவர்கள் உட்பட 18பேர் உயிரிழந்துள்ளனர் என்று இணையத் தளங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள வழிவகையின்றி பதுங்கு குழிகளிலும் மற்றும் வீடுகளிலும் இவர்கள் பட்டினிச்சாவை எதிர்கொண்டு சடலங்களாகக் கிடக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சியான உணவின்மை, நீரிழப்பு, காய்ச்சல் போன்ற நோய்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல்- நோய் எதிர்ப்புத் தன்மையை இழந்து விட்டதனாலும்- இவர்கள் உயிரிழந்திருக்கின்றனர் என மருத்துவ அறிக்கைகளை மேற்கோள்காட்டி இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் விவரம் வருமாறு:

**முள்ளிவாய்க்கால்ப் பகுதியில்**

கனகசபை பிரவீணன் (வயது 12), சிவராசா கண்ணன் (வயது 38).

**புதுக்குடியிருப்பு, இரணைப்பாலையில்**

சிவநேசன் சுலக்சன் (வயது 12), மகேஸ்கரன் கர்ணன் (வயது 15), கருணாகரன் பிருந்தா (வயது 17), கந்தைஞானி மனோகரன் (வயது 32).

**மாத்தளன் பகுதியில்**

சபேசன் சிந்து (வயது ஒன்றரை), பாலச்சந்திரன் சிவரூபன் (வயது 13), மகிந்தன் விநோதா (வயது 48), தேவராசா கஜேந்திரன் (வயது 36), திருச்செல்வம் சிவகணேசன் (வயது 42).

**அம்பலவன் பொக்கணை இடைக்காடுப் பகுதியில்**

சிவராசா சக்தி கணேசன் (வயது 03), மலர்வேந்தன் மகிழன் (வயது 12), யோகராசா ரவி (வயது 18).

**வலைஞர்மடம் பகுதியில்**

அனித் கிப்சன் (வயது 14), பரமநாதன் புவியரசன் (வயது 17), சிவகடாட்சம் றமணன் (வயது 23), சிவகடாட்சம் கார்த்திகாயினி (வயது 14).

ஆகியோரே பட்டினியால் உயிரிழந்தவர்கள் என்று இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டன.

இதேவேளை- பட்டினி காரணமாக மயக்க மடைந்த 5 பேர் மாத்தளன் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் ஒரு தகவல் தெரிவித்தது.

(அ-2)

# வன்னியிலிருந்து சுமார் 85,000 பேர் வவுனியாவுக்கு வருவர் என எதிர்பார்ப்பு

வவுனியா, மார்ச் 4

எதிர்வரும் வாரங்களில் வன்னிப் பகுதியிலிருந்து 85 ஆயிரம் பேர் வரை விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்கு வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் ஊகம் வெளியிட்டுள்ளது.

அரசு ஒதுக்கியுள்ள 300 ஏக்கர் நிலப் பரப்பில் சுமார் 42 ஆயிரம் பேரை தங்க வைக்க முடியும் என்றும்-

இந்த இடவசதியை இரட்டிப்பாக்க வேண்டிய தேவை எதிர்வரும் வாரங்களில் எழலாம் என்று அகதிகளுக்கான ஐ.நா. அலுவலகப் பேச்சாளர் வில்லியம் ஸ்பின்ட்லர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

எதிர்வரும் வாரங்களில் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் எஞ்சியுள்ள பிரதேசங்களையும் கைப்பற்றி விடுவர் என்று எதிர்பார்க்கப்படுவதால், அப்பகுதியில் சிக்குண்ட மக்கள் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வருவரென நம்பப்படுவதாக வில்லியம் ஸ்பின்ட்லர் மேலும் கூறினார்.

இதேவேளை, வன்னிப் போர்ப் பிரதேசத்தில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகப்பட்டுள்ளதாக உதவும் அமைப்புக்கள் மதிப்பிட்டுள்ளன.

(அ-2)



பருத்தித்துறை- கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை சேகரத்தின் புதிய முகாமைக் குருவாகப் பொறுப்பேற்றுள்ள அருட்திரு என்.அருள்நாதன் கட்டைவேலி மெதடிஸ்த தேவாலயத்தில் முதலாவது ஆராதனையை நடத்தினார்.ஆராதனை நிகழ்வில் பெண்கள் துதிப் பாடல்களைப் பாடுவதையும் குரு மறையுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

(236)

## 'நிஷா'வால் பாதிக்கப்பட்ட நெடுந்தீவு மக்களுக்கு நிவாரண உதவி

நல்லூர், மார்ச் 2

நெடுந்தீவில் 'நிஷா' அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையால் நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிவாரண உதவிப் பொருள்களை நெடுந்தீவுப் பிரிவினர் பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று வழங்கியதாக நெடுந்தீவு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் எ.அருந்தவசீலன் தெரிவித்தார். பாதிக்கப்பட்ட 185 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (202-111)

## தென்னைப் பயிர்ச் செய்கை தொடர்பான கருத்தரங்கு

சித்தங்கேணி, மார்ச் 2

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் 'நிஷா' அனர்த்தத்திற்குப் பின்னரான தென்னை உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு தென்னைப் பயிர்ச்செய்கை பற்றிய கருத்தரங்குகளை நடத்துவதற்குத் தென்னை அபிவிருத்திச் சபை ஏற்பாடுகள் செய்துள்ளது.

அதன்படி இரண்டு கிராமங்களை இணைத்து அந்தந்தப் பகுதி விவசாயசம் மேளனங்கள் ஒழுங்குகளை மேற்கொண்டு பிரதேச செயலர் ஊடாக தென்னை அபிவிருத்திச் சபைக்கு அறிவிக்குமாறு தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஜெகநாதன், கேட்டுள்ளார்.

(202-112)

## சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களின் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் கலந்து கொள்வார்.

இக் கூட்டத்தில் சங்கத்திற்கான புதிய இயக்குநர் சபைத் தெரிவும் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## குளங்கள், வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன

சித்தங்கேணி, மார்ச் 2

உலக உணவுத் திட்டத்தில் இவ்வாண்டு செயற்றிட்டத்தின் கீழ் வலி. தென்மேற்குப் பகுதியில் உள்ள குளங்கள், வீதிகள் என்பன புனரமைக்கப்படவுள்ளன.

புனரமைக்கப்படவேண்டிய வீதிகள், குளங்கள் தொடர்பான விவரங்களை சமூக அமைப்புகள், விவசாய சம்மேளனங்கள் ஊடாகப் பிரதேச செயலகத்திற்கு அறிக்கை தரப்படும் சந்தர்ப்பத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (202-9-112)

## கசிப்பு விற்றவருக்கு ஒரு லட்சம் அபராதம்

வலி.வடக்கு, மார்ச் 2

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு மல்லாகம் நீதிமன்றம் ஒரு லட்சத்து எழுபதாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லூடாலை தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் உடுவில், அம்பலவாணர் வீதியில் உள்ள வீட்டைச் சோதனையிட்ட போது 10 போத்தல் கசிப்புடன் அதே இடத்தைச் சேர்ந்த குழந்தைவேலு சதீஸ் என்பவரைக் கைது செய்தார்கள்.

மல்லாகம் நீதிமன்றில் பொலிஸாரினால் ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து மல்லாகம் மாவட்ட நீதிபதி ரி.ஆர்.பிரபாகரன் குறிப்பிட்ட அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

(202-86)

# விளையாட்டுக்கள் உடல், உள ஆரோக்கியத்துடன் சகோதர மனப்பாங்கையும் வளர்க்கின்றன

## டாக்டர் சந்திரிகா கருத்து

யாழ்ப்பாணம், மார்ச்2

விளையாட்டு உடல் ஆரோக்கியத்துக்கு இன்றியமையாததாக இருப்பதுடன், ஆளுமையையும், உறுதியையும் விருத்தி செய்கின்றது. இது வெற்றி, தோல்வியைச் சமமாக மதித்து நல்ல சகோதர மனப்பாங்கை வளர்க்கின்றது.

இவ்வாறு பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் சந்திரிகா ஞானேஸ்வரன் கருத்துத் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கான மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்தப்போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்தக் கல்லூரி கடந்தகாலம் தொட்டுக் கல்விமான்களையும், பல விளையாட்டு வீரர்களையும் உருவாக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதற்குப் பல அதிபர்களும், ஆசிரியர்களும் காரணகர்த்தாக்களாக இருந்துள்ளனர்.

இக்கல்லூரியில் அமைந்துள்ள நூல் நிலையத்தைச் சாதகமாகக் கொண்டு மாணவர்கள் வாசித்துப் பயன்படுத்திக் கொள்வதுடன், ஒழுக்கமிக்க மாணவர்களாகவும், மற்றவர்களுக்கு முன் மாதிரியாகவும் நடந்து கல்லூரிக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

இங்கு நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் சகல மாணவர்களுக்கும் ஏதோ ஒரு நிகழ்ச்சியில் பங்கு பற்றக்கூடிய எவு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தியமை சிறப்பம்சமாகும்.

இந்தப் போட்டி சிறப்பாக அமைவதற்கு காரணகர்த்தவாக விளங்கிய அதிபர், ஆசிரியர்கள், மேற்பார்வையாளர் கல்விச் சமூகத்தினர் அனைவரையும் பாட்டுகின்றேன்- என்றார்.

இந்தப் போட்டியில் தலைமை உரையாற்றிய வண. [illegible] கருத்துத் தெரிவிக்கையில்:

சின்னஞ்சிறிய கள்ளம், கபடமற்ற மாணவர்களின் முன்னேற்றத்திற்காகவும், உடல் ஆரோக்கியத்திற்காகவும் நாம் பல வழிகளில் முயற்சி எடுத்து வருகின்றோம்.

பெற்றோர்கள் பிள்ளைகள் விளையாடுவதற்குச் சர்ந்தர்ப்பத்தை வழங்கி மனநிலை மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஆவண செய்யவேண்டும்- என்றார்.

இந்த நிகழ்வில் கல்லூரி அதிபர் என்.ஏ. விமலேந்திரன் உரையாற்றுகையில்:

இன்றைய காலத்தில் மாணவர்கள் புத்தகமும், கையுமாக இருக்கின்றனர். பகலில் பாடசாலைப் படிப்பு, மாலையில் ரியூசன் படிப்பு எனத் திரிவதால் விளையாடுவதற்கு நேரம் கிடைப்பதில்லை.

இவ்வாறான விளையாட்டுப் போட்டிகள் மூலம் தங்கள் ஆளுமைத் திறமைகளைப் பல வழிகளிலும் வெளிப்படுத்தியமை பெற்றோருக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

மாணவர்களுக்கு உடற்பலத்தையும், உள்ளத்தின் வலிமையையும் வளர்ப்பதற்கு அரிய சந்தர்ப்பமாக இந்த விளையாட்டு நிகழ்ச்சிகள் அமைந்துள்ளது- என்றார்.

(204-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்விச்சூழலுக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## சிவராசா சாமினி

பெறுபேறு: 3ஏ (வரணி மகாவித்தியாலயம்)

எனது தந்தை தச்சுவேலை செய்பவர். எனது அம்மா ஓர்ஆசிரியை. நான் எனது சாதாரணதரப் பெறுபேற்றிற்கமைய கலைப்பிரிவு படிக்கலாம் என்ற காரணத்தால் கலையைப் படித்தேன். எனக்கு விஞ்ஞானம் படிக்க வேண்டும் என்ற அவா இருந்தது. ஆனால் வரணி மகாவித்தியாலயத்தில் விஞ்ஞானப் பிரிவு இல்லாதமையால் தொடர்ந் தும் கலைப்பிரிவு படிக்க விருப்பம் கொண்டேன். எனக்கு உறுதுணை யாக அம்மா இருப்பார். விளக்கமற்ற பகுதிகளை அம்மா சொல்லித் தரு வார்.

எமது பிரதேசம் மிகவும் பின்தங்கிய பிரதேசம். இதனால் கூடிய கவனம் எடுத்துப் படித்தேன். தனியார் கல்வி நிலையமும் எனக்குச் சிறந்த வழிகாட்டியது. அத்துடன், நூலகம் பெரிதும் உதவியது. அங்கு நூலகர் உட்பட ஏனைய வர்களும் உதவினர்.

எனது கல்விக் காலத்தில் போட்டிகளில் பங்குபற்றாமல் பாடங்களில் கூடிய கவனம் செலுத்தினேன். பாடசாலையில் கல்வி தொடர்பான கருத்தரங்குகளை, பாடசாலை நாள்கள் மற்றும் லீவு நாள்களில் வைத்து எமது கல்விக்கு உரமூட்டினார்கள்.எமது பிரதேச பத்திரிகையான உதயன் பத்திரிகையில் பிரசுரமான கல்விப் பகுதி கூடுதலாக உதவியது.

எனவே இந்த வேளையில் எம்மை வழிப்படுத்தி ஊக்கமளித்த ஆசிரியர்கள், அதிபர் யாவருக்கும் எனது நன்றிகளை உதயனூடாகச் செலுத்துவதில் பெருமையடைகிறேன்.



## ரம்ஜா இராசமோகன்

பெறுபேறு: 3ஏ (சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்)

எனது கிராமம் சாவகச்சேரி கல்வயல் ஆகும். நான் தரம் 1-13 வரை சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்திலேயே கல்வி பயின்றேன். ஆரம்பக்கல்வியை மிகச் சிறப்பாகக் கற்று புலமைப் பரிசில் பரீட்சையிலும் சித்தியடைந்தேன். ஆயினும் என்னுடைய குறிக்கோள் இவ்வளவும் கற்றுத்தந்த எனது பாடசாலையை விட்டு வேறு பாடசாலைக்குச் சென்று கல்வி கற்பதில்லை என்பதாகும். எனது கொள்கைக்கு ஊக்கமளித்தவர்களுள் காலஞ்சென்ற டொக்டர் பேதுறுபிள்ளை பிலிப்ஸ் அவர்களும் ஒருவராவார்.

உயர்தரத்திலும் கலைப்பிரிவில் தமிழ், இந்துநாகரிகம், அரசறிவியல் ஆகிய பாடங்களில் 3ஏ பெற்று மாவட்டநிலை 18 ஐ அடைந்து பெற்றோருக்கும் பாடசாலைக்கும், சமூகத்திற்கும் பெருமை பெற்றுக் கொடுத்ததையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எனது பெற்றோரின் வழிகாட்டல்களும் என்னை இத்தகைய நிலைக்கு இட்டுச் சென்றன. நான் எனக்கு விரும்பிய நேரங்களில் படிப்பேன். அதிலும் தொலைக்காட்சி பார்த்தபடி படிப்பது எனக்குப் பழக்கமாகி விட்டது. படிப்பது மட்டுமன்றி விளையாடுவதிலும் ஆர்வம் காட்டினேன்.

சிறந்த பெறுபேற்றைப் பெறுவதற்கு வழிகாட்டிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சகநண்பர், நண்பிகள் ஆகியோருக்கும் ஞானோதயாக் கல்வி நிறுவன ஆசிரியர்களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். இத்தனைக்கும் காரணமாகி என்னை ஆசீர்வதித்த இறைவனுக்கும் நன்றி கூறுகிறேன்.



## தர்ஷிகா பன்னீர்ச்செல்வம்

பெறுபேறு: 3ஏ (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

ஆரம்பக்கல்வியை புலோலி மெ.மி.த.க பாடசாலையிலும் பின் 6-13 வரை வட இந்து மகளிர் கல்லூரியிலும் கற்றேன். சாதாரண குடும்பத்தில் பிறந்த நான் ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சையில் 6ஏ3பிசி எனும் பெறுபேற்றைப் பெற்றேன். பின் உயர்தரத்தில் கலைத்துறையைத் தெரிவு செய்து பல்கலைக்கழகம் செல்வதை இலட்சியமாகக் கொண்டு படித்தேன். புவியியல்,தமிழ், இந்துநாகரிகம் எனும் பாடங்களைத் தெரிவு செய்தேன்.

எனது இப்பெறுபேற்றிற்கு முழு ஒத்துழைப்பாக என் அம்மா இருந்தார். சிறு வயதிலேயே தந்தையைப் பிரிந்த நான் தாயின் அரவணைப்பிலேயே படித்தேன். எத்தனையோ சவால்களுக்கு மத்தியிலும் என் இலட்சியத்தை அடைய முயற்சி செய்தேன். அது நிறைவேறியதை இட்டுப் பெரு மகிழ்வடைகிறேன். என் பாடசாலை அதிபர், பாடஆசிரிசியர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரி யர்கள் காட்டிய அக்கறையும் ஆதரவும் நான் இப்பெறுபேற்றைப் எடுக்க வைத்தது. என் திறமைக ளுக்கு உந்து சக்தியாக விளங்கியவர் என் வகுப்பாசிரியர். ஆசிரியர்கள் அனைவருக்கும் என் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.



## சி.உஷா

பெறுபேறு: 2ஏபி (கரவெட்டி ஞானசாரியர் கல்லூரி)

எமது நாட்டின் யுத்த நிலைமை காரணமாக நான் எனது ஆரம்ப, இடைநிலைக் கல்வியைப் பல பாடசாலைகளில் கற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்தவகையிலே தரம் 9 இல் ஞானசாரியர் கல்லூரியில் இணைந்து கொண்டேன். உயர்தரக் கற்கைநெறியாக வர்த்தகத்துறையைத் தெரிவு செய்தேன். எனது இலட்சியம் 3ஏ பெற்று , மாவட்ட நிலை யில் முன்னணிப் பெறுபேற்றைப் பெறுவதாகும். இருந்தபோதிலும் 2ஏபியையே பெற முடிந்தது என்பது மன வருத்தத்தை தந்தது. ஆனால் இதனை ஒரு வெற்றியாகவே கருதுகின்றேன். ஏனெனில் பொருளாதாரக் கஷ்டத்தை எதிர்நோக்கும் எனது குடும்ப சூழ்நிலையில் இரண்டாவது தடவை பரீட்சைக்குத் தோற்றுவது என்பது சாத்தியமற்ற ஒரு விடயமாகும்.

நான் இந்தப் பெறுபேற்றைப் பெறுவதற்கு எனது பாடசாலை ஆசிரியர்கள்,அதிபர் , தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள், சகோதர சகோதரிகள் ஆகியோரின் சிறந்த வழிகாட்டலும், நிறைந்த ஊக்குவிப்புக்களுமே காரணமாய் அமைந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக கோவிற் கடவை சித்திவிநாயகரின் அருளும் ஆசியுமே இந்தப் பெறுபேற்றைப் பெற மூல காரணமாய் அமைந்தது என்பதை மகிழ்வோடு தெரிவிக்கின்றேன். எதிர்காலத்தில் வங்கித்துறையில் பணி புரிய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.



## பஞ்சாட்சரம் சர்வசொரூபி

பெறுபேறு: 2ஏபி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

மட்டுவிலைச் சொந்த இடமாகக் கொண்ட நான் ஆரம்பக் கல்வியை சந்திரமௌலீச வித்தியாசாலையிலும், உயர்கல்வியை சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் கற்றேன். அங்கு தமிழ்த்தின, ஆங்கிலதின, சமூகக் கல்வி, பொதுஅறிவு, ஆக்கத்திறன் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்கள் பெற்றேன்.

சாதாரணதரத்தில் 6ஏ4பி ஐப் பெற்றேன். உயர்தரத்தில் கலைப்பிரிவைத் தெரிவு செய்து தமிழ், புவியியல், வரலாறு ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன். என் உடலுக்கும் மனதுக்கும் இயன்ற வேளையில் கற்பேன். தாரமும் குருவும் தலைவிதிப்படி போல எனக்குப் பாடசாலையிலும், தனியார் கல்வி நிறுவனத்திலும் திறமையான ஆசிரியர்களிடம் கற்கும் நல்வாய்ப்புக் கிடைத்தது. வீட்டில் அன்பான பெற்றோரதும், சகோதரனதும், தாத்தாவினதும் அரவணைப்பும் அறிவுரைகளும் உரமாயின. தமிழ்ப் பரீட்சையன்று பகுதி-Iஇல் எதிர்பார்ப்பு வினாக்கள் பல வந்தும் ஒரு வினாவுக்கு விடையளிக்க நேரம் போதவில்லை. முதல் நாளிலேயே மனமுடைந்த என்னைப் பெற்றோர் தேற்றிய விதமும், எங்கள் குலதெய்வம் பன்றித்தலைச்சி அம்மனுடைய அருளும்தான் அடுத்த பகுதியை ஓரளவு செய்யவும் வரலாறு, புவியியல் பாடங்களை எதிர்கொள்ளவும் முடிந்தது. என் எண்ணம் போல தமிழ்ப்பாடத்தில் ஏ சித்தியைப் பெறமுடியாவிட்டாலும் வரலாறு, புவியியல் பாடங்களில் ஏ சித்தி பெற்றமை என் இலட்சியத்தை ஓரளவு நிறைவேற்றியுள்ளது.



## இராசகுமார் கவிதா

பெறுபேறு: 3ஏ (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி)

சிறுவயதிலிருந்தே எனக்கிருந்த ஆசை உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் ஏ தரச்சித்தி பெறவேண்டும் என்பதுதான்.

நான் படிப்பதற்கு தடையாக இருந்தவை எவை எனில் இடப்பெயர்வும், சச்சரவின்றி இருக்க சொந்தஇடம் இல்லை என்ற மனச்சோர்வும்தான். இவ்வாறான மனச்சோர்வுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து, எனக்கு ஊக்கமளித்தவர் எனது அண்ணா. அதையும் தாண்டி நான் நல்ல பெறுபேறு எடுக்க முக்கியமானவர்கள் பாடுபட்டு உழைத்து என்னைப் படிக்க வைத்த பெற்றோர்கள், கல்லூரி அதிபர், கல்லூரி ஆசிரியர்களான உஷா ஆசிரியர், சயந்தன் ஆசிரியர், இராஜேஸ்வரி ஆசிரியர் ஆகியோர் முக்கிய பங்கு வகிக்கின்றனர். அதுமட்டுமல்லாது பல வழிகளிலும் அறிவுரைகள் கூறி கற்றலுக்கு ஏணிப்படிகளாக இருந்த தனியார் கல்வி நிலைய ஆசிரியர்களான கே.எஸ். ரமணன் ஆசிரியர், ஜெசிதன் ஆசிரியர், பிரதீபன் ஆசிரியர் ஆகியோருக்கும் நான் ஆரம்பக்கல்வி பயின்ற அளவெட்டி அருணாசலம் வித்தியாலய ஆசிரியர்களுக்கும், எனது கல்விக்கு உதவி புரிந்த சகநண்பர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எதிர்காலத்தில் ஆசிரியர் பணிக்கு என்னை முழுமையாகத் தயார்ப் படுத்துவேன். அதன்மூலம் சமூகத்திற்கு சிறந்த சேவையாற்றி எனது குடும்பத்திற்கும், எனது பாடசாலைக்கும், வழிகாட்டிகளாக அமைந்தவர்களுக்கும் பெருமை சேர்ப்பதே எனது இலட்சியமாகும்.



## விஜிந்தா அன்ரனிதேவதாஸ்

பெறுபேறு: 3ஏ (சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயம்)

நான் ஆரம்பக்கல்வியிலிருந்து உயர்தரம் வரை சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலயத்தில்தான் எனது கல்வியைத் தொடர்ந்தேன். நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையவில்லை. அது எனக்குக் கவலையாக இருந்தது. பின்னர் சாதாரணதரப் பரீட்சையில் சித்திபெற்று உயர்தரத்தில் கலைப்பிரிவில் தமிழ், இந்துநாகரிகம், அரசியல் ஆகிய பாடங்களைத் தேர்ந்தெடுத்தேன். நான் பகல் நேரங்களில்தான் அதிகமாகக் கற்றேன். நான் பல்கலைக்கழகம் செல்ல வேண்டுமென்பது எனது பெற்றோரின் ஆசை. அதனால் நான் எப்படியாவது பல்கலைக்கழகம் செல்லவேண்டுமென்பதில் உறுதியாக இருந்து நன்றாக் கற்று 3ஏ பெறுபேற்றைப் பெற்றேன். பெற்றோரின் ஆசையை நிறைவேற்றியதில் எனக்கு மிகவும் சந்தோசம். என்னுடைய பெறுபேற்றை அறிந்ததும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன். இந்த வேளையிலே நான் சிறந்த பெறுபேற்றை பெறுவதற்கு மிகவும் ஊக்கமளித்த எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

**சந்திப்பும், படங்களும்:**
ஔண்யன், கிருஸ்ணன், கணேசமூர்த்தி, அருணன், சுமுகலிங்கம்.
**28**



## இராசேந்திரா கேமலா

பெறுபேறு: 3ஏ (வரணி மகாவித்தியாலயம்)

எனது ஆரம்பக்கல்வியை எனது அயலில் உள்ள குடமியன் அ.த.க. பாடசாலையில் தரம் 1-8 வரை பயின்றேன். பின்னர் வரணி மகாவித்தியாலயத்தில் தரம் 9 தொடக்கம் உயர்தரம் வரை கல்வி கற்றேன். எனது வீட்டில் கல்வி பயில அம்மா மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டார். பல்கலைக் கழகத்திற்கு என்னை அனுப்பவேண்டும் என்ற அவாவுடன் என்னை வழிப்படுத்தினார். எனது அப்பா புகையிரதத் திணைக்களத்தில் வேலை செய்தவர்.

பாடசாலையின் கல்விச் செயற்பாட்டில் எம்மை வழிப்படுத்தும் ஆசிரியர்கள் பாடங்களை அவதானத்துடன் கற்பித்தனர். தனியார் கல்வி நிலையத்தில் பிரத்தியேகமாகக் கல்வியைக் கற்றேன். பாடசாலை நூலகத்தையும் சாவகச்சேரி பிரதேச சபைப் பொதுநூலகத்தையும் நாளாந்தம் ஓய்வு கிடைக்கும்போது பயன்படுத்துவேன்.

நான் படிக்கும் காலத்தில் எனது குடும்ப வருவாயைப் பெருக்க எங்கள் காணியில் அம்மாவுடன் சேர்ந்து தென்னை மரங்கள் நாட்டி தண்ணீர் பாய்ச்சுவது எனது நாளாந்தக் கடமையில் ஒன்றாகும். எனது அவா ஆசிரியராக வர வேண்டும் என்பதுதான். எனக்கு வித்திட்ட ஆசிரியர்கள், அதிபர் மற்றும் கல்விக்காகப் பாடுபட்ட அனைவருக்கும் நான் நன்றி உணர்வுடன் எதிர்காலத்தைக் கழிப்பேன்.



## டயானா துவான் புத்திரா

பெறுபேறு: 3ஏ (சுண்டிக்குளி மகளிர் பாடசாலை)

நான் சென்.அன்ரனிஸ் றோ.க.மகளிர் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்றேன்.நான் கலைப்பரிவைத் தெரிவு செய்து கொண்டேன். இதைத் தெரிவு செய்ததன் நோக்கம் தமிழ் பாடத்தில் கொண்ட ஆர்வம் ஆகும். தமிழ், அளவையியல், கிறிஸ்தவம் போன்றவற்றை நான் தெரிவு செய்தேன்.எனது ஆசிரியர்களின் வழிகாட்டலில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றேன். மற்றும் எனது அம்மாவின் ஆசையை நிறைவேற்ற அவர் தந்த ஊக்கமும் உந்துசக்தியாக விளங்கியது. குறுகிய காலத்துக்கு நாங்கள் வேறு இடத்தில் தங்கியிருந்தோம். இதனால் பாடசாலைக்கும், கல்வி நிலையத்துக்கும் பேருந்தில் வருவது கஷ்ரமாக இருந்தது. ஆயினும் நான் சிரமம் பார்க்காது துவிச்சக்கர வண்டியில் சென்று கல்வியை தொடர்ந்தேன்.

உயர்தரப் பரீட்சையில் அதிக பெறுபேறுகளைப் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் கல்வியை தொடங்கினேன். இத னால் நான் பாடசாலைப் பரீட்சை மட்டுமன்றி எனது பாடம் சம்மந்தமான எந்தவொரு பரீட்சை யானாலும் ஆர்வத்துடன் அதை எதிர்கொள்வேன். கடந்தகால வினாக்களை மீள்ச் செய்து பார்ப்பேன். அதிகாலையில் எழுந்து படித்தவற்றை மீள நினைவு படுத்துவேன். நான் அனைத்துப் பாடங்களையும் விருப்பத்துடன் கற்றேன். எல்லாவற்றையும் கற்றதனால் பரீட்சை வினாக்களை இலகுவாக எதிர்நோக்க முடிந்தது. சிறந்த பெறுபேற்றை எதிர்பார்த்தேன். நான் பல்கலைக்கழகம் சென்று எனது கல்வியைத் தொடர்ந்து விரிவுரையாளராக வரவேண்டும் என விரும்புகின்றேன்.

நான் சிறந்த பெறுபேறு பெற்றமையினால் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். நான் முதலில் இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். மற்றும் எனக்கு ஊக்கம் தந்த ஆசிரியர்கள் எனது பெற்றோர், சகோதரர்கள் எனது அனைத்து உறவினர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.



## தேவகி தேவராஜா

பெறுபேறு: ஏ2பி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)

நான் வட இந்து மகளிர் கல்லூரியிலேயே தரம் ஒன்றிலிருந்து உயர்தரம் வரைக்கும் கல்வியைப் பயின்றேன். என் பாடசாலை மாதாவின் அருளினால் தரம் 5 புலமைப்பரீட்சையில் சித்தியெய்தினேன். அதன்பின் ஜி.சீ.ஈ சாதாரண தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்றேன். உயர்தரத்தில் எனது சுய விருப்புக்கு இணங்க வர்த்தகப்பிரிவைத் தேர்ந்தெடுத்து ஏ,2பி பெறுபேற்றைப் பெற்றேன். எனது வீட்டுச் சூழ்நிலை காரணமாக எப்படியாவது படித்துப் பல்கலைக்கழகம் செல்லவேண்டிய கட்டாயம் இருந்தது. ஆயினும் எந்நேரமும் முழு மூச்சாகக் கல்வி கற்கவில்லை. ஒரு நேரம் இரண்டு மணித்தியாலங்கள் கல்வி கற்க வேண்டும் என நினைத்தால் அந்த நேரத்தை உரியவாறு திருப்தியுடனும், சரியான விளக்கத்துடனும் கற்றேன். அத்துடன், பாடசாலையிலும் தனியார் கல்வி நிலையத்திலும் ஆசிரியர்கள் கற்பிக்கும்போது தெளிவாகப் புரிந்துகொள்வதனால் வீட்டில் என்னை வருத்திப் படிக்க வேண்டி இருந்ததில்லை. எதிர்காலத்தில் ஒரு சிறந்த கணக்காளராக வர விரும்புகிறேன்.

எனது பெறுபேற்றிற்கு உறுதுணையாக இருந்த பெற்றோர்கள் , சகோதரர்கள், அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோம்பலும் சந்தோசமும் பசியைத் தூண்டும்

கேள்வி: பெண். வயது 45. நிறை 85 கிலோ. நிறை அதிகம் என்று அதனை குறைக்க உணவு முறை தந்திருக்கின்றார் எனது டாக்டர். அவர் தந்த உணவு முறையை பின்பற்றினால் அடிக்கடி பசிக்கிறது. பசி உணர்வை அடக்க மருந்துகள் உண்டா? அப்படி மருந்துகள் இருந்தாலும் அவை பாதிப்பு தரும் என்று எனது குடும்ப டாக்டர் பயமுறுத்துகின்றார். உங்கள் ஆலோசனை தேவை.

பதில் : பசி உணர்வை சமாளிக்க கற்றுக்கொள்வதுதான் நிறைகுறைக்கும் செயலில் வெற்றியின் முதல்படி. வழக்கமாக நாம் உண்ணும் உணவின் அளவை குறைக்க முயலும் போது பசி உணர்வு அதிகமாகவே தோன்றும். ஆனால் உண்மையான பசி உணர்வுக்கும் (HUNGER) - உண்ணவேண்டும் என்ற மனோவியல் வேட்கைக்கும் (PSY-CHOLOGICAL DESIRE TO EAT) உள்ள வித்தியாசத்தை புரிந்து



கொள்ளவேண்டும். இதை நன்றாக விளங்கிக் கொண்டால் பசி உணர்வை அடக்கும் மந்திரத்தை தெரிந்துகொள்ளலாம்.

பசி உணர்வின் படிநிலைகளை ஒரு போக்குவரத்து சமிக்ஞை விளக்கோடு ஒப்பிடலாம். பச்சை விளக்கு, சாப்பிடத் தொடங்கலாம் என்பதைக் குறிக்கும். மஞ்சள் விளக்கு, வயிறு நிரம்பும் நிலை வரப்போகின்றது என்பதை குறிக்கும். சிவப்பு விளக்கு, போதும் நிறுத்து என்பதைக் குறிக்கும். எமது உடலியல் இயக்கம் இந்த ஆரம்பி, நிரம்பிவிட்டது, நிறுத்து என்கின்ற சமிக்ஞைகளை காட்டுகின்ற மாதிரி இயங்குகின்றது. இதனைப் பின்பற்றினால் நிறை குறைப்பது என்பது பிரச்சினையில்லாத விஷயம். ஆனால், சொல்வது போல் அப்படி இலகுவான காரியமல்ல இது. சூழல், கவனச்சிதறல் என்பன இதனை நடக்கவிடாமல் தடுக்கப்பார்க்கின்றன. 'சாப்பிட ஆரம்பி' என்று பச்சை விளக்கு எரியத் தொடங்கும் போது நாம் உங்கள் SATIETY என்கின்ற சாப்பிட்ட திருப்தி என்பது - எவ்வளவு நேரம் வயிறு நிரம்பி இருக்கின்றது என்பதில் தான் தங்கியுள்ளது. அதாவது எவ்வளவு நேரம் சிவப்பு விளக்கு - பச்சை விளக்காக மாற முன்னர் - எரிந்து கொண்டிருக்கின்றது என்பதைக் குறிப்பிடலாம். இந்த நிலை ஏற்படுவதற்கு பல காரணங்கள் உள்ளன. ஹோர்மோன்கள், பௌதிக இயக்கங்கள் என்பன அவற்றுள் சில. உடலில் குளுக்கோசு அளவு குறையும்போது இந்த ஹோர்மோன்கள் இயக்கங்கள் தூண்டப்பட்டு பசி உணர்வு உசுப்பப்படுகிறது.

ஒவ்வொருவரும் பசி உணர்வால் மாத்திரமல்ல, வேறு காரணங்களாலும் உணவை நாடுகின்றார்கள்.

பசிக்கின்றதோ இல்லையோ சரியாக பகல் 12 மணிக்கு சாப்பிடுவபர்களும் உண்டு. இவர்களை - நேரத்துக்குச் சாப்பிடும் EAT BY THE CLOCK என்பார்கள் சிலர். MOOD எனப்படும் உணர்வு தாக்கங்களுக்கு ஏற்ப இவர்கள் சாப்பிடாமல் இருக்க வேண்டிய சூழ்நிலை காரியாலயத்திலோ, வீட்டிலோ இருக்கும். எனவே பசி உணர்வு மிகவும் அதிகரித்த பின்னர் தான் நம்மில் அதிகமானோர் சாப்பிடுகின்றோம். மேலும் அந்த நேரத்தில் - தேவைக்கு அதிகமாக- வயிறு நிரம்பிவிட்டது என்று மஞ்சள் விளக்கு எரிந்தாலும் கூட தொடர்ந்து சாப்பிடுகின்றோம். தொடர்ச்சியாக இப்படி பழகினோமென்றால் - எடை அதிகரிப்பதை தடுக்க முடியாது.

உண்பார்கள். சோகம், கோபம், ANXIETY என்கின்ற மனச்சோர்வு, BOREDOM என்கின்ற சோம்பல் தன்மை அல்லது மிகவும் சந்தோஷமாக இருக்கும் சூழ்நிலை என்பன சிலருக்கு பசி உணர்வை அதிகரிக்கும். இதனால் உணர்ச்சிகளுக்கு தீனி போடுவது போல அதிகமாக சாப்பிடும்போது நிறை அதிகரிக்கும். எனவே பசிஉணர்வும் APPETITE என்கின்ற பசி ஆவலும் - சாப்பிட ஆரம்பி என்கின்ற சமிக்ஞை. வயிறுநிரம்புகின்றது என்பது நிறுத்து என்கின்ற சமிக்ஞை. இதனை மதித்து நடந்தால் உணவை கட்டுப்படுத்தலாம். மேலும் பசிவந்து நீண்ட நேரம் காத்திராமல் உண்பது, வயிறுநிரம்ப முன் உணவை நிறுத்துவது என்பவற்றை பின்பற்றவும். புரத உணவுகள் பசி உணர்வை குறைப்பதால் ஒவ்வொரு உணவு வேளையிலும் புரத உணவுகளைச் சேர்க்கவும். சீனி, இனிப்பு சம்பந்தப்பட்ட உணவுகளை தவிர்க்கவும். உணவை சிறு சிறு பகுதிகளாக - பல தடவை அதாவது காலை, மதியம், இரவு உணவுகளை - காலை, இடையே, மதியம், இடையே, இரவு என்று 5 வேளை பிரித்து சாப்பிடவும். இதனால் அகோர பசி உணர்வு எழாமல், அடங்கிய பசி உணர்வு ஏற்படும். உங்கள் உணவில் நிறைய நார்ச்சத்து உணவு சேர்க்கவும். இதனை சாப்பிட ஆரம்பிக்க முன்னர் சாப்பிடவும். இப்படிச் செய்வதால் வயிறு நிரம்பிய உணர்வு விரைவில் ஏற்பட்டு உணவைக் குறைவாகச் சாப்பிடலாம். முக்கியமாக உணவு விஷயத்துடன் நிற்காமல் உடற்பயிற்சியும் தேவை என்பதை மனதிற் கொள்ளவும்.

***

கேள்வி: பெண் 40 வயது. எனக்கு கொஞ்சக்காலமாக - திடீரென்று சிறுநீர் போகவேண்டும் போல் ஏற்படும் போனாலும் - சில வேளைகளில் சிறுநீர் தானாகவே கசியும். இருமினால், தும்மினால் - அல்லது எதையாவது கீழே இருந்து தூக்கினால் கூட சிறுநீர் கசிகின்றது. இது எதனால்? சிகிச்சை கூறவும்?

பதில்: உங்களது PELVIC FLOOR எனப்படும் இடுப்பறையின் கீழ்த் தட்டு தசைகள் பலவீனம் அடைந்ததால்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனை (URINARY INCONTINENCE) சிறுநீர் அடக்க முடியாத கோளாறு என்று மருத்துவர் கூறுவர். இது ஏற்படப் பல காரணங்கள் உண்டு. அநேகமாக குழந்தை பெற்றவர்களுக்கு இந்தத் தசைகள் பலவீனமடைவதுண்டு. பாரமான பொருட்களை தூக்கி வேலை செய்பவர்கள், நிறைய நேரம் நின்று கொண்டு வேலை செய்வபர்கள் என்போருக்கு இப்படி ஏற்படலாம். பிரசவத்தின் போது யோணி வழி சுவர்கள் பலவீனமடைந்து அதனால் சிறுநீர்ப்பை யோணிக்குள் இறங்குவதாலும் (CYSTOCOELE) அல்லது கருப்பை கீழே இறங்குவதாலும் (UTERINE PROLAPSE) இப்படி ஏற்படலாம். இவற்றைத் தவிர - சிறுநீர் தொற்று, நீரிழிவு வியாதி என்பவற்றினாலும் சிறுநீர் கசிவு ஏற்படுவதுண்டு. நீங்கள் ஒரு பெண் நோயியல் நிபுணரின் (GYNAECOLOGIST) ஆலோசனை பெற்று உங்கள் பிரச்சினைக்குரிய காரணத்தை அறிந்து தகுந்த சிகிச்சை பெறுவது விரும்பத்தக்கது. இடுப்பறை தசைகளின் பலவீனத்தால் மட்டுமே இப்படி ஏற்படுகின்றது என்பது அறியப்பட்டால் சில உடற்பயிற்சிகளால் இந்த குறைபாட்டை நிவர்த்தி செய்யமுடியும். இந்த பயிற்சிகளை KEGEL EXERCISES என்பார்கள். இந்த பயிற்சியின் போது, சிறுநீர் பெய்யும்போது - நிறுத்துவது போல் தசையை 10 செக்கன் இறுக்கி பின்னர் 10 செக்கன் தளர்த்தி விட வேண்டும். இதனை SQUEEZ AND RELAX என்பார்கள். இப்படி ஒரு தடவையில் 10 - 20 தடவைகளாவது ஒரு நாளைக்கு குறைந்தது 3 தடவைகளாவது பயிற்சி கொடுப்பதால் - 2 அல்லது 3 மாத காலத்தில் தசைகள் பலம் பெற்று, பிரச்சினை தீரும். இந்தப் பயிற்சியை எந்த இடத்திலும் எந்த வேளையிலும் செய்யலாம். படுத்துக் கொண்டு, இருந்து கொண்டு, நின்று கொண்டு கூட செய்யலாம்.

***

இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் [illegible] எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# ராசி பலன்

02-03-2009 முதல்
08-03-2009 வரை

பொ.சந்திரலிங்கம்




அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம் அதிஷ்டம் இருக்காது. தெய்வீகஈடுபாடு குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம். மன அமைதி இருக்காது.




கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகஈடுபாடு அதிகரிக்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மனஒருமைப்பாடும் மன அமைதியும் இருக்கும்.




மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மனஅமைதி இருக்காது.




புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவிசெய்வர். தாய் நலமில்லை. தந்தை நலம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.




மகம், பூரம், உத்தரம் 1

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறைநிலவும். உறவினர், அயலவர் உதவிசெய்வர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ் டம் இருக்காது. தெய்வீகஈடுபாடு குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர் பார்ப்புகள் நிறைவேறாது. மனஅமைதி இருக்காது.




உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய்நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக ஈடுபாடு குறையலாம். தொழில்துறை முன்னேறும் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். மன அமைதி இருக்கும்.




சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.





விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகஈடுபாடு குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர் பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மனஅமைதி இருக்காது.




மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமைய லாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகஈடுபாடு மேலோங்கும். தொழில்துறை யில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். மன அமைதி இருக்கும்.




உத்தராடம் 2, 3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷடம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.




அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.




பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சாலைக் காட்சிகள்



உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற சாரண ஸ்தாபகர் தின விழாவிலும் உலக சாரணர் தின நிகழ்விலும் கலந்துகொண்ட சாரணர்கள் கல்லூரி அதிபர் கே.தர்மலிங்கம் மற்றும் சாரண ஆசிரியரும், இலங்கைச் சாரணச் சங்கத்தின் மூத்த பயிற்சித் தலைவருமான கோ.செல்வவிநாயகம் ஆகியோருடன் நிற்கின்றனர்.



தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினரான வலி.மேற்கு பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் திருமதி பானுமதி இரவீந்திரன் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைப்பதையும் அருகில் கல்லூரி அதிபர் மு.ஜெயக்குமார், சிறப்பு விருந்தினரான பழைய மாணவர்சங்க உப தலைவர் ச.திருச்செல்வம் ஆகியோரும் நிற்கின்றனர்.



நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி மெய்வன்மைப் போட்டியில் கல்லூரி அதிபர் அருட்செல்வி ஜெசிந்தாராணி அந்தோணிப்பிள்ளை உரையாற்றுவதையும் விருந்தினர்கள் உடனிருப்பதையும் படத்தில் காணலாம்.

*(படங்கள்:லக்ஷ்மன்)*



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தின் பெண் சாரணிய 'சிந்தனை நாள்' நிகழ்வின்போது அதிபர் ந.சிவகடாட்சம், பொறுப்பாசிரியர் திருமதி வசீகரன், திருமதி தனேந்திரன் ஆகியோருடன் சாரணிய மாணவியர் நிற்பதைப் படத்தில் காணலாம்.

*(படம்; நவாலிச் செய்தியாளர்)*





கச்சாய் அ.த.க. பாடசாலையில் நிக்கொட்டால் அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத்தை திறந்து வைத்த யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் ஞாபகார்த்த பெயர்க் கல்லைத் திரைநீக்கம் செய்து வைப்பதையும் காணலாம்.

*(படம்:மண்டுவில் செய்தியாளர்)*


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 16 ★ 07 ★ 1935



உதிர்வு 31 ★ 01 ★ 2009

## அமரர் தம்பிப்பிள்ளை பாலசிங்கம் *(ஓவசியர்)*

## (விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்)

*திதி: 02.03.2009*

கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி ஆத்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கும் உங்கள் அன்பான உள்ளங்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னார் சிவபதமடைந்த செய்தி கேட்டு எமது துயரில், நேரிலும், தொலைபேசி மூலமும் அனுதாபச் செய்தி அனுப்பியும், துண்டுப்பிரசுரங்கள் மூலமும் கண்ணீர் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (02.03.2009) திங்கட்கிழமை நடைபெறவுள்ள அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

*பிரிவால் துயருறும்:*
**குடும்பத்தினர்.**

(சி/557323)



# கொக்குவில் இந்துக் கல்லூரி

# 100ஆவது ஆண்டு - 2010

1910 இல் ஆரம்பிக்கப்பட்ட எமது கல்லூரி தனது நூறாவது ஆண்டினை 2010 இல் நிறைவு செய்யவுள்ளமையை முன்னிட்டு அந்த ஆண்டில் பல சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்த தீர்மானித்துள்ளோம். இதற்கெனக் கல்லூரி நூற்றாண்டு விழாச்சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதுடன், உப - குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் நூற்றாண்டு விழா மலர் ஒன்றினை வெளியிடுவதற்கான மலர்க்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வசிக்கும் கல்லூரியின் பழைய மாணவர்களிடமிருந்து மலருக்கான வரலாற்றுத் தகவல்களைத் திரட்டும் நோக்குடன் இந்த அறிவித்தலை முன்வைக்கின்றது.

இதன்மூலம் பழைய மாணவர்கள் தாங்கள் கல்வி பயின்ற காலத்தில் புரிந்த சாதனைகள், அக்காலத்தில் தங்களுடன் கல்வி பயின்றவர்கள் புரிந்த சாதனைகள், மற்றும் கல்லூரியில் இடம்பெற்ற குறிப்பிடத்தக்க சாதனைகள், கல்வி சார்ந்த விளையாட்டுக்கள் சார்ந்த மற்றும் இணைப்பாடவிதானம் சார்ந்தவையாக இருக்க வேண்டும். இவற்றை ஒரு ஒழுங்கு முறையில் வெளிப்படுத்துவதற்காக கீழுள்ள படிவ ஒழுங்கினைப் பின்பற்றுவதுடன் தகவல்கள் 31.03.2009ஆம் திகதிக்கு முன்னர் 'தலைவர் நூற்றாண்டு மலர்க்குழு, கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்'' என்ற முகவரிக்கு அல்லது kokuvilhindu@yahoo.com என்ற E-mail முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி மாணவ மாணவியரைக் கேட்டுக்கொள்கின்றோம்.

1. பழைய மாணவ / மாணவி பெயர் :
2. முகவரி :
3. கல்வி பயின்ற காலம் : ........ஆம் ஆண்டு முதல் ....... ஆண்டு வரை
4. அ.சேர்ந்த வகுப்பு : ...........
   ஆ.இறுதியாகப் பயின்ற வகுப்பு : ..............
5. குறிப்பிட விரும்பும் தகவல் :
   i. நிகழ்வு:
   ii. இடம்பெற்ற காலம்:
   iii. உறுதிப்படுத்தும் வகைகள்
      a. சான்றிதழ் அல்லது ஆவணம் அல்லது புகைப்படங்கள் ஆகியவற்றின் நிழற்பிரதி
      b. குழுவாக / அணியாகச் செயற்பட்டிருப்பின் இணைந்தவர்கள் பெயர்கள்
      c. வழிகாட்டியவர் / பயிற்சி வழங்கிய ஆசிரியர்
      d. அப்போது அதிபராக இருந்தவர்
      e. வேறும் குறிப்பிடத்தக்க விடயங்கள் (தகவல்கள் வழங்குவதாயின் தனித் தனி தாளில் குறிப்பிட்டு இணைத்தல் வேண்டும்.)
   iv. மேலதிக விவரங்கள் தேவைப்படுமிடத்து அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக தங்களுடன் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் அல்லது E-mail முகவரி

மேலதிக விவரங்கள் தேவைப்படுமிடத்து அவற்றைப் பெற்றுக்கொள்ள விரும்பின் எம்முடன் தொடர்புகொள்ள வேண்டிய E-mail முகவரி அல்லது தொலைபேசி எண்கள்

E-mail முகவரி : kokuvilhindu@yahoo.com
தொலைபேசி எண்கள் : கல்லூரி அதிபர் : 021 2222646
:060 221 4017
இணைச் செயலாளர் :
கமலநாதன் : 060 221 4049
தேவராஜா : 021 222 7563

(சி/557265)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் அணிகளின் போர் சமநிலையில் முடிவடைந்தது

யாழ்ப்பாணம், மார்ச்.2

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற பொன் அணிகளின் மோதல் துடுப்பாட்டப் போட்டியின் 92 ஆவது போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் பொன் அணிகளின் மோதல் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 64.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

நிகேதன் 88, நிரோஜன் 35, ஸ்ரீகுகன்12 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் நிலோசன் 17.2 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், சஜீதரன் 11 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 02 விக்கெட்டுக்களையும் மைக்கல் 07 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 22 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், நவதீபன் 08 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 15 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 95.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. மனோஜ், ஜெகான் தலா 20 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டதுடன் கவாஸ்கர் 33, கமில்டன்39, மைக்கல் 47, நவதீபன் 48 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரி சார்பில் கஜநாதன் 24 ஓவர்கள் பந்து வீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 69 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் ஜோயல் ஷெகான் 20.4 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 39 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் நிகேதன் 20 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 58 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் துஸ்யந்தன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி 61 ஓவர்களில் 04 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது. நிகேதன் 62, பிரசோபனன் ஆட்டமிழக்காது 32, நிரோஜன் 29, ஸ்ரீகுகன் 19 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள்.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் நிலோசன் 10 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், கஜமுகன் 07 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 14 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், மிலாண்டோ 02 ஓவர்கள் பந்து வீசி 02 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களாக யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த நிகேதனும், சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த நவதீபனும் தெரிவு செய்யப்பட்டார்கள். சிறந்த பந்து வீச்சாளர்களாக சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த நிலோஜனும், யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த ஜோயல் சிகானும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

சகல துறை வீரனாக சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த மைக்கல் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த களத்தடுப்பாளராக சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த மிலாண்டோ தெரிவு செய்யப்பட்டார்.

ஆட்ட நாயகனாக யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த நிகேதன் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த இணைப் பாட்டக்காரர்களாக யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த நிகேதன், நிரோஜன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

சிறப்பு பரிசுகளுக்கு யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த கஜநாதன், சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கவாஸ்கரும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## பற்றிக்ஸ் கல்லூரிக்குக் கேடயம் வழங்கப்பட்டது

இந்தப் போட்டியில் முதல் இனிங்சில் வெற்றி பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு வெற்றிக்கேடயம் வழங்கப்பட்டது.*







'பொன் அணிகளின் போர்' துடுப்பாட்டத்தில் வெற்றி தோல்வியின்றி போட்டி சமநிலையில் முடிந்தது.

வெற்றிக் கேடயம், வெற்றிக் கிண்ணங்களுடன் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, யாழ்ப்பாணக் கல்லூரி அணி வீரர்கள் நிற்பதையும் முதல் வரிசைப் படங்களில் காணலாம்.

முதல் இன்னிங்ஸில் வெற்றி பெற்ற சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கான கேடயத்தை அணித் தலைவர் மிலான்டோ ஜெனிபர் பெற்றுக் கொள்வதையும் ஆட்ட நாயகர்களாகத் தெரிவான ஜே.நிகேதன் (யாழ்ப்பாணக் கல்லூரி), பி.நவதீபன் (சென்.பற்றிக்ஸ்), சிறந்த பந்து வீச்சாளர்களாகத் தெரிவான எம்.ஏ.நிலோஜன் (சென்.பற்றிக்ஸ்), வி.ஜோயல்ஷெகான் (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோர் வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுக் கொள்வதை அடுத்துள்ள ஐந்து படங்களிலும் காணலாம்.

சகல துறை வீரராகத் தெரிவான பி.மைக்கல் (சென்.பற்றிக்ஸ்), சிறந்த களத் தடுப்பாளராகத் தெரிவான எஸ்.மிலான்டோ ஜெனிபர் (சென்.பற்றிக்ஸ்), சிறந்த இணைப்பாட்டக்காரராகத் தெரிவான ஜே.நிகேதன், எஸ்.நிரோஜன் (யாழ்ப்பாணக் கல்லூரி), சிறப்புப் பரிசிலுக்குத் தெரிவான வி.கஜநாதன் (யாழ்ப்பாணக் கல்லூரி), ஏ.கவாஸ்கர் ஆகியோர் கிண்ணங்களையும் பரிசில்களையும் பெறுவதை அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**ஆறுமுகம் ஸ்ரீவைகுந்தநாதன்**
(யாழ்.நகர், கொழும்புத்துறை)

தோற்றம் 30.07.1951 — மறைவு 17.01.2009

அன்பான குல விளக்கே
எம்மைத் தனியே
தவிக்க விட்டுச் செல்ல
எப்படி மனம் வந்தது?

நாற்பத்தைந்து நாள்கள் சென்றாலும்
உங்கள் நினைவும் அன்பும்
எம்மை விட்டு அகலவே அகலாது.

தங்கள் பிரிவால் வாடும்:-
மனைவி, மகன்.

இல.18, விபுலானந்தர் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

(83136)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 31 ✱ 11 ✱ 1929
விண்ணில் 13 ✱ 03 ✱ 2008

அமரர் **செல்லையா சுப்பிரமணியம்**
திதி: சஷ்டி

அன்பால் வழிநடத்தி அறிவூட்டியே
நின்பால் உறவுகளைத் துயரிலாழ்த்திப்
பொய்போல் ஓராண்டு சென்றாலும்
எம் குடும்பத்துயரமின்னும் ஆறவில்லை.

வங்கியடி,
இணுவில் கிழக்கு.

(83165)

குடும்பத்தினர்.

# பங்குபற்றும் சிந்தனை துளிர் விடவேண்டும்
## கோப்பாய் பிரதேச செயலர்

கோப்பாய்,மார்ச்.2

எந்தப் போட்டிகளிலும் எல்லோரும் வெல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டினை விட எல்லோரும் பங்குபற்ற வேண்டும் என்ற மேலான சிந்தனை துளிர்விட வேண்டும். அதுவே வெற்றிக்கு உறுதுணையாகும்.

கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இடைக்காடு மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது:-

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு அண்மையாக உள்ள இடைக்காடு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள இடைக்காடு மகாவித்தியாலயம் கோப்பாய் வலி.கிழக்கு பிரதேசத்தின் தலைசிறந்த பாடசாலையாக இன்றும் திகழ்வதற்கு காரணம் இப்பகுதி மக்களின் பாரிய ஒத்துழைப்பும் பிரதேசத்தின் மீதான அதீத அக்கறையுமேயாகும்.

இப்பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய பல கல்விமான்கள் தமிழர்களின் கல்விப் பாரம்பரியத்தை அன்று வெளிக்காட்டி தடம் பதித்திருந்தனர்.

அன்றைய அந்த நிலை மரபு மீண்டும் ஏற்பட வேண்டும். இங்கு நடைபெற்ற நிகழ்வுகளை அவதானிக்கையில் சகலரும் விருந்தோம்பல் பண்பினை வெளிக்காட்டியிருந்தமை உள்ளத்தை நெகிழ்த்துவதாய் அமைந்திருந்தது.

இப்பண்புகளை அதிகம் வெளிக்காட்டும் மக்களாக கிழக்கு தமிழ் மக்கள், வன்னிவாழ் தமிழ் மக்கள் விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இப் பண்புகள் மிக்க விருந்தோம்பல் இங்கு துளிர்விடுவது எமது யாழ்.மக்களின் எடுத்துக்காட்டாக விளங்கும் செயற்பாடுகள் பலவற்றை இடைக்காடு மக்கள் கொண்டிருப்பது மிகவும் பாராட்டிற்குரியதாகும். இதன் மூலம் கூட்டுணர்வு வளர்க்கப்படுவதுடன் விடாமுயற்சியும் சிறப்பாக ஏற்படும்.

வெற்றி பெற்றவர்களும் வெற்றியீட்டியுள்ளார்கள். போட்டிகளில் தோல்வி அடைந்தவர்களும் வெற்றியீட்டியிருக்கிறார்கள். இந்நிலையானது எதிர்காலத்தில் ஆரோக்கியமான சமூகம் உருவாவதற்குரிய நல்ல சகுனமாக கொள்ளலாம்-என்றார். (202-9-72)

# பாராட்டி வாழ்த்துகிறோம்

யாழ்.வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் க.பொ.த. (உ/த) பரீட்சை 2008 இல் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்படவிருக்கும் மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

**கலைப்பிரிவு:**

| | |
|---|---|
| 01. நிருஜா குமாரசாமி | 3A |
| 02. தர்சிகா பன்னீர் செல்வம் | 3A |
| 03. நிருபா குமாரசாமி | 3A |
| 04. காயத்திரி கௌரிபாலா | 3A |
| 05. கிசோதனா மகேஸ்வரன் | 3A |
| 06. கார்த்திகா சண்முகராசா | 3A |
| 07. கீதாஞ்சலி சிறி | 3A |
| 08. ஆரணி செல்வலிங்கம் | 3A |
| 09. துவாரகா மதனகோபாலசாமி | 2AB |
| 10. கலைவாணி இராமச்சந்திரன் | 2AB |
| 11. ஜனனி பாலசிங்கம் | 2AB |
| 12. உமா உதயகுமார் | 2AB |
| 13. நிருந்தா சிவசுப்பிரமணியம் | 2AB |
| 14. உதயராணி கிருஷ்ணமூர்த்தி | 2AB |
| 15. கலையரசி சிவபாதசுந்தரம்பிள்ளை | 2AB |
| 16. மைதிலி தங்கராசா | 2AC |
| 17. கார்த்திகா பாலசுப்பிரமணியம் | 2AC |
| 18. நகுலா தவச்செல்வம் | A2B |
| 19. நிசாந்தினி நடராஜமூர்த்தி | A2B |
| 20. நிரோஜினி சர்வேஸ்வரன் | 2AC |
| 21. ஞானகலை பொன்ராசா | 2A B |
| 22. கார்த்திகா மாணிக்கராசா | 2A B |

**வர்த்தகப் பிரிவு:**

| | |
|---|---|
| 1. வைஸ்ணவி சிவச்செல்வம் | 2A B |
| 2. பிரதிபா செல்வச்சந்திரன் | 2A B |
| 3. தேவகி தேவராசா | A 2B |
| 4. கார்த்திகா வல்லிபுரம் கோபாலகிருஸ்ணன் | A 2B |

**கணிதப் பிரிவு:**

1. தாரணி தியாகராசா 3B

*மேற்படி மாணவர்களையும் அவர்களது கற்றலுக்கு உறுதுணையாக இருந்த அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.*

பழைய மாணவர் சங்கம்,
யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.

# நிஜத்தின் முகம்.... நிஜத்தின் முகம்....

## "யாழ்ப்பாணத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்களைக் காட்டும் உண்மைச் சம்பவங்கள்"

சமுகத்திலே பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் உருவாக்கப்படும் வேறுபாடுகளே "பால் நிலை" வேறுபாடுகளாகக் காணப்படுகின்றன. குடும்பம், சமயம், அரசு, பொருளாதாரம், வரலாறு எனச் சமுகத் தில் சகல தளங்களிலும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுவது அறியாத விடயமல்ல. உலகம் முழுமையும் சமுக பால்நிலை பாகுபாட்டின் காரணமாக அடிப்படை உணவு, போசாக்கு, சுகாதார வசதி, கல்வி, வேலை வாய்ப்பு, சட்டம், தலைமைத்துவம், தீர்மானம் எடுத்தல் போன்ற சகல மட்டங்களிலும் பாரபட்சம் காட்டப்படுகிறது.

ஆண்களும் பெண்களும் சகல விதங்களிலும் சமத்துவம் உள்ளவர்கள். பெண்களும் எல்லா வித சலுகைகளையும் அனுபவித்து வாழ உரித்துடையவர்கள். "பெண் களை வெறுமனே பாலியல் போகப்பொருளாகப் பார்க்கும் இழிநிலை ஒழிக்கப்பட வேண்டும்" என்ற இந்தப் பண்பாட்டினை உருவாக்குவதற்காகவே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பெண்கள் பட்டயத்தினை (women's charter) உருவாக்கி அதனை சகல நாடுகளும் கடைப் பிடித்து ஒழுக வேண்டும் என்று வலியுறுத்துகின்றது.

இலங்கையிலும் ஐ.நா. சபையின் ஏற்பாடுகள் காலத்துக்குக் காலம் உரிய முறையில் ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதாக வெளித்தோற்றப்பாடு காணப்படுகிறது. ஆனாலும் கூட முழுமையான நடை முறைப்படுத்தல் சாத்தியப்பாடற்ற ஒன்றாகவே காணப்படுகிறது. இந்த நிலையில் யாழ்ப்பாண சமுகத்தில் உள்ள பெண்கள் சமத்துவத்தை எப்படி அனுபவிக்க முடியும். எவ்வளவு தூரம் வன்முறை அற்ற வாழ்வியல் தளத்தைக் காண முடியும்? ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும் பெண் கள் எங்கோ ஓர் மூலையில் வன்முறைக்கு உள்ளாகி அவஸ்தைப் படுகிறார்கள். இது கடந்தகால ஆய்வு முடிவுகளில் ஊடு பெறப்பட்ட உண்மை. இது மறுக்க முடியாத நிஜம். இந்த யதார்த்தத்தை யாரும் உணராமல் இருக்கவும் முடியாது. இளம் பெண்களில் இருந்து வயது வந்த பெண்மணி வரை பெண் என்ற காரணத்தினாலோ என்னவோ வன்முறை வாழ்வை அனுபவிக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக 2008 ஆம் ஆண்டில் வயதுவந்த பெண் ஒருவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதாகப் பத்திரிகையில் வெளிவந்த செய்தியையும் இளம் பெண் மீது நடத்தப்பட்டதாக வெளிவந்த பலாத்காரம் தொடர்பான செய்தியையும் குறிப்பிட முடியும். இவ்வாறாக ஒரு கொடூரம் நிகழ்ந்த பின் செய்திகளாக பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அறிய முடிகிறதே ஒழிய மிகுதி அனைத்தும் வெளிவராதவையாகவே உள்ளன. யாழ்.சமுகம் ஏன் இவ்வாறான ஒரு நிலை நோக்கிச் செல்ல வேண்டும்.

இன்று சமுகக் கட்டமைப்பில் எல்லா தரத்தினரிடையிலும் குடும்பமட்ட வன்முறைக்கு உட்பட்டு வாழும் பெண்களின் கண்ணீர்க்கதை நீண்டது. சமுகத்தில் உயர்ந்த பிரமுகர்களது குடும்பங்களில் இருந்து சாதாரண எளிய குடும்பங்கள் வரை பெண்கள் மீதான வன்முறை கட்டவிழ்க் கப்பட்டுள்ளது என்பது வேதனைக்குரிய விடயம். தந்தை வழி சமுகத்தின் அடியான சமுகக் கட்டமைப்பு அதன்வழி வந்த சமுக இறுக்கம் ஆணாதிக்கத்தின் உச்ச நிலை, மேலான தன்மை என்பன பெண்களை இயல்பாகவே இரண்டாம் பட்ச நிலைக்குத் தள்ளியுள்ளன. இதை மீறி ஒரு பெண் பெண் உரிமை, சுதந்திரம் பற்றிப் பேச முற்படுவ தாயின் அவள் மீது சமுகம் மாறுப் பட்ட பார்வையை செலுத்த முனைவதையும் காணமுடிகிறது.

## சத்தமின்றி ஓர் ஓசை

ஏன் பெண்கள் இரண்டாந்தப் பிரஜைகளாக வாழ வேண்டும்?

ஒவ்வொரு பெண்ணும் எந்த மட்டத்தில் ஆயினும் வன்முறை புரியப்பட்டால் அதை வெளிக்கொண்டுவர முன்வர வேண்டும். அவ்வாறு வெளிக் கொண்டுவரப்படாமையாலேயே பல பெண்களின் வாழ்வினைக் கண்ணீரில் கரைந்துள்ளது.

ஒவ்வொரு பெண்ணும் இன்று உழைத்து வாழ முற்பட்டுள்ளாள். அவ்வாறான உழைப்பினைக் கூட சுரண்டி வாழும் ஆண் வர்க்கம் எமது சமுகத்தில் உள்ளது. அது மட்டுமா? திருமணத்தின்போது பெண்ணின் வாழ்வியல் இருப்புக்காக பெண்ணுடைய பெற்றோர் கொடுக்கும் "சீதனம்" இன்று பெண்ணை விற்பதற்காக கொடுக்கப்படும் விலையாக மதிக்கப்படுகிறது. இவ்வாறாகப் பெண்ணைச் "சந்தைப் பொருளாக" "போகப் பொருளாக" பார்க்கும் இழி நிலைக்கு சமுகம் தான் பொறுப்புக் கூற வேண்டும். இவை எல்லா வற்றுக்கும் மேலாக "ஒருவனுக்கு ஒருத்தி" என்ற மேலெழுந்துவரும் கொள்கையை கடந்து ஒரு மனைவி உயிருடன் இருக்கும்போதே ஆண்கள் மறுதிருமணம் செய்வதால் எத்தனை பெண்களின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அரங்கேறும் திருமணங்கள் சட்ட ரீதியாக விவாகரத்து, திருமணப்பதிவு எதற்குள்ளும் உட்படவில்லை. இந்த நிலை பல பெண்களின் வாழ்வினை மட்டுமன்றி பிள்ளைகளின் வாழ்விலும் கூடச் சிக்கலை உண்டு பண்ணி நிற்கிறது. யாழ்.சமுகத்தில் நடந்தேறும் திருமணங்களில் ஒரு வகையாக இதனையும் ஏற்று வாழச் சமுகம் இசைந்து விட்டது போலும்.

இவ்வாறான திருமணத்தால் ஏற்படும் அவலத்தைக் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவினுள் வசித்த ஒரு குடும் பத்தினை தரிசித்ததன் வாயிலாக அறிய முடிந்தது.



கனகா 38 வயதுடைய கல்வியறிவற்ற விவேகம் குறைந்த ஒரு பெண். அவளுக்கும் சந்திரனுக்கும் திருமணம் நடைபெற்றது இன்று பதினைந்து வருடங் களுக்கு மேலாகி விட்டது. சந்திரன் ஓர் உறவு முறைக்காரன் என்பதால் பெற்றோர் அவனது நடத்தையை கவனிக்கவில்லை. திருமணம் வரை ஒழுங்காக இருந்த சந்திரன் திருமணம் ஆகி ஓரிரு வருடங்களுக்குள் குடிப் பழக்கத்துக்கு அடிமை யானான். இந்தக் காலத்தில் அவர்களுக்கு ஒரு ஆண், பெண் குழந்தைகள் பிறந்தனர். சந்திரன் சைக்கிள் திருத்தும் தொழில் செய்பவன். அதுவும் அவனது ஊரான யாழ்ப்பாணத்தில்தான். ஒவ்வொரு இரவும் குடித்து விட்டு வந்து கனகா விற்கு அடிப்பது,உதைப்பது, பிள்ளைகளை உதைப்பது, தூஷண வார்த்தைகளால் திட்டுவது எல்லாம் சகஜமாகியது. அவ்வளவு வன்முறைகளையும் கனகா தாங்க வேண்டியவள் ளானாள்.

இன்றைக்கு 5 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் மாலை 5 மணி இருக்கும் ஏதோ பெரிய அமளி, வேலிக்குள்ளால் எட்டிப் பார்த்தேன். கனகாவின் எதிரே இன்னொரு பெண். அவளும் சுமாரானதோற்றம். ஆனால் கொஞ்சம் வாயாடியாகக் காணப் பாட்டாள். பெயர் ராணி என்று பின்னர்தான் தெரிய முடிந்தது. ராணியை எங்கிருந்தோ கூட்டி வந்து விட்ட சந்திரன் குடிப்பதற்காகச் சென்று விட்டான். கனகா "ஓ....வென்று அழுகிறாள். நீ ஏனடி அவரோட வந்தனீ இங்க நான் இருக்கிறது உனக்குத் தெரியாதோ"

இராணியும் அழுது கொண்டே "எனக்கு அவர் கலியாணம் தான் கட்டேல்ல எண்டுதான் சொன்னவர். இங்க பார் அவர் வாங்கித் தந்த செருப்பு, சட்டை எல்லாம் ....நான் என்னெண்டு திரும்பிப் போறது...அவரை விட்டுட்டு போக மாட்டன்"

இதைக் கேட்டபோது எதையும் என்னால் செய்ய முடியவில்லை. இரண்டுபெண்களின் வாழ்வில் மண் தூவப்பட்டு விட்டது என்பதை உணர்ந்தவளாய் நிமிர்ந் தபோது சந்திரன் வேகமாக வந்தான். "ஏனடி அவளை வெளியால நிற்க வைச்சனீ" "நீ உள்ளே போ" என்றான். கனகா ஏதோ சொல்ல வாய் எடுத்தவள்தான் அவள் கதைப்பதற்குள் சந்திரன் அடித்த அடியில் மூர்ச்சையாகி விட்டாள். ஒவ்வொரு நாளும் முதல் மனைவி கொடுமைப்படுத்தப் பட்டாள். இராணிக்கு அடி உதையைத் தவிர்த்து வந்த சந்திரன் அவளும் மூன்று பிள்ளைகளுக்குத் தாயானவுடன் அவள் மீதும் வன்முறையை பிரயோகிக்க ஆரம்பித்து விட்டான். ஆனாலும் கூட அந்த அப்பாவிப் பெண்கள் தம் கணவன் பற்றி எப்போதும் குறை கூறியது இல்லை. அவனது கொடுமையால் இரவிரவாக அலறித் துடிக்கும் இரு பெண்களும் பொழுது விடிந்ததும் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு சாதாரண நிலைக்கு வந்து விடுவார்கள். ஆனால் அடிகாயங்களைக் காண முடியும்.

2007 களில் சந்திரனின் கொடுமைதாங்க முடியாத இரண்டு மனைவியரும் தமது சொந்தங்களிடம் உதவி கோரினர். தம்மால் இதற்கு மேலும் அவனோடு வாழ முடியாது. ஏதாவது பாதுகாப்புப் பெற்றாக வேண்டும் என ஏங்கினர். உறவுகள் சேர்ந்து சந்திரனிடம் பேசுவதற்காக வந்தனர். ஆனால் அவன் அவர்களது பேச்சினைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இந்த ஊரில் இருந்தால் இப்படி உறவுகளின் தொல்லை இருக்கும் என்று எண்ணியோ என்னவோ இரண்டு மனைவி பிள்ளைகளை அழைத்துக் கொண்டு திடீரென நகரத்துக்கு குடிபெயர்ந்து விட்டான். உறவுகளின் அருகிலேயே இவ்வாறான கொடுமைகளை அனுபவித்த இந்தப் பெண்கள் இன்று உறவுகளற்ற தொலை தூரத்தில் எவ்வாறான வன்முறைக்கு உட்படுகிறார்களோ? கல்வி அறிவற்ற அந்த பெண்கள் இன்னும் எத்தனை பெண்களுடன் தமது கணவன் வந்தாலும் அனுசரித்துத்தான் போகவேண்டும் என்ற நிலை. அந்தப் பெண்களும் பிள்ளைகளும் எதிர்காலத்துக்கு யார் பொறுப்பு? சமுக அநீதிகளைத் தட்டிக் கேட்க வேண்டிய சமுகம் மௌனித்து அமைதி காத்தால் வருங்கால சமுகம் எப்படி ஆரோக்கியமானதாக உருவாக முடியும். எப்படிச் சமுகம் மேம்பாடு நோக்கிச் செல்வது சாத்தியமாகும்.

### "தமணி"

வன்முறையற்ற வாழ்வை அனுபவிக்க வேண்டியது ஒவ்வொரு பெண்ணினதும் உரிமை. பெண்களே!விழிப் படையுங்கள்! உங்கள்மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டால் அதனை வெளிக்கொண்டு வாருங்கள். உங்களது வாழ்வுரிமையை விலை பேசவிடாதீர்கள். யாரிடமும் உங்கள் தனிப்பட்ட உரிமையை விட்டுக் கொடுக்காதீர்கள். பெண்களின் கருத்துக்கள் மேலே வரவேண்டுமாயின் ஒவ்வொரு பெண்ணும் கல்வியின் அவசியத்தை உணர்ந்து கொள்ளுங்கள். இவை, எல்லாவற்றுக்கும் மேலாக சமுகம் இந்தப் பெண்களுக்காக, அவர்களது சந்தோசமான வாழ்விற்காக, சுதந்திரத்திற்காக விட்டுக் கொடுப்பினையும், புரிந்துணர்வினையும் மேற்கொள்ள வேண்டும். "விடுதலை மகளிரெலாம் வேட்கை கொண்டெழுந்தனர்" என்ற பாரதியின் வரிகளை அடியொற்றி எமது சமுகத்தில் இழையோடியிருக்கும் வன்முறைகளை களைந்தெறிய ஒவ்வொருவரும் தயாராகிக் கொள்ள வேண்டும்.

**மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்.** (சி/557013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஐ.நா.சபையிலும் "அரசியல்" சார்பா?

இலங்கை விவகாரம்-வன்னியில் தமிழ்ப் பொது மக்கள் நாளாந்தம் இராணுவ மோதல்களில் சிக்குண்டு இறந் தொழியும் விவகாரம்-ஐக்கிய நாடுகள் சபையின் பாது காப்புச் சபையின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் என்ற எதிர்பார்ப்புப் பொய்யாகிப் போய்விட்டது! எந்த நாட்டி னரின் கவனத்தையும் அது ஈர்க்க வில்லை; கண்ணில் படவில்லை!!

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு,இங்குள்ள நிலை மைகளை அறியவந்து திரும்பிய ஐ.நா.சபையின் மனி தாபிமான விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் சமர்ப்பித்த அறிக்கையை அவர் வாசிக்க, பாதுகாப்புச்சபை உறுப்பினர்கள் அதனை வெறுமனே கேட்டதோடு "கதை" முடிந்துவிட்டது; கூட்டம் கலைந்தது.

மிகப்பெரும் மனிதாபிமானப் பிரச்சினை ஒன்று இலங் கையில் - வன்னியில் -உருவெடுத்துள்ளது குறித்தோ, ஓர் இனமக்கள் அழிந் தொழிவது பற்றியோ பாதுகாப்புச் சபை உறுப்பினர்கள் வாயும் திறந்ததாகத் தகவல் இல்லை! இலங்கை விவகாரத்தை பாதுகாப்புச் சபையில் விவாதிப் பதற்கான வாய்ப்பே இல்லையென்று அதன் தலைவர் யுக்கியோ டக்காசு கூறுமளவுக்கு அதனைக் கருத்தில் எடுப்பார் எவரும் இல்லாமற் போயிற்று!

இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் மட்டும், இரண்டாயிரம் பொது மக்கள் போரில் சிக் குண்டு மாண் டார்கள் என்ற புள்ளி விவரம் வெளியான பின்னரும், இனி யாவது அதனைத் தடுக்க வேண்டும், அதன் பொருட்டு பொருளாதாரத் தடைபோன்ற அழுத்தங்களைப் பயன் படுத்தத் தூண்ட வேண்டும் என்று எந்த நாடும் அக்கறை காட்டவில்லை.

ஐ.நா.சபையில் நீண்டகாலம் பணிபுரியும் மூத்த ஊடகவியலாளர் மத்தியு ரஸ்ஸல் கூறுவது போன்று, அங்குள்ள எந்த நாட்டின் பிரதிநிதியும் இலங்கை விவகாரம் குறித்து-போர் நிலைவரம் தொடர்பாகவோ அல்லது அங்கு வாழும் மக்களுக்குரிய உயிராபத்து மற்றும் மனிதாபிமானச் சீரழிவு குறித்தோ-விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கேட்கவில்லை.

இத்தனைக்கும் இரண்டு வாரங்களுக்கு முன்னர்தான் (பெரும் பிகுப்பண்ணி) ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான்-கீ-மூன் இரண்டு தரப்புகளையும் போரை இடை நிறுத்துமாறு கேட்டிருந்தார். அதனைக்கூட, பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்கள் பொருட்படுத் தவில்லை!

இதற்கு முன்னர் பாதுகாப்புச் சபையினால் நிராக ரிக்கப்படும் என்று நிச்சயமாகத் தெரிந்திருந்தும் கூட பல நாடுகளின் போர் அல்லது மோதல் குறித்து இச்சபை ஆராய்ந்த முன்னுதாரணங்கள் பல உண்டு. கடந்த வருடத் தில் சிம்பாப்வேக்கு எதிராகப் பொருளாதாரத் தடை கொண்டு வரவேண்டும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்ததைக் குறிப்பிடலாம்.

ஆனால் இலங்கை விவகாரத்தில், ஜோன் ஹோம்ஸின் அறிக்கையைக் கேட்டவர்களுக்கு ஓர் இனம் அழிந்து கொண்டிருப்பது பாரதூரமான விடயமாகப்படவில்லை! போரை நிறுத்தி, பல உயிர்கள் அழிவதைத் தடுக்கத் தாம் உந்து சக்தியாகக் கருமமாற்றவேண்டும்-குரல் கொடுக்க வேண்டும்- என்ற சிறுதுளி மனிதாபிமானம் கூடத் துளிர்க்க வில்லை. அதன் உள்ளர்த்தம்தான் என்ன?

உலகப் பெரும் சபையாக விளங்கும் ஐ.நா.சபையும், அதன் அங்கதவர்களும், அதிகாரிகளும் சாய்ந்தால் சாய்கிற பக்கமாகச் செயற்படும் சாதாரண விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்ட மனிதர்களே என்பதனை இலங்கை விவகாரத்தில் தமக்குத் தாமே வெளிச்சம் பாய்ச்சிக் காட்டியுள்ளார்கள் என்றே கருதவேண்டியுள்ளது. வெவ்வேறு நாடுகளில் நடைபெறும் இன அழிவுகளையும் மனிதாபிமானப் பிரச் சினைகளையும் ஐக்கிய நாடுகள் சபையும் அதன் பாது காப்புச் சபையும் வெவ்வேறு அடிமட்டங்கள் கொண்டு அளவிடுகின்றனவா? அல்லது வெவ்வேறு நிறக் கண் ணாடிகளைப் போட்டுப் பார்க்கின்றனவா?

மேலும் ஒரு நாட்டு அரசாங்கத்துக்கும் அங்கு வாழும் மக்களுக்கும் இடையே வெடிக்கும் பிரச்சினைகளில் ஐ.நா. சபையும் அதன் அங்கங்களும் அரசாங்கத்தின் நிலைப் பாட்டை அடிவருடியே செயற்பட வேண்டும் என்ற எழுதாத விதி உள்ளதோ என்றும் சந்தேகப்பட வைக்கின்றது.

இலங்கை விவகாரத்திலும், இங்கு வந்து திரும்பிய ஜோன் ஹோம்ஸின் அறிக்கை அந்தச் சந்தேகத்தை இயல் பாகவே தோற்றுவிக்கிறது. அரசாங்கம் வழங்கிய உறுதி மொழிகள் உண்மையானவை என்று தனக்குள் திருப் திப்பட்டுக்கொண்டு, பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பித்த அறிக்கையை அவர் தயாரித்திருப்பதாகவே தோன்றுகிறது.

மேலும் போரினால் மக்கள் அழியும்போது அதனை ஐ.நா.சபை கருத்திற் கொள்ளாமல்,உள்ளாடும் கள்ளாடு மாக, "அரசியல்" செல்வாக்குக்கு மசிந்து உண்மையைப் பூசி மெழுகும் பழக்கத்தை வரித்துக் கொண்டிருக்கிறதா என்றும் ஐயுற வேண்டியுள்ளது.

ஹோம்ஸ் தாம் சமர்ப்பித்த அறிக்கையில், போர் முடி வுற்ற பின்னர் அரசியல் பிரச்சினைகளைக் கையாளலாம் என்ற கருத்தை வெளிப்படுத்தியிருப்பது புலனாகிறது. மனிதாபிமானப் பிரச்சினைகளே அவர் சார்ந்த விடயம் என்பதால் அவர் கூறியிருப்பது பொருத்தம் என்று கொள் ளமுடியவில்லை. வன்னியில் மனிதாபிமானப் பிரச்சினை பூதாகாரமாகி தமிழர்கள் இறந்தொழிவதற்கு அத்திவாரமே அரசியல்தான். இராணுவப் பலம்கொண்டு தமிழர்களை ஒடுக்குவது என்ற சித்தாந்தத்தையே இங்கு அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த கொழும்பு அரசுகள் கைக்கொண்டன; இப்போது அது மிக உச்ச நிலைக்கு வந்திருக்கிறது.

இதனை ஐக்கிய நாடுகள் சபையின் உயர் அதிகாரி ஒருவர் உள்வாங்கிக் கொள்ளாமல் புறம் ஒதுக்கியிருப்பது நீதிக்கும் மனிதநேயத்துக்கும் முரணானது. பாவம் நிறைந் தது என்றும் சொல்லாம்.

இத்தகைய ஆக்கபூர்வமற்ற நிலைப்பாடும், நாட்டுக்கு நாடு வெவ்வறு அளவு கோலும், அரசியல் பக்கச்சார்பும் ஐக்கிய நாடுகள் சபை தமக்கு உதவும் என்ற நம்பிக்கையை உலக மக்கள் மத்தியில் தகர்த்தெறிந்துவிடும். அதனை வன்னித் தமிழ் மக்கள் அழிந்துபோகும் மனித பாவத்திலும் காணமுடிகிறது !தமிழர் விதியே, உன்னையே நோவதா?

# இடம்பெயர்ந்தோர் தொடர்பாக புலிகளுடன் நிபந்தனையின்றிப் பேச இந்தியா வற்புறுதல்

இலங்கை தொடர்பான இந்தியா வின் கொள்கையில் கடந்த வாரம் மேலும் சில மாற்றங்கள் தென்படத் தொடங்கியிருந்தன. அதுவும் குறிப்பாக பதில் பிரதம மந்திரி பிரனாப் முகர்ஜி யின் நிலைப்பாட்டில் என்று கூறவேண் டும்.

கடந்த வாரச் செய்திகளின்படி இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பேச்சு வார்தை நடத்தி அமைதியான தீர்வுக்கு வரும்படி அவர் கேட்டுக் கொண்டி ருந்தார். மேற்கு வங்காளத்திலிருந்து விடுத்த ஓர் அறிக்கையின் மூலம் இந்த வேண்டு கோளை அவர் விடுத் திருந்தார்.

ஆனால் மூன்று நாள்களுக்கு முன் னதாக லோக சபையில் அவர் விடுத்தி ருந்த அறிக்கையொன்றில் புலிகளுக்கு எதிராக நடக்கும் போரில் தலையிடும் உத்தேசம் இந்தியாவுக்குக் கிடையாது என்று கூறியதுமட்டுமின்றி புலிகள் தமிழ் சமூகத்திற்கு பெரும் தீங்கு இழைத்து வருகிறார்கள் என்றும் குற்றஞ்சாட்டி

## ராஜதந்திர முறையில் நடைபெறுவதாக உயர் அதிகாரி ஒருவர் தகவல்

யிருந்தனர்.

இது கொழும்பிலுள்ள இலங்கை அரசுத் தலைவர்களைத் திருப்திப் படுத் துவதற்காக விடுத்திருந்த அறிக்கை. கொழும்பில் ஜனவரி மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தவேளை யில் அவர் மேற்கொண்டிருந்த நிலைப் பாட்டுக்கு மிகப் பொருத்தமாகவே இப் போதைய அறிக்கையும் இருப்பதாக இலங்கைத் தலைவர்கள் மகிழ்ச்சி கொண்டிருந்தார்கள்.

### உள்ளேயும் வெளியேயும் கடும் அழுத்தம்

உள்நாட்டிலும் சர்வதேச மட்டத் திலும் உருவாகியுள்ள அழுத்தங்களின் காரணமாகவே இந்திய அரசின் நிலைப் பாட்டில் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. முகர்ஜி தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டபின் இரண்டு நாள் கழித்து கடந்த செவ்வாய்க்கிழமை இந்திய அரசின் அதிகார பூர்வ அதிகாரி ஒருவர் அறிக்கையொன்றை வெளியிட்டி ருந்தார். இடம்பெயர்ந்த மக்களின் அப்பு றப்படுத்தலும் பாதுகாப்பும் தொடர்பாக அந்த அறிக்கைவிடுக்கப்பட்டிருந்தது. இந்தியாவின் புதிய நிலைப்பாட்டை மீளவும் வலியுறுத்துவதாகவிருந்த அந்த அறிக்கையில் காணப்பட்ட சிறிய மாற்றமானது பாக்கு நீரிணையின் இரு பக்கங்களிலுமுள்ள ஊடகங்களில் பெரிதாக வெளிப்படுத்தப்படவில்லை.

"போரில் சிக்குண்ட மக்கள் பத்திர மாக வெளியேறுவது தொடர்பாக சர்வ தேச சமூகம் விடுத்துள்ள கோரிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு புலிகள் ஆயத்தமாய் இருப்பதாக அறி வித்திருப்பதை அறிகின்றோம் என்று தெரிவித்துள்ள அவ்வறிக்கையில், இந்த நிலையில் இலங்கை அரசையும் ஏனைய சம்பந்தப்பட்ட அனைவரை யும் இந்த மக்களை பத்திரமாக வெளியேற்றுவது தொடர்பாக பொருத்தமான நடைமுறை களை உருவாக்கும்படி கேட்டுக் கொள் கின்றோம். இந்த நடைமுறையினை சர்வதேச முகவர்அமைப்புகள் மேற்பார்வை செய்வதாகவும் இருக்க வேண்டும்" என்று தெரிவித்திருந்தது.

### நிபந்தனையின்றி பேசும்படியான வற்புறுத்தல்

இந்த வேண்டுகோளில் இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் ஏனைய தரப்பினரையும் இடம்பெயர்ந்த மக்கள் வெளியேறுவது தொடர்பாக சர்வதேச கோரிக்கைகள் தொடர்பாக விவாதிக்கும்படி இந்தியா கேட்டுள்ளது. இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பாக புலிகளுடன் நிபந்தனையில்லாமல் பேச்சில் ஈடுபடும் படியாக கொழும்பு அரசை கேட்டுக் கொள்ளும் இராஜதந் திர முறையாகும் இது என்று வெளிநாட் டமைச்சைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். புலிகளுக்கு சிறிய அளவிலான ஒரு சாளரத்தை திறந்து கொடுப்பதாகும் இது என்று அவர் மேலும்தெரிவித்தார்.

பெயர் குறிக்க விரும்பாத அதிகாரி ஒருவர் மேலும்தெரிவிக்கையில்: புலிக ளுடன் அரசு எவ்வாறு பேச வேண்டும் என்று விவரிக்காது போனாலும் இதிலுள்ள முக்கியத்துவம் என்னவென்றால் வித்தி யாசமான அணுகுமுறைதான். சம்பந்தப் பட்ட அனைவரையும் (அரசு-புலிகள் உட்பட) இதில் பொருத்தமான பயன ளிக்கு நடைமுறையை உருவாக்கிக் கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

அதுவும் புலிகள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டு நிபந்தனை எதுவுமின்றி

## நேற்று 01.03.2009 அன்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான அரசியல் விமர்சனத்தின் ஒரு பகுதி

சரணடைய வேண்டும் என்று இலங்கை அரசு வற்புறுத்திக் கொண்டிருக்கும் நிலையில் என்று கூறியுள்ளார்.

### கருணாநிதியின் உண்ணாவிரத அச்சுறுத்தல்

இந்திய அரசுக்கு இப்பொழுது உள் நாட்டு நெருக்குதலே பிரதானமானமாக எழுந்துள்ளது. தமிழ் நாட்டின் புலிகள் ஆதரவு சக்திகள் ஆர்ப்பாட்டங்களை நடத்திவரும் அதேசமயம் மத்திய அர சின் கூட்டணிக்கட்சிகளில் ஒன் றான தி.மு.கழகத்தின் தலைவர் டாக்டர் முத்து வேல் கருணாநிதியின் சாகும்வரை உண் ணாவிரதம் அச்சுறுத்த லும் பிரதான காரணமாகும். அத்துடன் ஏப்ரல் மாதத் தில் அல்லது மே மாதத்தில் வரவிருக் கும் பொதுத் தேர்தலும் முக்கிய காரண மாகும். போர் நடக்கும் பகுதிகளில் சிக் குண்டு உள்ள பொது மக்களின் நிலைமை குறித்து சர்வதேசக் கவலை அரிகரித்து வருவதையும் முக்கிய காரணங்களில் சேர்த்துக்கொள் ளலாம்.

இந்திய அரசின் நிலைப்பாட்டில் ஏற் பட்டுள்ள மாற்றத்தின் காரணமாகவே கொழும்பில் இடம்பெற்ற சார்க் நாடுக ளின் வெளிநாட்டமைச்சர்கள் மாநாட் டுக்கு வராமல் முகர்ஜி தவிர்த்துக் கொண் டார் என்று இப்போது உணரப்படுகின்றது.

இடம்பெயர்ந்த மக்களின் துன்பங் கள் தொடர்பாக சர்வதேச மட்டத்தின் பல்வேறு நிலைகளில் கடந்தவாரம் கவலைகள் வெளியிடப்பட்டன.

கடந்த வெள்ளியன்று ஐரேப்பிய யூனியன் வெளிநாட்டமைச்சர்கள் கூட் டறிக்கை ஒன்றினை வெளியிட்டார் கள். மோதலில் சிக்குண்டுள்ள மக்களை விடுவிக்க உடனடியாக போர் நிறுத்தம் செய்யும்படிஅவர்கள்கேட்டுக்கொண்டனர்.

இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள முகாம்களை சர்வதேச தரங்களுக்கு அமைவாக வைத்துக்கொள்ளும்படி அர சாங்கத்தை அவர்கள் வற்புறுத்தினார் கள். அத்துடன் அவைகள் சுதந்திரமாகக் கண்காணிக்கப்படவும் வசதியிருக்க வேண்டுமென வற்புறுத்தியருந்தார்கள். புலிகளை ஆயுதங்களை கீழே வைத் துவிட்டு பயங்கரவாதத்தை கைவிடும்ப டியும் கேட்டிருந்தார்கள்.

### அரசுக்கு அக்கறையில்லை

ஆனால் இலங்கை தொடர்பாக அமெரிக்க செனேட் வெளியுறவு உப குழுவொன்றில் மிக விரிவான விவாதம் ஒன்று நடைபெற்றுள்ளது. அதிபர் பராக் ஒபாமாக அதிபராக பொறுப்பேற்றதன் பின்னர் நடைபெற்றுள்ள இவ்வாறான முதல் விவாதமாகும் இது. அண்மித்த கிழக்கத்திய, தென்மற்றும் மத்திய ஆஸிய விவகாரங்கள் தொடர்பான மேற்படி உப குழுவின் விவாதம் இடம்பெற்றபோது குழுவின் தலைவர் றொபேர்ட் காஸி கருத்து வெளியிடுகையில் இலங்கை அரசாங்கமானது பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான மாற்று குழு எதையும் தேடிக் கொள்வதற்கான முயற்சியில் எதுவித அக்கறையும் காட்டிக் கொண்ட தாகத் தெரியவில்லை. அதே சமயம் தமி ழர் தரப்பிலும் நம்பகரமான தரப் பொன் றினை புலிகளுக்கு மாற்றாக வெளிப்படுத் தப்படவும் இல்லை என்றார்.

கட்டாயமான நிபந்தனைகளை கடைப்பிடித்தால் மட்டுமே வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதிகள் வழங்கப் படும் என்று உதவி வழங்கும் நாடுகள் வற்புறுத்த வேண்டும் என்று முன்னர் (2003-2006) இலங்கையில் அமெரிக்கத் தூதுவராக இருந்துள்ள ஜெப்றே லுன்ஸ் டட் வலியுறுத்தினார். இரு தரப்பு மற்றும் பலதரப்பு உதவிகளை வழங்கும் ஜப்பான், ஐரோப்பிய யூனியன் மற்றும் உலக வங்கி, ஆஸிய வளர்ச்சி வங்கி ஆகியவை இதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றார் அவர்.

அதிகாரப் பகிர்வு, இடம்பெயர்ந்தவர் களை விரைவாக மீள்குடியமர்த்தல், மனித உரிமை நிலைப்பாட்டில் விரைவான முன்னேற்றம் ஆகியவை இந்த நிபந்தனை களில் அடங்க வேண்டும் என்றார் அவர்.

இந்த விடயங்களில் எனக்கு நீண்ட கால அனுபவம் உண்டு. உதவி வழங் குநர்களின் அர்த்தமுள்ள ஒருங்கிணைப் பும், நிபந்தனை விதிப்புகளும் இலகு வாக நடைமுறைப்படுத்த முடியும் என்று நான் கூறத் தயாராய் இல்லை. இவை களை முன்வைப்பது இலகுவாக இருக் கலாம் ஆனால் செயல்படுத்தப் படுவது கஷ்டம். அமெரிக்காவும் ஏனைய உதவி வழங்கும் நாடுகளும் உலக வங்கி மற்றும் ஆஸிய அபிவிருத்தி வங்கிக ளின் உதவிகளை இந்த விடயங்களில் நிபந்த னைக்குட்படுத்தினால், இலங் கைக்கு பெரிய அளவில் இருதரப்பு உதவி வழங்குநரான ஜப்பான் தனது உதவி களையும் நிபந் தனைக்குட்படுத் தினால் இலங்கையின் நட்பு நாடுகள் அதன்மீது மிகுதியான தாக்கங்களை ஏற்படுத்த முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

மனித உரிமை கண்காணிப்பு அமைப் பின் ஆய்வாளர் டாக்டர் அன்னா நீஸ்டட் மற்றும் நியுயோர்க்கில் இருந்து செயல் படும் பத்திரிகையாளர்களைப் பாதுகாக் கும் குழுவின் ஆஸியா திட்ட ஒருங் கிணைப் பாளர் பொப்டீட்ஸ் ஆகியவர் களும் செனேட் உப குழுவின் முன் சாட்சி யளித்தனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான நீண்ட அறிக்கையினை அன்னா நீஸ்டட் சமர்ப்பித்தார். ஊடகத்துறை சுதந்திரம் தொடர்பாக திரு நீட்ஸ் விவரித்தார்.

ஊடகத்துறையின் நிலைமை குறித்து விவரமான அறிக்கை ஒன்றினை தாக்கல் செய்த அவர் பத்திரிகைத் துறையின் மீதான அச்சுறுத்தல்கள், தொல்லைகள் போன்றவற்றையும் பட்டியல் இட்டார்.

### கலகலப்பு இல்லாத சார்க் மாநாடு

கடந்தவாரம் இடம்பெற்ற சார்க் வெளியுறவு அமைச்சர்களின் மகாநாடு இந்தியாவின் பிரணாப் முகர்ஜியும், பாகிஸ் தானின் ஷா மொகமட் குவரெஷியும் இல்லாது சோபை இழந்து போனாலும் ஜனாதிபதி மகிந்தராஜ பக்ஷ கலந்து கொண்டு சில பொதுக் கருத்துக்களை வெளிப்படுத்தினார். அமெரிக்காவில் ஆரம்பித்த பொருளாதார நெருக்கடியா னது எமது நாடுகளையும் பாதிக்கும் நிலைமை தோன்றியுள்ளது. பயங்கரவாதத் தைப் போலவே நாம் எல்லோரும் எதிர்கொள்ள வேண்டிய இன்னொரு சவாலாகும் இது. நாம் எல்லோரும் உலக நிதி நிலைகளுடன் தொடர்புகொண் டிருப்பதால் இந்த நெருக்கடியானது நமது நாடுகளையும் பாதிப்பது சாத்தியமே என்று குறிப்பிட்டார் ஜனாதிபதி. (ப)

## நாளை

| | |
|---|---|
| மாசி 19 | 03.03.2009 |
| | செவ்வாய்கிழமை |
| திதி: | ஷப்தமி |
| | பி.இ. 01.11 வரை |
| நட்சத்திரம்: | கார்த்திகை |
| | மு.இ. 07.25 வரை |
| சுபநேரம்: | 10.56 - 12.26 |
| ராகுகாலம்: | 03.26 - 04.56 |

## தவக்காலச் சிந்தனை



### கடவுளின் நியமங்களைக் கடைப்பிடிப்போம்

உலகத்தில் சிறந்த நாடு எது? நாட்டிலே சிறந்த குடிமகன் யார்? முதல்தர நாடு! மூன்றாந்தர நாடு! பொருள் என்ன? பொருளாதாரத்தையே மையமாக வைத்துப் பிரிக்கப்படுகிறது. அடாவடித்தனம் செய்து பிறநாடுகளைச் சுரண்டிப் பிழைக்கும் நாடுகளே முதல்த்தர நாடுகளாகக் கணிக்கப்படுகின்றன. முதல்த்தரக் குடிமகன் நாட்டுப் பற்று மிக்கவன். நாட்டின் சட்டங்களைத் தெரிந்து மதித்து நடப்பவன். முதல்தர நாடுகளின் கடமை பிறநாடுகளை, அவை களின் கொள்கைகளை மதித்து வாழ வழி செய்வதே ஆகும். கொள்கைகளை மதித்து, சட்டங்களை மீறுகிற நாடோ, தனி நபரோ தரமிழந்த வர்கள். காணாஎன் தேசம் கடவுளின் கொடை இஸ்ராலேயர் கடவுளின் நியமங்களை கடைப்பிடித்து ஒழுகினால் இப் பேரின்பமும் ஞானமும் அறிவாற்றலும் கொண்டது என பல நாடுகள் மத்தில் பெருமைபெறும். (இச-4:6) கடவுளின் நியமங்கள் வாழ்வளிப்பவை. அவை என்றும் அழியாத் தன்மை கொண்டவை. யாரும் அழிக்கவும் முடியாது. நம்மை நாமே சிறப்பாக்கிக்கொள்ள, நம்மைச் சுற்றியுள்ளோரைச் சிறப்பாக்க நியமங்களைக் கடைப்பிடிப்போம்.

ப.சுதா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போரை நிறுத்துமாறு உலக நாடுகள் கூறும்போது மன்மோகன் இதுகுறித்து ஏன் பேச மறுக்கிறார்?

## ம.தி.மு.க. நாஞ்சில் சம்பத் கேள்வி



நாகர்கோவில், மார்ச் 02

இலங்கையில் ஓர் இனம் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால் டில்லியில் இருப்பவர்கள் தமிழினத்தை மறந்து, ஆயுதங்களை கீழே போடுங்கள் எனக் கூறிவிட்டு, இலங்கை இராணுவத்துக்கு நவீன ஆயுதங்களையும் இராணுவப் பயிற்சிகளையும் வழங்குகிறார்கள். ஆயுதத்தைக் கீழே போட்டு விட்டால் அடுத்த விநாடியே அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு விடுவார்கள்.

- இவ்வாறு ம.தி.மு.கவின் மாநில கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத் ஆவேசமாகக் குமுறினார் என தமிழக இணையங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈழத் தமிழர் இனப்படுகொலையைக் கண்டித்து ம.தி.மு.க. சார்பில் அரசியல் விளக்க பொதுக் கூட்டம் நாகர்கோவிலில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தனித் தமிழ் ஈழத்தை தவிர வேறொன்றும் சரியான தீர்வாக இருக்க முடியாது. உலக நாடுகள் அனைத்தும் போரை நிறுத்துங்கள் என்று வலியுறுத்துகின்றன. ஆனால் இந்தியா மட்டும் நேரடியாகப் போரை நிறுத்துமாறு சொல்லவில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பிரதமர் மன்மோகன்சிங் பேசவே மறுக்கிறார். போரை நிறுத்துமாறு மத்திய அரசை நிர்ப்பந்திக்க கருணாநிதியால் முடியவில்லை. ஆட்சியைக் கவிழ்க்க சதி நடப்பதாக அடிக்கடி புலம்புகிறார். நாங்களோ (ம.தி.மு.க.), அல்லது பா.ம.க., கம்யூனிஸ்டுகள் நினைத்தாலோ தி.மு.க. அரசைக் கவிழ்க்க முடியாது. காங்கிரஸ் நினைத்தால் மட்டும்தான் முடியும். அவர்கள் அப்படி நினைப்பதாகத் தெரியவில்லை.

காங்கிரஸ்காரர்களின் ஒரே நோக்கம் பிரபாகரனைப் பிடிக்க வேண்டும் என்ப[illegible] இலங்கைத் தமிழர்களைப் பற்றி [illegible] வில்லை.

மகாத்மா காந்தியை [illegible]ஸ்.எஸ். இயக்[illegible]தை சேர்ந்த கோட்[illegible]டுக் கொன்றவுடன் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திற்கு தடை விதிக்கப்பட்டது. அதன் பின்னர் ஒருவன் செய்த தவறுக்காக ஒரு இயக்கத்திற்கு தடை விதிப்பது சரியல்ல என நினைத்த அப்போதைய காங்கிரஸ் உள்துறை அமைச்சர் வல்லபாய்பட்டேல், ஆர்.எஸ்.எஸ். மீதான தடையை நீக்க அரும்பாடுபட்டார். அதே போல் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க இன்றைய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் முயற்சி எடுப்பாரா?

இலங்கையில் ஒரு இனம் அழிக்கப்பட்டு கொண்டிருக்கிறது. ஆனால் டில்லியில் இருப்பவர்கள் தமிழினத்தை மறந்து ஆயுதங்களை கீழே போடுங்கள் எனக் கூறிவிட்டு இலங்கை இராணுவத்துக்கு நவீன ஆயுதங்களையும் இராணுவப் பயிற்சிகளையும் வழங்குகிறார்கள். ஆயுதத்தைக் கீழே போட்டு விட்டால் அடுத்த விநாடியே அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு விடுவார்கள்.

விரைவில் இலங்கையில் அமைதி பிறக்கும். அதனால் தமிழ் மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ வழி பிறக்கும். தமிழரின் சம உரிமைப் போர் வெல்லட்டும் - என்றார்.



வைகோ தலைமையில் பிராணாப் முகர்ஜிக்கு எதிராக நேற்றுமுன்தினம் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்தபோது எடுக்கப்பட்ட படத்தையும், பின்னர் வைகோவை கைதுசெய்து வானில் ஏற்றிச் செல்லப்படும்போது எடுக்கப்பட்ட படத்தையும் காணலாம்.

# இலங்கைத் த[illegible]ிழர் பிரச்சினையால் தி.மு.க.-காங். உறவு பாதிக்காது

## கனிமொழி நம்பிக்கை

கோழிக்கோடு, மார்ச்02

ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்குமாறு மத்திய அரசை தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வருவதால் இரு கட்சிகளுக்கும் இடையேயான உறவில் எந்தப் பாதிப்பும் வராது - என்று மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கோழிக்கோடு தமிழ்ச் சங்கத்தின் பொன் விழா ஆண்டு நிகழ்ச்சியில் பங்கேற்க கோழிக்கோட்டுக்கு கடந்த சனிக்கிழமை வந்த அவர் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே இதைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசை தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தும். அங்கு தொடரும் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே தி.மு.கவின் முக்கிய கோரிக்கை.



இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டு வருகின்றன என்று பல்வேறு தொண்டு நிறுவனங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. அங்கு மனித உரிமைகள் மீறப்படுவதைத் தடுத்துநிறுத்த ஐ.நா. சபை மூலம் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

# என்னைச் சிறையில் அடைத்தமைக்காக எவ்வித போராட்டங்களிலும் ஈடுபடாதீர்!

## தொண்டர்களுக்கு வைகோ வேண்டுகோள்

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தன்னை சிறையில் அடைத் தமையைக் கண்டிக்கும் வகையில் எந்தவிதமான போராட்டங்களிலும் கட்சியினர் ஈடுபட வேண்டாம் - என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு எதிராக தூத்துக்குடியில் நேற்றுமுன்தினம் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்திய வைகோ, 2 எம்.எல்.ஏ.க்கள் உட்பட 195 பேரை பொலிஸார் கைது செய்தனர். பின்னர் அவர்கள் அனைவரையும் நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

பாளையங்கோட்டை சிறையில் நேற்று அதிகாலை அடைக்கப்படுவதற்கு முன்பாக அவர் வெளியிட்ட அறிக்கையின் வருமாறு -

மத்தியிலும், மாநிலத்திலும் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டு தனது குடும்பத்தினரை கோடீஸ்வரர்கள் ஆக்கியும், ஆட்சி அதிகார சுயநலவெறிக்கு ஆளாக்கியும், தமிழக மக்களை வஞ்சித்து வருகின்ற கருணாநிதி இலங்கைத் தமிழர்களைப் படுகொலை செய்யும் சிங்கள அரசுக்கு ஆயுதம் உள்ளிட்ட அனைத்து உதவிகளையும் வழங்கிடும் காங்கிரஸ் சதித்திட்டத்தின் பங்குதாரராக ஆகிவிட்டார்.

காங்கிரஸ் கட்சியின் ஆதரவை இழந்துவிட்டால் தமிழகத்தில் ஆட்சியை பறிகொடுக்கும் நிலை ஏற்படும் என்று பயந்து அந்த காங்கிரஸ் கட்சிக்கு பாதபூஜை செய்வதற்கு தயாராகிவிட்டதால் காங்கிரஸ் மேலிடத்தை திருப்திப்படுத்தவதற்காக என்னையும், தோழர்களையும் கைது செய்து சிறையில் அடைக்கச் செய்து விட்டார்.

நாடாளுமன்றத் தேர்தல் நமது கதவைத் தட்டுகிறது. ஈழத்தமிழர்களுக்கு மன்னிக்க இயலாத துரோகத்தைச் செய்த காங்கிரஸையும், தி.மு.கவையும் படுதோல்வி அடையச் செய்யவும், நாம் அங்கம் வகிக்கும் அ.தி.மு.க. கூட்டணியை வெற்றி பெறச் செய்யவுமான கடமையும் நம் கண் முன்னால் காத்திருக்கிறது.

எனவே நானும், தோழர்களும் பிணையில் வெளிவர முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ம.தி.மு.கவினர் என்னைச் சிறையில் அடைத்ததை கண்டிக்கும் வகையில் எவ்வித போராட்டத்தில் ஈடுபட்டாலும் கருணாநிதி அடக்குமுறைகளை ஏவுவார். அதற்கு இடம் கொடுக்காத வகையில், எவ்விதமான போராட்டங்களிலும் ஈடுபட வேண்டாம் - என்றுள்ளது.

# உயர்நீதிமன்ற வன்முறைச் சம்பவம்: இரு தரப்பிடமும் நீதிபதி விசாரணை

சென்னை, மார்ச்.2

சென்னை உயர் நீதிமன்ற வன்முறைச் சம்பவத்தை விசாரிப்பதற்காக உச்சநீதிமன்றம் நியமித்துள்ள விசாரணைக் குழுவின் தலைவர் நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா, விசாரணையை நேற்றுமுன்தினம் தொடங்கினார். தலைமைச் செயலாளர், பொலிஸ் டி.ஜி.பி., கமிஷனர், சட்டத்தரணிகள் சங்க தலைவர்கள் ஆகியோர் நேரில் ஆஜராகி விளக்கம் அளித்தனர்.

கடந்த 19ஆம் திகதி சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள், பொலிஸாருக்கு இடையே நடைபெற்ற கல்வீச்சு - பொலிஸ் தடியடியில் இரு தரப்பிலும் பலர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு காரணமான பொலிஸ் அதிகாரிகளை பணிநீக்கம் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் சட்டத்தரணிகள் நீதிமன்றைப் புறக்கணித்துப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக உச்ச நீதிமன்றில் பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டு உள்ளன. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடந்த சம்பவம் பற்றி விசாரிப்பதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா தலைமையில் விசாரணை கமிஷன் அமைத்து உத்தரவிட்டனர்.

இதைத் தொடர்ந்து விசாரணை நடத்துவதற்காக விசாரணை கமிஷன் தலைவர் நீதிபதி ஸ்ரீகிருஷ்ணா சென்னை வந்தார். சென்னை கிரீன்வேஸ் வீதியில் உள்ள ஜுடிசியல் அக்கடமியில் உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கங்களின் தலைவர்கள், நிர்வாகிகள், அரசு தலைமைச் செயலாளர், உள்துறை செயலாளர், உயர் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரிடம் நேற்றுமுன்தினம் அவர் விசாரணை நடத்தினார். காலை 10 மணிக்கு விசாரணை தொடங்கியது.

# முகர்ஜிக்கு எதிராகப் போராட்டம் நடத்துவதா? வைகோவுக்கு கருணாநிதி கடும் கண்டனம்

சென்னை, மார்ச்.2

வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜிக்கு எதிராகப் போராட்டம் நடத்திய ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோவுக்கு முதல்வர் கருணாநிதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

தூத்துக்குடி அனல் மின் நிலைய அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்ட அமைச்சர் பிரணாப் முகர்ஜி பேசுகையில் -

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்துக்கு முன்வந்து இருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த வாய்ப்பை பயன்படுத்தி, இலங்கை அரசும் போர் நிறுத்தம் செய்து மக்களை பாதுகாப்பான இடத்துக்கு கொண்டு வர வேண்டும். இதற்கு விடுதலைப்புலிகளின் ஒத்துழைப்பும் தேவை.

இலங்கையின் வ[illegible]க்கு பகுதியில் இடம் பெயர்ந்துள்ள மக்களுக்கு மருத்துவ உதவிகளைச் செய்வதற்காக இந்திய அரசு மருத்துவ குழு மற்றும் மருந்துகளை அனுப்பவும் ஏற்பாடு செய்து வருகிறது.

அடுத்து அரசியல் தீர்வாக இலங்கையில் அனைத்து மாகாணங்களுக்கும் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து மக்களுக்கும் சம உரிமை கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அந்த அதிகார பகிர்வு இருக்க வேண்டும்.

குறிப்பாக தமிழ் மக்களுக்கு இலங்கையின் சட்டத்துக்கு உட்பட்டு இறையாண்மை பாதிக்காத அளவில் அதிகார பகிர்வு இருக்க வேண்டும். இலங்கையில் உள்ள அனைத்து தரப்பு மக்களின் நலனுக்காக இந்தியாவின் இந்த பொறுப்பான வேண்டுகோளை இலங்கை அரசும், மற்றவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன் - என்று பிரணாப் கூறியமை எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது.

இலங்கைத் தமிழர்களை வாழ வைப்பதற்கும் அவர்களின் உரிமைகளை இலங்கையில் நிலை நாட்டுவதற்கும், தமிழகத்தில் அனைத்துக் கட்சிகள் சார்பிலும் அரசு சார்பிலும் எடுத்த முயற்சிகளுக்கும் எரியுண்டு மாண்ட இனமான ஏந்தல்களின் தியாகத்துக்கும் தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கும் நேரில் சந்தித்து தமிழகத் தலைவர்கள் வலியுறுத்திய முறையீட்டுக்கும் பலன் கிடைத்தது என்பது போல இந்தியப் பேரரசின் போர் நிறுத்த வலியுறுத்தல், எனக்கு மருத்துவ சிகிச்சை வெற்றியைப் போன்ற மன ஆறுதலை அளிக்கிறது.



மத்திய அரசுடன் தீர்மானங்கள் மூலமாகவும் சந்திப்புகள் மூலமாகவும் மகஜர்கள் மூலமாகவும் நேரடியாகவும் ஒல்லும் வகையெல்லாம் தொடர்பு கொண்டு செய்த முயற்சிகளினால் இன்று -

அனல் மின் நிலைய விழாவில் பிரணாப்பின் பேச்சு, அவரது அறிக்கை இவை அனைத்தும் நம் நெஞ்சத்து அனலைத் தணித்து ஆறுதல் பூங்காற்றாய் வீசச் செய்திருக்கிறது. ஆனால் இந்த நேரத்தில்தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையை மாசாக்கி, மண்ணாக்கி, காசாக்கி, அரசியலில் நாணயத்தைத் தூசாக்கி வாழும் சில வக்கிர மூளையினர் தாங்கள் வகித்த பொறுப்புகளுக்கு தகுதியற்றோர் என்று காட்டிக்கொள்ள பிரணாப் வருகையை எதிர்த்து மறியல் ஆர்ப்பாட்டம் நடத்தியதோடு நாகரிகக்கேடாக நடந்து கொண்டு நமது மத்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப்பின் படங்களுக்கும் தீயிட்டுப்பார்த்து திருப்தி அடைந்திருக்கின்றனர்.

அவர்கள் இந்தியத் தலைவர்களின் படங்களுக்கு தீயிட்டு கொளுத்துகிறார்கள் என்றால் தேசப் பாதுகாப்புக்கான சட்டரீதியான நடவடிக்கைகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்குமா?

முடியாது, முடியாது, முடியவே முடியாது!

இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரமும் அங்கே அமைதியும் கிடைத்து அவர்கள் வாழ்ந்திட நாம் தமிழ் உணர்வோடு பணி புரிகிறோம். அதில் கிடைக்கும் வெற்றிக்காகக் காத்து நிற்கிறோம். மத்திய அரசுடன் இணைந்து இலங்கையில் போர் நிறுத்தம் இப்போதே கேட்கிறோம். ஆம் இந்த உலகில் பெரிய தேசமாம் இந்திய நாடு கேட்கிறது. பிராணாப் முகர்ஜி கேட்டுள்ளார். இந்திய அரசு கேட்கிறது. நாமும் கேட்கிறோம் - என்றள்ளது.

# 'ஸ்லம்டாக் மில்லின'ரில் நடித்த சிறுவனை அறைந்தார் தந்தை!

மும்பை, மார்ச்.02

ஒஸ்கார் விருதுகளைப் பெற்ற 'ஸ்லம்டாக் மில்லினர்' படத்தில் நடித்த சிறுவன் பேட்டி கொடுக்க மறுத்ததால், பத்திரிகையாளர்கள் முன்னிலையில் சிறுவனை அவனது தந்தை அறைந்தார். இச்சம்பவம் குறித்த விவரம் வருமாறு -

ஒஸ்கார் விருதுகளை அள்ளிக் குவித்த 'ஸ்லம்டாக் மில்லினர்' படத்தில் கதாநாயகனின் குழந்தைப் பருவ வேடத்தில் அசாருதீன் முகமது என்ற சிறுவன் நடித்தான். மும்பையில் பாந்தாரா அருகே உள்ள குடிசை பகுதியில் அவன் வசிக்கிறான். ஒஸ்கார் விருது விழாவில் பங்கேற்று விட்டு, கடந்த வியாழக்கிழமை இந்தியா திரும்பினான்.

உலகமே அவனைக் கொண்டாடியதை பார்த்த அவனது தந்தை முகமது இஸ்மாயில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மேளதாள வரவேற்புடன் தனது வீட்டுக்கு திரும்பிய அசாருதீனை அனைவரிடமும் காண்பித்து பெருமிதம் கொள்ள முகமது இஸ்மாயில் நினைத்தார். அதற்காக, சில பத்திரிகையாளர்கள் மற்றும் அக்கம்பக்கம் உள்ளவர்களை தனது குடிசைக்கு நேற்றுமுன்தினம் அழைத்திருந்தார்.

அவர்கள் அனைவரும் வந்ததும் அசாருதீனை வெளியே வருமாறு கூறினார். ஆனால் களைப்பாக இருக்கிறது எனவும், தலை வலிக்கிறது எனவும் சிறுவன் தெரிவித்து விட்டான். இதனால் ஆத்திரம் அடைந்த அசாருதீனுடைய தந்தை முகமது இஸ்மாயில் செய்தியாளர்கள் முன்னிலையில் அவனை அறைந்தார். இது செய்தியாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அடிவாங்கியதால் அழுத சிறுவன் அசாருதீனை தந்தை இஸ்மாயில் சமாதானம் செய்தார். அவர் கூறுகையில் -

அசாருதீன் பேட்டி தருவான் என்று செய்தியாளர் ஒருவருக்கு உறுதியளித்திருந்தேன். களைப்பு காரணமாக பேட்டிக்கு அசாருதீன் மறுத்ததால் எனக்கு தர்மசங்கடமாகிவிட்டது. இதனால், அவனை லேசாக அடித்தேன். அசாருதீன் என் மகன். அவனை அடித்ததற்காக வருத்தப்படுகிறேன் - என்றார்.

என்னை அடித்தாலும் அப்பாவுக்கு என் மீது அன்பு உண்[illegible] கூறினான் அ[illegible].

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாதரனை தொலைபேசி மூலம் அழைத்திருந்தால் அவர் சென்றிருப்பார்; அசிங்கமான முறையில் நடத்தப்பட்டது வெட்கம்

## தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் கண்டனம்

கொழும்பு,மார்ச் 2

தேசிய தமிழ் தினசரி 'சுடர் ஒளி' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் வித்தியாதரனின் முறை தவறிய கைதை தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டிக்கின்றது. பத்திரிகையாளர்கள் ஒரு தேசத்தின் காவலர்கள். பல சிரமங்களுக்கு மத்தியில் சில சந்தர்ப்பங்களில் தம் உயிரைக் கூட பணயம் வைத்து சேகரிக்கும் செய்திகளை பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய கடமை அவர்களுக்குண்டு.

-இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி வெளியிட்டுள்ள கண்டனச் செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை பின்வருமாறு:-

பொலிஸ் துறையினர் சமாதானத்தை நிலைநாட்டும் அதிகாரிகள் என்ற கோதாவில் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் நிருபர்களுக்கும் பாதுகாப்பும் உதவியும் அளிப்பதோடு அவர்களின் கடமைக்கு எதுவித இடையூறும் செய்யாதிருக்க கடமைப்பட்டவர்களாவர். அவர்கள் எழுதுவது அத்தனையும் எமக்கு ஏற்புடையதாக இல்லாமல் இருக்கலாம். இருப்பினும், உண்மையை வெளிப்படுத்தி பாரபட்சமற்ற செய்திகளை பிரசுரிப்பது வரவேற்கத்தக்கதாகும். பத்திரிகை ஆசிரியர் ஒருவருக்கு தான் சேகரிக்கும் செய்தி வந்த வழிபற்றிய இரகசியத்தை காப்பாற்றவேண்டிய கடமை உண்டு என்பதை நாம் மறக்கக் கூடாது.

வித்தியாதரனுக்கு ஏற்பட்டதுபோன்ற நிலைமை இனிமேல் வேறு ஒருவருக்கு ஏற்படக்கூடாது. வித்தியாதரன் ஓர் கனவான் மட்டுமல்ல, ஓர் தேசிய தமிழ் தினசரியின் பிரதம ஆசிரியர். அவர் தான் கைது செய்யப்படுவதை வலிந்து தடுத்திருந்தாலோ அல்லது தப்பிச்செல்ல முயற்சித்திருந்தாலோ சிறிதளவு பலாத்காரம் உபயோகித்திருக்கலாம் என்று கூடக் கூறலாம். வித்தியாதரன் தமது அலுவலகத்தில் பெருமளவு நேரத்தை செலவிடுபவர். ஒரு தொலைபேசி அழைப்பு மூலம் அவரை வரவழைத்திருந்தால், அவர் அழைப்பிற்கமைய செயற்பட்டிருப்பார். அவர் அசிங்கமான முறையில் நடத்தப்பட்டது வெட்கப்படவேண்டிய விடயமாகும்.

எமது நாட்டு பொலிஸார் ஒரு பத்திரிகை ஆசிரியரை இம்முறையில் நடத்தியிருப்பார்கள் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. இலங்கை பொலிஸ் துறையினருக்கு இந்தளவு ஓர் அவமானத்தை ஏற்படுத்த எவரையும் அனுமதிக்க முடியாது. சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்அதிகாரிகளுக்கு அவர் தனது நெருங்கிய உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டிருந்தவேளை இவ்வாறு நடந்திருந்தால் இத்தகைய கைதை அவரால் நியாயப்படுத்தவே முடியாது. தனது இறுதி யாத்திரிகைக்கு தயாராகிக் கொண்டிருக்கும் ஓர் ஆத்மாவிற்கு இழைக்கப்பட்ட பெரும் அவமானமாகவே அவரின் உறவினர்கள் கருதுவார்கள். அது நியாயமானதாகவே எனக்கும் தோன்றுகின்றது - என்றுள்ளது.




# காணாமல்போதல் சம்பவங்கள் இலங்கையில் மிகவும் அதிகரிப்பு

## ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் இன்று அறிக்கை

கொழும்பு, மார்ச் 2

இலங்கையில் காணமற்போதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறித்து ஐக்கிய நாடுகளின் பலவந்தமாக காணாமற்போதல் தொடர்பான செயற்குழு ஆழ்ந்த கவலை வெளியிட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை ஆரம்பமாவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கவுன்ஸிலின் 10ஆவது வைபவத் தொடரில் செயற்குழு சமர்பிக்கவுள்ள அறிக்கையிலே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து இது தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்குமாறு அரசை மீண்டும் கோரியுள்ள பிரஸ்தாப செயற்குழு மேலும் தெரிவித்தவை வருமாறு :-

இலங்கையில் பலவந்தமாக காணாமற்போதல் சம்பவங்கள் அதிகரிக்கின்றமை குறித்து செயற்குழு தொடர்ந்தும் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. 2008இல் காணாமற்போதல் தொடர்பான 212 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

நாட்டில் வேறு பல காணாமற்போதல் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம் என கவலை கொண்டுள்ள செயற்குழு, இது குறித்து பலர் அச்சம் காரணமாக முறையிடுவதில்லையெனக் கருதுகின்றது.

ஐக்கிய நாடுகளின் செயற்குழு இந்த விடயத்தில் அரசுக்குள்ள கடப்பாடுகளை ஞாபகப்படுத்த விரும்புகின்றது.

**திருமலையிலேயே அதிகம்**

நான்கு பெண்கள் உட்பட 43 பேர் காணாமற்போன சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்யுமாறு ஐ.நா.சபை அரசை கேட்டிருந்தது.

இவற்றில் அனேகமானவை திருகோணமலையில் இடம் பெற்றிருந்தன. பாதுகாப்புப் படையினர் மற்றும் அரசின் உதவியுடன் இயங்கும் துணை இராணுவ குழுக்கள் இதற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2006 முதல் 2008 வரை இடம்றபெற்ற 169 புதிய சம்பவங்கள் தொடர்பாக செயற்குழு அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தது.

இது தவிர ஜூலை 15-செப்ரெம்பர் 12, ஒக்ரோபர் ஆகிய தினங்களில் மனித உரிமை ஆர்வலர்கள் விசாரணை செய்யப்படுவது அவர்களுக்கு எதிரான பிரசாரம் உட்பட பல விடயங்கள் பற்றி சுட்டிக்காட்டி செயற் குழு இலங்கை அரசுக்கு கடிதம் எழுதியிருந்தது. எனினும் ஒரு கடிதம் தொடர்பாக மாத்திரம் அரசு பதிலளித்தது.

பலவந்தமாக காணாமற்போதல் தொடர்பான ஐ.நாவின் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் அரசின் கவனத்திற்கு 12,675 சம்பவங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

இவற்றில் 5,727 சம்பவங்கள் குறித்து அரசு இன்னமும் பதிலளிக்கவில்லை - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## கிழக்குப் பல்கலை மருத்துவபீடம் தவிர்ந்த ஏனைய பீடங்களின் விரிவுரைகள் நிறுத்தம்

கொழும்பு,மார்ச்2

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய பீடங்களின் விரிவுரைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வந்தாறுமூலையிலுள்ள பல்கலைக்கழக விடுதியில் முல்லைத்தீவைச் சேர்ந்த தனபாலசிங்கம் நிருஜா (வயது - 23) என்ற மாணவி தற்கொலை செய்து கொண்டதை அடுத்து, மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட பதற்ற நிலையினாலேயே பல்கலைக்கழக நிர்வாகம் இந்த முடிவை எடுத்தது.

கலை, வர்த்தக, விஞ்ஞான மற்றும் விவசாய பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் விடுதிகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இந்தப் பீடங்களில் உள்ள வட மாகாணத்தைச் சேர்ந்த 65 மாணவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களை, அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்க செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவி கோரப்பட்டுள்ளது என்று துணைவேந்தர் என்.பத்மநாதன் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தாலும் மாணவர்களில் அனேகமானவர்கள் தங்களது சொந்த இடங்களுக்குச் செல்லவே விரும்புகின்றனர். கலைப்பீடத்தின் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க குறைந்தது ஒரு மாத காலமாவது தேவைப்படும். ஏனைய பீடங்களில் கல்வி நடவடிக்கை ஆரம்பமாக சுமார் 2 வாரங்களாவது செல்லும் என்று துணைவேந்தர் மேலும் தெரிவித்தார்.

(அ-சி)

## புதிய ஜனநாயகக் கட்சியின் கண்டனம்

'சுடர் ஒளி', 'உதயன்' பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் ந. வித்தியாதரன் கடத்தப்பட்டு கைதுசெய்யப்பட்ட செயல் ஊடக சுதந்திரத்தை நசுக்கும் தொடர்ச்சியான நடவடிக்கைகளின் ஓர் அம்சமேயாகும். கருத்துக் கூறும் உரிமையையும் ஊடக சுதந்திரத்தையும் மதிக்கும் எவரும் இவ்வாறான முறையற்ற கைது நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர் மீது குற்றச்சாட்டு இருப்பின் விசாரணையை விரைவுபடுத்தி அவரை விடுதலை செய்ய வேண்டும் என்பதையே புதிய ஜனநாயகக்கட்சி வற்புறுத்துகிறது.

- இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழு சார்பில் அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல். வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

வித்தியாதரன் இரண்டு தமிழ் நாளிழ்களின் பிரதம ஆசிரியராக இருந்து வருகிறார். அப்பத்திரிகைகளின் நோக்கும், போக்கும் ஆளும் அரசினால் உள்வாங்கிக் கொள்ள முடியாதவையாக இருக்கலாம். ஆனால் அரசமைப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கருத்து வெளியிடும் ஜனநாயக உரிமை, ஊடக சுதந்திரம் என்பன மறுக்கப்படுவதை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது.

சந்தர்ப்பம் பார்த்திருந்து பழிவாங்கும் நோக்குடனேயே வித்தியாதரன் கைதுசெய்யப்பட்டிருக்கிறார் என்றே கொள்ள வேண்டியுள்ளது. ஏற்கனவே தமிழ், ஆங்கில, சிங்கள ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடம்பெற்று வந்த சம்பவங்களை வைத்துப் பார்க்கும்போது அவற்றின் தொடர்ச்சியையே வித்தியாதரன் கைதிலும் காணமுடிகின்றது. ஆதலால் அவர் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும் என எமது புதிய ஜனநாயக கட்சி வற்புறுத்துகின்றது - என்றுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி

**எமது சக ஆசிரியை திருமதி ந.சபாநாயகம்**
**அவர்களின் அன்புக் கணவர்**

**செல்வநாயகம் சபாநாயகம்**

**அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை,
அல்வாய்.

## மரண அறிவித்தல்

### *வேலுப்பிள்ளை கங்காதரன்*

(ஓய்வுபெற்ற டாக்டர், புத்தளம் அரசினர் வைத்தியசாலை)

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் தற்போது கொத்தாந்தீவு, புத்தளத்தில் வசித்தவருமான வேலுப்பிள்ளை கங்காதரன் நேற்று (01.03.2009) ஞாயிற்றுகிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சுவாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சந்திராதேவியின் அன்புக் கணவரும் பிரசன்னா, நிமலினி, கருணி, லவசுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் முத்துக்குமாரசாமி, காலஞ்சென்ற சின்னம்மா மற்றும் நாகபூசணியம்மா, நாகேந்திரன், கண்ணகாதேவி, நடேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் திலகநாதன், சறோஜினிதேவி, கருணைநாதன், சகுந்தலாதேவி, குலேந்திரநாதன், அம்பிகாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆஸ்பத்திரியடி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

தகவல்:
க.பிரசன்னா *(மகன்)*,
மா.கருணைநாதன் *(மைத்துனர்)*.

## மரண அறிவித்தல்

### *திருமதி சின்னம்மா இராஜசிங்கம்*

காரைநகர், சந்தம்புளியடியை வதிவிடமாகக் கொண்ட திருமதி சின்னம்மா இராஜசிங்கம் நேற்று (01.03.2009) ஞாயிற்றுக் கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சின்னையா இராஜசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா வானவாஸ் - ஆச்சிமுத்து தம்பதியரின் மருமகளும் சுப்பிரமணியம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அருமைச் சகோதரியும் நடனசிங்கம், காலஞ்சென்ற திருபானந்தநாயகி, லோபாமுத்திரை, திருப்புகலூர்சிங்கம் (கிராம அலுவலர்), திருப்புலியூர்சிங்கம்(முகாமைத்துவ உதவியாளர்), சுமத்திராதேவி (ஆசிரியை), சந்திராதேவி, ரேவதிதேவி (பிரதம லிகிதர்), புவிராஜசிங்கம், நடனமலர் (உதவி விவசாயப் பணிப்பாளர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற யோகம்மா மற்றும் தியாகலிங்கம், அருட்சோதி, சறோஜினிதேவி, லலிதாதேவி, பேரின்பராசா, குமாரவேல், பாமினி (ஆசிரியை), விஜயன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.03.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தம்புளியடி,
காரைநகர்.

தகவல்:
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இடம்பெயர்ந்தோர், காணாமல் போனோர் விவகாரம் இன்றைய மனித உரிமை கூட்டத் தொடரில்

கொழும்பு, மார்ச் 02

ஜெனிவாவில் இன்று ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 10ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் தற்போதைய நிலை குறித்துப் பல முக்கிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன் கடும் விவாதமும் நடைபெறவுள்ளது.

இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் நிலை, காணாமற்போனோர் தொடர்பான மற்றும் மனித உரிமை ஆர்வலர்களின் நிலை குறித்த அறிக்கைகளைப் பல்வேறு பிரதிநிதிகள் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இடம்பெயர்ந்தோரின் மனித உரிமைகளுக்கான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி வோல்டெர் கலின் இலங்கையில் உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் குறித்த அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளார்.

இதேவேளை, பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்படுவோர் தொடர்பான ஐக்கிய நாடுகளின் செயற்குழுவும் இலங்கை குறித்த தனது அறிக்கையை வெளியிடவுள்ளது.

மனித உரிமை ஆர்வலர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் விசேட அறிக்கையாளரும் இலங்கை குறித்து தெரிவிக்கவுள்ளார்.

வன்னி மனிதாபிமான நிலை குறித்துக் கவலை

தொடரும் மோதல்கள் காரணமாக வன்னியில் காணப்படும் மனிதாபிமான சூழல் குறித்து உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரின் மனித உரிமைகள் தொடர்பான விசேட பிரதிநிதி வோல்டெர் கலின் தனது அறிக்கையில் கவலை வெளியிடவுள்ளார்.

குறிப்பாக வன்னியில் மனிதாபிமானப் பணியாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதி வழங்கப்படுகின்றமை குறித்து அவர் தமது அறிக்கையில் கடும் ஏமாற்றம் வெளியிடுவார் என்று தெரிகிறது.

தொடரும் இராணுவ நடவடிக்கைகளின் மத்தியில் இரு தரப்பும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களைக் கடுமையாகக் கடைப்பிடிக்க வேணடுமென அவர் வேண்டுகோள் விடுக்கவுள்ளார்.

பொதுமக்களுக்கு அவசியமான மனிதாபிமான உதவிகள் தடையின்றிச் செல்வதற்கு அனுமதிக்குமாறும் மனிதாபிமானப் பணியாளர்களை மதிக்குமாறும் பொதுமக்களைப் பாதுகாப்பாக வெளியேற இடமளிக்குமாறும் அவர் கோரவுள்ளார்.

இதேவேளை, மனித உரிமைகள் கவுன்ஸிலின் 10 ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில், மனித உரிமைப் பாதுகாவல்களுக்கான விசேட அறிக்கையாளர் மார்கிரெட் செகாக், மனித உரிமைப் பணியாளர்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் நாடுகளில் இலங்கையுமொன்று எனச் சுட்டிக்காட்டவுள்ளார்.

மனித உரிமை ஆர்வலர்களை அச்சுறுத்துதல், மிரட்டுதல், படுகொலைகள் போன்றவற்றுக்கு உள்ளாகும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளது எனவும் அவர் தெரிவிக்கவுள்ளார்.

(அ-சி)

## போர் நிறுத்தம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாத இயக்கம். எந்த ஒரு தீவிரவாத இயக்கத்திடமும் எங்களுக்கு அனுதாபம் கிடையாது. ஆனால், அப்பாவிப் பொதுமக்கள் பலியாகாமல் தடுப்பதற்காக, விடுதலைப் புலிகள் அளித்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்தி இலங்கை அரசும் போரை நிறுத்த முன்வர வேண்டும். இராணுவ வெற்றியின் மூலம் பிரச்சினைக்கு முழுமையான தீர்வுகாண முடியாது.

இலங்கையின் வடக்குப் பகுதியில் போரில் காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக தற்காலிக மருத்துவமனை அமைக்க வேண்டும்.

இலங்கையில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் நலனுக்காக இந்தியாவின் இந்த பொறுப்பான வேண்டுகோளை இலங்கை அரசும், மற்றவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன் - என்றார். (அ-சி)

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரு நாள் விஜயத்தின்போது ஜனாதிபதியுடன் அவரது பாரியார் திருமதி சிரந்தி ராஜபக்ஷவும் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இன்று மாலை ராஷ்ரபதி இல்லத்திற்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அங்கு சிறப்பான வரவேற்பொன்று அளிக்கப்படவுள்ளது என்றும் அவர் நேபாள ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் மனிதாபிமான நெருக்கடிகள் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

எனினும் புலிகளுடன் போர் நிறுத்தம் செய்யுமாறு இந்தியா கோருவதை ஏற்க முடியாது என்று இலங்கை அரசு உறுதியாகத் தெரிவித்து விட்டது.

இதேவேளை, சமீபத்தைய இந்திய அரசுத் தரப்பின் கருத்துகள் இலங்கை குறித்த அதன் அணுகுமுறையில் மாற்றம் ஏற்படுவதைப் புலப்படுத்துகின்றன என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் எவ்வாறு பேச்சுகளை மேற்கொள்ள வேண்டுமென புதுடில்லி தெரிவிக்காத போதிலும் அதன் அணுகுமுறை மாற்றமே முக்கியமான விடயம் என அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## உதயன் ஆசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விசாரணைகள் முடிவடையும் பட்சத்தில்,பெரும்பாலும் ஆசிரியர் வித்தியாதரன் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படக்கூடும் என்று தகவல்கள் தெரிவித்தன. (அ-சி)

## வித்தியாதரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ஊடகவியலாளர்களைக் கொல்லாதே', ஊடகவியலாளரைத் தாக்காதே, போன்ற கோஷங்களை எழுப்பிய அவர்கள் வித்தியாதரனின் பெரிய அளவிலான புகைப்படங்களை ஏந்தியிருந்ததுடன் அவரை உடனடியாக விடுவிக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

வித்தியாதரனை கைது செய்தால் பத்திரிகை உலகம் அதனை மௌனமாக சகித்துக் கொண்டிருக்கும் என்று சிங்கள ஆட்சியாளர்கள் நினைக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு ஒன்றை மட்டும் பத்திரிகையாளர்கள் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றோம். இன வெறிப்போரை நிறுத்துங்கள். வித்தியாதரனை விடுதலை செய்யுங்கள். பத்திரிகையாளர்கள் மீதான இந்த அடக்குமுறைப் போக்கு தொடரும் என்றால் மிக விரைவில் ஒட்டு மொத்த பத்திரிகையாளர்களையும் திரட்டி சென்னையில் தொடர் போராட்டங்களை அறிவிக்க நேரிடும் என்று - சென்னை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் மோகன் அங்கு பேசுகையில் கூறினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆர். மோகன், எஸ். முரளி, ரி. அருள்எழிலன், எம். சிவஞானம், பா. கிருஷ்ணன், துரை. கருணாநிதி, கே. வெங்கட் ரமணன் ஆகியோருடன் தினகரன், ஆனந்தவிகடன், ஜூனியர் விகடன், நக்கீரன், குங்குமம், மக்கள் ரி.வி., தமிழ் ஓசை, ரைம்ஸ் ஒவ் இந்தியா, இந்தியன் எக்பிரஸ், டெக்கான் குரோனிக்கல், த வீக் ஆகிய ஊடகங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களும் பங்கேற்றனர்.

(அ-சி)

## அரை மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் தாம் கண்ட நான்கு சடலங்கள் எரிந்த நிலையில் காணப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் பல இடங்களுக்கும் சென்று வர முடியாத சூழ்நிலை காணப்பட்டதால், இழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் என்று தெரிவித்த அவர் வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு செயலிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சொன்னார்.

நாளாந்தம் 3000க்கும் மேற்பட்டவர்கள் இங்கு சிகிச்சை பெறுவதாகவும் மருந்துகள் போதிய அளவில் இல்லாததால் 5 குளிசைகள் வழங்க வேண்டிய இடத்தில் இரண்டு குளிசைகளே வழங்கப்படுவதாகவும் மக்களுக்குப் போதிய அளவில் போசாக்கான உணவு கிடைக்காமையினாலேயே அதிகளவில் நோய்த் தாக்கம் ஏற்படுகின்றது என்றும் டாக்டர் வரதராஜன் கூறினார். (அ-6)

## புதுக்குடியிருப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடையார்கட்டுக்குளம், புதுக்குடியிருப்பு பகுதிகளில் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற மோதல்களில் இரு தரப்புகளுக்கும் சிறிதளவிலான இழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


நேற்றுமுன்தினம் காலை விசுவமடுப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினருக்கு சிறிய சேதம் ஏற்பட்டுள்ளது என்றும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

அதேவேளை, முல்லைத்தீவுப் பகுதியில் 58 ஆவது படைப்பிரிவு சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிமுதல் மாலை 5 மணிவரை மேற்கொண்ட மோதலில் விடுதலைப் புலிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்தது.

புதுக்குடியிருப்பு நகரைக் கைப்பற்ற 2 படைப்பிரிவுகளும் 2 அதிரடிப்படைகளும் மோதலில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இத்தாக்குதலில் 35 விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். எனினும் இராணுவத்திற்கு ஏற்பட்ட சேதங்களை வெளியிடவில்லை

தாக்குதலின் பின் நடத்தப்பட்ட தேடுதலில் 15 ரி 56 ரகத் துப்பாக்கிகளும் 15,000 டெற்றனேற்றர்களும் தொடர்பாடல் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. 55 ஆவது படைப்பிரிவு சாலைப் பகுதி ஊடாக முன்னேறி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(அ-6)
















இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org